**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 30-10-2012 Issued : 30-10-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஏப்ரல் 9, 2012—தொகுதி 22—எண் 1**

**Monday, the 9th April 2012—Volume 22—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**9–4–2012**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-52 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 53-54 |
| **3. அறிவிப்புகள்—** | |
| (அ) சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் கைபேசி கொண்டுவர அனுமதி மறுப்பு மற்றும் உறுப்பினர்களுக்குக் கைபேசி பாதுகாப்பு மற்றும் Smart card வசதிகள் | 54-55 |
| (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) | 57 |
| (இ) மானியக் கோரிக்கைகள், 2012–2013, முன்மொழிதல் (ஆ.செ.) | 58-59 |

பக்கங்கள்

**4. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** 55-57

திரு. செ.கு. தமிழரசன் 55-56

*திரு. பி.வி. கதிரவன் 56

*டாக்டர் க. கிருஷ்ணசாமி 56

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 56-57

திரு. கே. கோபிநாத் 57

திரு. எம். ஆறுமுகம் 57

**5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 58

**6. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை } 59-236

*திரு. வி.சி. சந்திரகுமார் 60,68,76-95

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 59,68,76,79-87, 90-91,93-94, 96-97, 103-109, 115-116, 120, 124-129, 132-136, 146-151, 156-160, 168-174, 176-235

*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 86





பக்கங்கள்

**6. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*டாக்டர் க. கிருஷ்ணசாமி 67,75,90-91, 155-160

செல்வி கே. பாலபாரதி 96,97,199

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 96

டாக்டர் சி. விஜயபாஸ்கர் 98-104,109-113

*திரு. மு.க. ஸ்டாலின் 104-105,127-128 175,202,203

திரு. துரைமுருகன் 108,176,177

திரு. அர. சக்கரபாணி 113-118,120-126, 130,174

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 116-121

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 122-123

*திரு. வீ.பி. நாகைமாலி 66,74,130-136

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 129-130

*திரு. கடம்பூர் ராஜு 136-145

திரு. வெ. பொன்னுப்பாண்டி 62-63,71,145-150

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 151-155

*திரு. பி.வி. கதிரவன் 160-163

திரு. ஓ.கே. சின்னராஜ் 163-166

திரு. அ. அஸ்லம் பாஷா 65,73-74, 166-168

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் 175

திரு. தங்கம் தென்னரசு 189-190

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 203

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 237-238

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

**3. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

**4.மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

**5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு



**10. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**11. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**12. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**13. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**16. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்

**17. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்*

**18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**20. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**21. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கி்ராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*



**24. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**26. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**27. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

**28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

தகவல் தொழில்நுட்பம்

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்

**30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Revenue** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

**4. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**5. Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**6. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**7. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

**8. Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

**9. Minister for Commercial Taxes & Registration, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes & Registration and Stamp Act, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**10. Minister for Agriculture..** **The Hon. Thiru S. Damodaran:**

Agricultre, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

**11.Minister for Co-operation..** **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



**12. Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

**13. Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

**14. Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

**15. Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

**16. Minister for Rural Industries and Nutritious Noon Meal** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

**17. Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

**18. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

**19. Minister for Industries** .. **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

**20. Minister for Handlooms & Textiles** .. **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

**21. Minister for Khadi and Village Industries ..** **The Hon. Thiru P. Sendur Pandian:**

Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

**22. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**23. Minister for Environment ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Environment and Pollution Control

**24. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**25. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Trnasport, Nationalised Transport, Motor Vehicles Act

**26. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

**27. Minister for School Education and Sports and Youth Welfare ..** **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture

**28. Minister for Information Technology ..** **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



**29. Minister for Information and Special Programme Implementation ..** **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**30. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**31. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**32. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**33. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

*# 28—3—2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

திரு. பா. சுப்பிரமணியன், பி.காம்., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. .. வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. .. மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். .. ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆ.க. .. கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. .. திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. .. பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். .. மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. .. சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. .. சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. .. ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. .. கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். .. வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. .. திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. .. துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கனிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
56. கோகுல இந்திரா, திருமதி எஸ்... அண்ணா நகர்
57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு
65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்

67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி

68. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு

69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி

70. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்

71. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

72. சாமி, திரு. ஆர். .. மேலூர்

73. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி

74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்

75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி

76. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி

77. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்

78. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

79. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்

80. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு

81. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)

82. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)

83. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி

84. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)

85. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு

86. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்

87. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)

88. சுரேஷ்குமார், திரு. டி .. செங்கம் (செ.வ.)



89. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி

90. செங்கோட்டையன், திரு. கே.ஏ... கோபிசெட்டிப்பாளையம்

91. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

92. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்

93. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்

94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்

95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி

96. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு

97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு

99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

100. செழியன், திரு. கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)

101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி

102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்

103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி

104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்

107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி

108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை

109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு

110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

111. தமிழரசன், முனைவர் செகு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)

112. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)

113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)

116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

120. தினகரன், திரு. க. .. சூலூர்

121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்

127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)

130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி

137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு

138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

139. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்

140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி

146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

162. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



178. முத்துச்செல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

| | | |
|---|---|---|
| 200. ராஜா, திரு. பொன். | .. | பொன்னேரி (செ.வ.) |
| 201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. | .. | சிவகாசி |
| 202. ரெங்கசாமி, திரு. எம். | .. | தஞ்சாவூர் |
| 203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 204. ரெத்தினசாமி, திரு. மு. | .. | திருவையாறு |
| 205. லாசர், திரு. ஏ. | .. | பெரியகுளம் (செ.வ.) |
| 206. லிங்கமுத்து, திரு. கு. | .. | குடியாத்தம் (செ.வ.) |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆயிரம் விளக்கு |
| 208. விஜயகாந்த், திரு. | .. | ரிஷிவந்தியம் |
| 209. விஜயதரணி, திருமதி எஸ். | .. | விளவங்கோடு |
| 210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | விராலிமலை |
| 211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. | .. | சங்கரி |
| 212. விஜய், டாக்டர் வி.எஸ். | .. | வேலூர் |
| 213. வீரமணி, திரு. கே.சி. | .. | ஜோலார்பேட்டை |
| 214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. | .. | பெருந்துறை |
| 215. வெங்கடாஜலம், திரு. கோ. | .. | சேலம் மேற்கு |
| 216. வெங்கடேசன், திரு. எல். | .. | திருக்கோவிலூர் |
| 217. வெற்றிவேல், திரு. பு. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். | .. | பழனி |
| 219. வேதாச்சலம், திரு. எஸ். | .. | அம்பத்தூர் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | திருவண்ணாமலை |
| 221. வேலுமணி, திரு. எஸ்.பி. | .. | தொண்டாமுத்தூர் |



| | | |
|---|---|---|
| 222. வைகைச்செல்வன், டாக்டர் | .. | அருப்புக்கோட்டை |
| 223. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 224. வைரமுத்து, திரு. பி.கே. | .. | திருமயம் |
| 225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். | .. | இராமநாதபுரம் |
| 226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 227. ஜானகிராமன், திரு. ஐ. | .. | வானூர் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயசுதா, திருமதி எல். | .. | போளூர் |
| 230. ஜெயபால், திரு. கே.ஏ. | .. | நாகப்பட்டினம் |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஸ்ரீரங்கம் |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | கொளத்தூர் |
| 233. ஹரிதாஸ், டாக்டர் த. | .. | திண்டிவனம் (செ.வ.) |
| 234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் | .. | நியமனம் |
| 235. வெற்றிடம் | .. | புதுக்கோட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043–பங்குனி 27

## 2012 ஏப்ரல் 9, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

எதையும் சொல்லுவதில் வல்லவராகவும், மறதியும் சோர்வும் இல்லாமல் சொல்லுபவராகவும், எதற்கும் பயப்படாதவராகவும் உள்ள சொல்வன்மை மிக்கவரை யாராலும் வெற்றிகொள்ள முடியாது.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண். 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**51—**

### வீட்டுமனைப் பட்டா

***5839—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, பாலப்பட்டி ஊராட்சி, புது அழகாபுரியில் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாலப்பட்டி கிராமத்தில், சர்வே எண் 671/1 மற்றும் சர்வே எண் 671/2பி ஆகியவற்றில் 165 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. அவை உபரி நிலங்களாக இருக்கின்ற காரணத்தினாலே நிலச் சீர்திருத்த இயக்குநர் அவர்கள், அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசு அந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல், மழை, வெள்ளத்தால் வேடசந்தூரிலுள்ள குடகனாறு அணையில் உடைப்பு ஏற்பட்டு, அதில் கைத்தியன்கோட்டை என்ற கிராமம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, உயிரிழப்புகள் ஏற்பட்டன. வீடுகள் அனைத்தும் முழுமையாகச் சேதமடைந்த நிலையில், உயிர் பிழைத்த மக்கள், இரத்தினவேல் செட்டியார் என்பவரிடமிருந்து நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அரசு எடுத்த பாலப்பட்டி கிராமம், சர்வே எண்கள் 662, 669, 671/1, 671/2பி ஆகியவற்றில் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டு, அதன் பின்னர் தொண்டு நிறுவனங்கள் மூலமாக 70 குடியிருப்புகளும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி, கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலப்போக்கில் குடும்பங்கள் குடியிருப்பது நிச்சயமடைந்ததால், சொந்தமாகக் கட்டிக்கொள்ளப்பட்ட 130–க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் சேர்த்து 200–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. அதற்கு புது அழகாபுரி எனப் பெயரிடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் ஒரு துணை சுகாதார நிலையம், அங்கன்வாடி



2012 ஏப்ரல் 9]

மையம், நீர்த்தேக்கத் தொட்டி, திறந்தநிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவை எல்லாம் அரசு சார்பில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. ஆனால், அனைத்து வீடுகளுக்கும் மின்னிணைப்பு, குடும்ப அட்டைகள், வீட்டு வரி இரசீது எல்லாம் வழங்கப்பட்டாலும்கூட, இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வேண்டுவோருக்கு, வேண்டுவன வழங்கக்கூடிய நம்முடைய அம்மாவுடைய ஆட்சியிலே, அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாக்கள் வழங்குவதற்கு முன்னால் இவர்கள் குடியேறிவிட்டார்கள். இதிலே இருக்கின்ற சிக்கல் என்ன என்று சொன்னால், உபரி நிலங்களாக இருக்கின்ற நிலங்களை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு வழங்குகின்ற ஒரு திட்டத்தை விவசாயத்திற்கு மட்டும்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் மக்கள் அங்கே குடியேறியதன் காரணத்தால், அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு நம்முடைய விதியிலே என்ன இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் கட்டியிருக்கிற தீர்வையில் 240 மடங்கு கூடுதலாகச் செலுத்துவதற்கு அவர்கள் தயாராக இருந்தால், அந்தப் பரிந்துரையை ஏற்று, அரசு பரிசீலித்து, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி அந்தத் தீர்வையைச் செலுத்துவதற்கு அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, அதன் அடிப்படையில் அவர்களுக்குப் பட்டா விரைவில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து அந்தப் பணிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு செயல்படுத்தும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகரத்தில், 33–வது வார்டில், மீனாட்சி அம்மன் கோயில் மேற்குத் தெருவில், கிட்டத்தட்ட 50 வருடங்களாகப் பல்வேறு குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதி ஒரு நத்தம் புறம்போக்கு.* Collector *மற்றும்* R.D.O. *ஆகியோர் அந்த இடத்தை ஆய்வு செய்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதாக உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். ஆனால், தேர்தல் வந்த காரணத்தினால் அது சற்றே தொய்வடைந்துள்ளது. அந்த வேலைகளைத் துரிதப்படுத்தி அமைச்சர் அவர்கள் பட்டா வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால், உடனடியாக அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பட்டா குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் கேள்வி கேட்கின்ற நிலையில், கேள்வி கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அன்புகூர்ந்து சுருக்கமாகக் கேள்வி கேட்டால், மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு தர ஏதுவாக இருக்கும். எனவே, அதைக் கவனத்தில் கொண்டு, சுருக்கமாகக் கேள்வி கேட்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்கிற தாரக மந்திரத்தைத் தமிழ் மண்ணில் முழங்கி, மக்களாட்சி நடத்துகின்ற மாட்சிமை*



2012 ஏப்ரல் 9]

*பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமான்னார்கோவில் பேரூராட்சி நான்காவது வார்டில் காந்தியார் வீதியில் 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையே மனுவாக ஏற்று, உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்குப் பரிந்துரை செய்து, விதிக்குட்பட்டு இருந்தால் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

**திரு. ப. பார்த்தசாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் 137 மற்றும் 138–வது வட்டங்களில் பல ஆண்டுக் காலமாக மக்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் வீட்டு வரி செலுத்துகிறார்கள், தண்ணீர் வரி செலுத்துகிறார்கள். ஆனால், அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடங்கள் குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலம்; இப்போது அவை வகை செய்யப்பட்டிருக்கின்றன.*

சில காரணங்களால் 61 வகையான நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கின்றது, இதற்கும் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று சொன்னால், அவற்றை நத்தமாக மாற்றியதற்குப் பின்னர்தான் வழங்கமுடியும். ஆகவே, இது குடிசைமாற்று வாரியத்தின்கீழ் இருக்கிற காரணத்தால் அந்தத் துறை அமைச்சரிடம் தனிக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ளடங்கிய வேப்பத்தூர் ஊராட்சிக்குட்பட்ட அம்மன்பேட்டை என்ற கிராமத்தில் 600–க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். ஒரே வீட்டில் மூன்று தம்பதியினர் வாழ்கின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்குத் தனித் தனியாக வீடுகள் அமைத்துத் தரவும், குடிசையில் வாழ்கிற அந்த மக்களுக்குப் பட்டா வழங்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய முற்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கோட்டாட்சியருக்குப் பரிந்துரை செய்து, அதன்பிறகு, அந்த இடம் நத்தம் புறம்போக்காக இருந்தால், அவற்றிற்குப் பட்டாக்கள் முறைப்படி வழங்கப்படும். வீடுகளைக் கட்டுவதைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்குப் பதில் சொல்லவேண்டும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். உறுப்பினருக்கு மைக் கொடுங்கள்.





**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதி, 94 மற்றும் 95 ஆகிய புதிய வட்டங்களில் சத்தியா நகர், நேரு நகர், இராஜமங்கலம் மற்றும் அம்மன்குட்டை பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் எல்லாம் 1978 ஆம் ஆண்டு பஞ்சாயத்துகளாக இருந்து, மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகள். இன்னும் அந்த இடங்களுக்கு முறையாகப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. எப்போதெல்லாம் மக்களைச் சந்திக்கச் சென்றாலும், நீங்கள் அம்மாவிடம் சரியாகச் சொல்வதில்லை; அம்மாவிடம் சொல்லுங்கள்; உடனே செய்வார்கள் என்று மக்கள் மிகப் பெரிய எதிர்பார்ப்போடு கேட்கிறார்கள். எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடங்களுக்குப் பட்டா வழங்கிட முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, நான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட நாகம்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிட மக்கள் குடியிருந்து வருகிறார்கள். சுமார் 20 ஆண்டுக் காலமாக அவர்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் உள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில் பணியாற்றி உயிரிழந்த

[2012 ஏப்ரல் 9

குடும்பங்களுக்கும், ஆதி திராவிடர் பழங்குடியின மக்களுக்கும், கொத்தடிமைகளுக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. போன வருடம் நமக்குக் கொடுக்கப்பட்ட இலக்கு ஒரு இலட்சம் பட்டாக்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஒரு இலட்சத்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பட்டாக்கள் மனித நேயத்தோடு வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அது நத்தமாக இருந்தால், உடனடியாகப் பட்டாக்கள் வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உங்களையே வைத்து அந்தப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1947–இல் நம் நாட்டிற்கு சுதந்திரம் வந்தது. ஆனால், என்னுடைய தொகுதியிலே மட்டும் இனப்பசந்திரம் பஞ்சாயத்திலே ஏறத்தாழ 6 கிராமங்களுக்கு இதுவரை பட்டா கொடுக்கப்படவில்லை. பைமாஷ் நம்பர்—இந்தியாவிலேயே என்னுடைய ஒரு தொகுதி மட்டும் பைமாஷ் நம்பர் பிரச்சினையில் இருக்கிறது. ஏற்கெனவே இதுகுறித்து நான் பலமுறை இந்த அவையிலே பேசியிருக்கிறேன். கிட்டத்தட்ட 2,000 ஏக்கர் நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அந்தப் பகுதிவாழ் மக்கள் E.B. connection வாங்குவதற்குக்கூட நிறைய சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த கிராமங்களிலே, எந்தெந்த சர்வே நெம்பரில், யார், யாரெல்லாம் நிலங்களைப் பயன்படுத்தி வருகிறார்களோ, எவ்வளவு ஆண்டுகள் நிலங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதன் முழு விவரங்களை



2012 ஏப்ரல் 9]

என்னிடத்திலே தருவாரேயானால், விரைந்து அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு வருவதற்கு முன்னால், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு பாராட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைய முன்தினம் அவர் ஒரு நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்கிற நேரத்தில், வசந்தன் என்ற இளைஞன் சாலையிலே அடிப்பட்டுக் கிடந்தான். உடனடியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன் காரை நிறுத்தி, இரத்தக் கறையோடு இருந்த அந்த இளைஞனைத் தூக்கி, சால்வையால் கட்டி, பேருதவி செய்திருக்கிறார். அதனால் இன்றைக்கு அந்த இளைஞன் காப்பாற்றப்பட்டிருக்கிறான். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக விபத்துகள் என்று சொன்னால், எல்லோரும் ஒதுங்கிச் செல்கிற நிலைதான் ஏற்படுகிறது. காரணம் என்னவென்று சொன்னால், வழக்கிலே சிக்கிவிடுவோம்; சாட்சிகள் சொல்ல வேண்டும் என்ற பொதுவான, மோசமான, மனிதாபிமானமற்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற நிலையில், தமிழகத்தினுடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட மனிதாபிமான செயலைச் செய்ததன்மூலம், தமிழ்நாட்டில் இருக்கிற மக்களுக்கு மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார். சாலை விபத்துகள் அதிகமாக நிகழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறபோதெல்லாம், அவர் மட்டுமல்ல; நாமும் ஒதுங்கிச் செல்லாமல் அப்படிப்பட்ட பணிகளில், ஈடுபட வேண்டும். எனவே, அவர் செய்திருக்கிற உதவி அவர் உட்பட, 234 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் பெருமை சேர்க்கிற ஒரு நிகழ்வாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சார்பிலும் அவருக்கு நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கேள்விக்கு வருகிறேன். தமிழ்நாட்டில் பட்டா வழங்கப்படுவதை நினைத்தால், பாலசந்தர் படம்தான்

[2012 ஏப்ரல் 9

என் நினைவிற்கு வருகிறது. பாலசந்தர் 'அவள் ஒரு தொடர் கதை' என்று ஒரு படம் எடுத்தார். அதைப்போல, பட்டா வழங்குவது என்பது 'ஒரு தொடர் கதையாக' இருக்கிறது. 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் என்று பல ஆண்டுக் காலம் ரேஷன் அட்டை, மின் இணைப்பு, குடிதண்ணீர் இணைப்பு மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் என்று எல்லாவிதமான சான்றிதழ்கள் வைத்துக் கொண்டிருந்தும்கூட, ஏதாவது ஒரு சிறு விதியைப் பயன்படுத்தி பட்டா வழங்காத ஒரு நிலை தமிழகம் முழுவதும் நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையோடு ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்து, விதிகளைத் தளர்த்தி, நீண்ட காலம் குடியிருந்து வருகிற ஏழையெளிய மக்களுக்கு, எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல், பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது, பாலசந்தர் படத்தைப்போல இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொல்வதைப்போல, கேளாமலேயே கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) எந்த விதியாக இருந்தாலும், அவற்றைத் தளர்த்தி ஏழை மக்களுக்கு மனித நேயத்தோடு வழங்குவதற்கு அவர் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிறபொழுது, இதுவும் ஆய்வு செய்து, நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு வணக்கத்தைச் செலுத்துகிறேன். என்னுடைய கோயம்புத்தூர் வடக்குத்



2012 ஏப்ரல் 9]

தொகுதியில், பூசாரிபாளையம், பனமரத்தூர் மற்றும் சுண்டபாளையம்ரோடு ஆகிய பகுதிகள் ஏறத்தாழ நூறாண்டுக் காலமாக, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகள். அந்தப் பகுதியில் அவர்கள் நூறாண்டுக் காலமாக இருந்தும், இதுவரை அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. நானும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மனு கொடுத்திருக்கின்றேன். அது நீர்வழிப் புறம்போக்கு என்ற ஒரே ஒரு கருத்தைச் சொல்லி தள்ளிவிடுகிறார்கள். குளத்தைச் சுற்றி, சுமார் 5 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மழைக் காலங்களில் அங்கேயிருக்கின்ற வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து விடுவதால், மக்கள் வாழ முடியாத சூழ்நிலையும் இருக்கிறது.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. மலரவன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, அந்த மக்கள் அங்கே நிரந்தரமாக இருப்பதற்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 61 வகையான நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதிலே சில விதிமுறைகளைத் தளர்த்த வேண்டியிருக்கிறது. சில இடங்களிலே சாலையோரங்களிலும், சில இடங்களிலே ஊராட்சிப் பகுதிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள பொது இடங்களிலும் மக்கள் குடியேறி விடுகிறார்கள். அப்படி அவர்கள் குடியேறியதற்குப் பிறகு, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும்போது, சட்டம்—ஒழுங்கு சீர்கெடும் நிலை ஏற்படும் என்பதால், அவர்கள் அங்கேயே குடியிருந்து கொள்ளலாம் என்ற நிலையை எந்த அரசாக இருந்தாலும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பட்டாக்கள்

[2012 ஏப்ரல் 9

வழங்குகிறபோது, விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க வேண்டியிருக்கிறது. நீர்வழிப் புறம்போக்காக இருந்தால் உச்ச நீதிமன்றத்தில் தடை இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளில் பட்டாக்கள் வழங்க இயலவில்லை. ஆகவே, நீர்வழிப் புறம்போக்காக இல்லாமல் இருந்தால், அதுகுறித்து ஆய்வு செய்ய, அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்துகிற இந்தத் தருணத்தில், மதுரை புறநகர் மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட டி.மேட்டுப்பட்டி கிராமத்தில் சுமார் 40 ஆண்டுக் காலமாக 100 குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, அவர்கள் இருக்கிற இடம் அரசுப் புறம்போக்கு நிலமாக இருப்பதால், உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று பரிந்துரை செய்தார்கள். இருப்பினும், இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடத்திற்கு பட்டா வழங்க ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பட்டா வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளதால் உடனடியாகப் பட்டா வழங்கலாம். வட்டாட்சியருக்கே அந்த அதிகாரம் இருக்கிறது; அவருக்கு மேலேயிருக்கிற கோட்டாட்சியருக்கு, சில விதிமுறைகளுக்குட்பட்டு, பட்டா வழங்குகிற அதிகாரம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை தொடர்பாக, நான் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு, அது விதிமுறைக்குட்பட்டு இருக்குமேயானால், உடனடியாக அங்கே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மாநகராட்சி எல்லையிலே 14 கிலோ மீட்டருக்கு உள்ளாக இருக்கின்ற இடங்களுக்குப் பட்டா வழங்குவதில்லை என்ற விதியின் காரணமாக, அங்கிருக்கிற ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலே இருக்கிற பல்வேறு ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏதுவாக, அந்த விதியை உடனடியாகத் தளர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோல, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில், கீழ அப்பனேரி என்ற கிராமத்தில் 10 வருடங்களுக்கும் முன்பாக, ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பட்டாச் சான்றிதழும் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், இடம் மட்டும் அந்த மக்களுக்கு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலின்போது, அந்தப் பகுதியில் பணியாற்றிய பல அமைச்சர்களுக்கும் இது தெரியும். எனவே, அந்த இடத்தை அவர்களிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளில் அதுபோன்ற தடைகள் இல்லை. இன்றைக்கு, சென்னை மாநகராட்சிக்குட்பட்டிருக்கிற சோழிங்கநல்லூர் பகுதியில், சுமார் 5 ஆயிரம் பட்டாக்கள் வழங்குவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார். எந்தெந்தப் பகுதிகளில் பட்டாக்கள் வழங்கப்படவில்லை; எந்தெந்த சர்வே எண்களிலே குடியிருக்கிறார்கள்; எவ்வளவு பேர் அதிலே குடியிருக்கிறார்கள் போன்ற விவரங்களையெல்லாம், இங்கேயிருக்கிற சட்டமன்ற

உறுப்பினர்கள் எங்களுக்குக் கடிதங்கள்மூலமாகத் தருவீர்களேயானால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் துரிதமாகப் பரிந்துரை செய்யப்பட்டு, நீங்கள் குறிப்பிடுகிற இடம் விதிமுறைகளுக்குட்பட்டு இருக்கிறதா; எந்த இடத்திலே அவர்கள் கட்டடம் கட்டியிருக்கிறார்கள்; அது நீர்வழிப் புறம்போக்கில் இருக்கிறதா; அரசு குறிப்பிடுகிற 61 வகைப்பாடுகளுக்குள் அது இருக்கிறதா என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட அறிவொளிநகரில் சுமார் 500–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கடந்த 15 ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள். அந்த இடம், பூமிதான இயக்கத்தின் மூலமாகப் பெற்ற இடமாக இருக்கிறது. கடந்த காலங்களிலேயிருந்து, அந்த இடத்திற்குப் பட்டா வழங்க முடியாத நிலைமை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு இதைப் பரிசீலித்து, பூமிதான இயக்கத்தின் மூலமாகப் பெற்ற இடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமிதான இயக்கம் என்பது, வினோபாஜி அவர்களால் தொடங்கப்பட்ட இயக்கமாகும். அவர் நடைப் பயணம் மேற்கொண்டு, கூடுதலாக வைத்திருந்த கொடையாளர்களிடம் நிலங்களைப் பெற்றார்கள். கொடையாகப் பெற்ற, நிலங்களைத்தான் நாம் இப்போது விவசாயம் செய்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட பகுதிகளில் மக்கள் குடியேறிவிட்டார்களேயானால், அவர்களை வெளியேற்ற முடியாத சூழ்நிலை இருக்கின்றபோது,





விதிமுறைகளுக்குட்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** பாராட்டுதான். நீங்கள் விபத்தில் அடிபட்ட ஒருவருக்கு உதவி செய்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; நீங்கள் ஒரு சட்ட நிபுணர் என்பதாலும், தைரியமாக, யார் வேண்டுமானாலும் அடிபட்டவரைக் காப்பாற்றலாம் என்று ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். நிச்சயமாக, தமிழகத்தில் பொதுமக்களுக்கே இது ஒரு முன்னுதாரணமாக இருக்கும். நானும் இதைப் பலமுறை யோசித்திருக்கிறேன். உதவி செய்யும்போது பயப்படாமல் உதவி செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும் என்று நான் பலமுறை கூற முயற்சி செய்திருக்கிறேன். நீங்கள் செய்து காண்பித்துவிட்டீர்கள். ஆகையால், என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்விக்கு வருகிறேன்.

என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட ஆறுகாணி, பத்துகாணி, அருமனை, கடையாலுமூடு, வலியஏலா போன்ற பகுதிகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியுள்ளது பல முறை வருவாய்த் துறை அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்பகுதி வாழ் மக்களுக்குப் பட்டாக்கள் விரைவில் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கே மீண்டும் ஒருமுறை பாராட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நானும் என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும்

அமைச்சர்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் செய்திருக்கிற சிறந்த அந்தப் பணி எல்லோரும் அதுபோன்ற பணிகளை மேற்கொள்வதற்கு முன்னுதாரணமாக இருந்திருக்கிறது. ஆகவே, நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை எங்கள் அனைவரின் சார்பாகவும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல அந்தப் பகுதிகளிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்புகொண்டு, விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமேயானால் அப்பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு உடனடியாகப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராமத்தில் கடந்த 50, 60 ஆண்டுக் காலமாக வீடுகள் கட்டிக் குடியிருப்போருக்கு அரசு சார்பாக குடிநீர் வசதி, சாலை வசதி, மின் இணைப்பு வசதி போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட பின்பும், பலமுறை கேட்டும் பட்டாக்கள் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம், அப்பகுதி வனத் துறைக்குப் பாத்தியப்பட்டது என்று சொல்கிறார்கள். 50, 60 ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகின்ற மக்களுக்கு, வனத் துறையையே காரணம் காட்டி வருகிறார்கள். ஆகவே, அந்த இனத்தை மாற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பட்டா வழங்க முன்வருவாரா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வனத் துறைக்குச் சொந்தமான நிலமாக இருக்கின்றது. அது ஒரு உபயோகப் பகுதியாக இருக்குமேயானால், எவ்வளவுப் பகுதிகளில் மக்கள் குடியேறி





இருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்ததற்குப் பிறகு, அப்பகுதிகளை வனத் துறை ஒப்படைக்குமேயானால், நத்தமாக மாற்றி பட்டாக்கள் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஈரோடு கிழக்குத் தொகுதியில், இராஜாஜிபுரம் என்கின்ற பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அருந்ததியர் மக்கள், கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலமாக வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே, 25 ஆண்டுக் காலமாக பட்டா கேட்டு பலமுறை முறையிட்டும், இதுவரையில் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்த இடம் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கின்றது. அதிலே, கிட்டத்தட்ட 300, 400 குடும்பங்கள் இருக்கின்றன. எனவே, அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 61 வகையான இடங்களுக்குப் பட்டாக்கள் வழங்க இயலாது என்று நான் சொன்ன அந்த இடங்களுள்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடமும் இருக்கின்றது. மாநகராட்சி, ஊராட்சி, நீர்வழிப் பகுதிகள், குளங்கள், ஏரிகள், சாலைப் புறம்போக்குகள் என 61 வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சியில் குடியிருப்பவர்களுக்கே இடத்தை ஒப்படைக்கலாம் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருமேயானால், உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் நான் கலந்துபேசி, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது பட்டா வழங்க

தடையாணை இருக்கிறது. அதை இரத்து செய்ய அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நீலகிரியில், பல பகுதிகளில், வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். அது போன்ற பகுதிகளில்தான் பட்டாக்கள் வழங்க முடியாதே தவிர, நத்தமாக இருந்தால் அதற்குப் பட்டாக்கள் வழங்கப்படும், அதைப்போன்று ஜம்மம் பகுதியிலே இருக்கின்றவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயம் செய்கின்ற பகுதிகளாக இருந்தாலும், அதை நத்தமாக மாற்றி பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**52—**

### மின் இணைப்பு

**4031***—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் வில்லியர் காலனி, இரயில் நகர், தின்னைக்காட்டூர் ஆகிய பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய்த் துறை/நகராட்சியிடமிருந்து பெறப்பட்ட தடையில்லாச் சான்றுடன் மின்னிணைப்பு கேட்டு விண்ணப்பங்கள் பெறும்பட்சத்தில், வாரிய விதிகளின்படி மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் இரண்டாவது வார்டு, வில்லியர் காலனி, இரயில் நகர் கிராமங்களில், சுமார் 314 பேர் கடந்த பல ஆண்டுகளாக மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். இப்பொழுது வருவாய்த் துறை அதிகாரிகளால் இருப்பிடச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்பு மின் இணைப்பு வழங்குவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், தடையில்லாச் சான்றிதழ் வழங்கியும், மின்சார வாரியத்தால் மின்னிணைப்பு கொடுப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கிடைத்திட, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்திலுள்ள, மறைமலை நகர், காட்டாங்குளத்தூர் பிரிவு அலுவலக எல்லைக்குட்பட்ட தின்னைக்காட்டூர், வில்லியர் காலனி, இரயில் நகர் ஆகிய இடங்களில் உள்ள குடியிருப்புகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், 'நீங்கள் மின்னிணைப்பு வழங்கக்கூடாது' என்று நகராட்சியின் செயல் அலுவலர் மின் துறைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார். இருந்தாலும்கூட,

[2012 ஏப்ரல் 9

மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் காரணமாக, மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம், அந்நகராட்சியின் செயல் அலுவலருக்குக் கடிதம் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளது. "அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்குத் தடையில்லாச் சான்றிதழ்களை வழங்கினால் நாங்கள் மின் இணைப்பு வழங்குகிறோம்" என்று சொன்னதற்கு நகராட்சியின் செயல் அலுவலர், "இல்லை, நீங்கள் நேரடியாக வழங்கக் கூடாது, நகராட்சியினுடைய அனுமதி பெற்றதற்குப் பின்பு, நாங்கள் தடையில்லாச் சான்றிதழ் வழங்கியதற்குப் பின்புதான் நீங்கள் வழங்கவேண்டும்" என்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். தொடர்ந்து மின் வாரியமும் அதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோல் வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்ட இடங்களை ஆக்கிரமித்து குடியிருப்பவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை தடையில்லாச் சான்றிதழ் வழங்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல், தடையில்லாச் சான்றிதழை சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அளித்திருக்குமேயானால், அந்தப் பகுதியில் குடியிருக்கின்றவர்களுக்கு மின்னிணைப்புக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்கிறது. மின் வாரியத்திலும், 314 நபர்களில் சுமார் 200 பேருக்கு மேல் மின் இணைப்பிற்கான கட்டணங்களைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால், மின் இணைப்புக் கொடுப்பதில் மட்டும் காலதாமதம் ஆகிறது. உடனடியாக, மின்னிணைப்புக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்ட



2012 ஏப்ரல் 9]

இடத்தில் ஆக்கிரமித்தவர்களுக்கு, தடையில்லாச் சான்றிதழ் கிடைத்ததாகச் சொல்லியிருக்கிறார். உடனடியாக, அந்தப் பகுதியில் விண்ணப்பித்து இருக்கின்றவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நகராட்சிப் பகுதியில் ஆக்கிரமித்து, குடியிருப்பவர்களுக்கு, நகராட்சியிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட்டால் மட்டுமே அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளிமலை பகுதி, வனப் பகுதியாக இருக்கின்றது. டீ எஸ்டேட்டுகள் அதிகமாக இருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுது, அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கினார்கள். காலப்போக்கில், அந்த மின்சாரத்தைத் தொட்ட வன விலங்குகள் அழியக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதோடு, அங்கு மின் தடையும் ஏற்பட்டு, இதுவரை அங்கு மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. 'கேபிள்' மூலமாக அந்த வனத் துறை பகுதிகளிலுள்ள குடிசைப் பகுதி மக்களுக்கும் Tea estate-க்கும் மின்சாரம் வழங்கினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே மின் இணைப்பு வழங்கப்பட்டு, பின்னர் வன விலங்குகளால் அந்த மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது என்று

[2012 ஏப்ரல் 9

குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை ஏற்று உடனடியாக அந்த மலைப் பகுதி கிராமங்களுக்கு மீண்டும் மின் இணைப்புக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவிலே மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் தொகுதியான மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பசுமலை, அண்ணாநகர் பகுதியில் நீண்ட காலமாக, கடந்த 50 ஆண்டுக் காலமாக மின் இணைப்பு வழங்கப்படாததால் மக்கள் போராடி வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறதோ, அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் காரணம் அல்ல. அங்கே ஆக்கிரமித்துக் குடியிருக்கின்ற விண்ணப்பதாரர்கள், எந்தத் துறை சார்ந்த பகுதியிலே இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், நகராட்சிப் பகுதியிலே உள்ள நிலமாக இருந்தால் அவர்களிடம் தடையில்லாச் சான்றிதழ் வாங்க வேண்டும். அதேபோல, வருவாய்த் துறையின் இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தால், அவர்களுடைய தடையில்லாச் சான்றிதழ் வாங்க வேண்டும். இந்து சமய அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட இடங்களிலே குடியிருந்தால், இந்து சமய அறநிலையைத் துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் வாங்க வேண்டும். அதேபோல, சில இடங்களிலே church–க்குச் சொந்தமான இடங்களில், மசூதிக்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் குடியிருந்து வருகிறார்கள். அந்த இடங்களிலே சம்பந்தப்பட்ட அமைப்புகள் தடையில்லாச் சான்றிதழ் வழங்கிட வேண்டும். ஆகவே,



2012 ஏப்ரல் 9]

தடையில்லாச் சான்றிதழோடு விண்ணப்பிக்கின்ற எவருக்கும் மின்சார இணைப்பு வழங்குவதிலே தடையேதும் இருக்காது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் மின்சாரம் இல்லாத நேரங்களில் Three phase current–ஐப் பயன்படுத்த முடியாத நேரத்தில், 2 phase போட்டு இழுக்கிறார்கள். அதை அரசு அனைவருக்கும் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மின் இணைப்பு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன், மும்முனை மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற நேரத்திலே மட்டும், அதைப் பயன்படுத்தினால் அந்தப் பகுதியிலே மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதிலே தடையேதும் இருக்காது. ஆனால், ஒருமுனை மின்சாரம் வழங்குகிறபோதும் அங்கே இருக்கிற சில capacitor கருவிகள் மூலமாக, எல்லா நேரங்களிலும் மின்சாரத்தை உறிஞ்சி விடுவதால், சில இடங்களிலே டிரான்ஸ்ஃபார்மர்கள் மற்றும் மின்கட்டமைப்புகள் அப்படியே பழுதடைந்து விடுகின்றன. இதுபோல பழுது அடிக்கடி ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களும் அதிலே பிரச்சினையை உணர்ந்து அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். அவர்களுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிற நேரத்தில் மட்டும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர்களை அறிவுறுத்தினால், இப்படிப்பட்ட பிரச்சினைகளெல்லாம் வராது. தொடர்ந்து விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதிலே தடையேதும் இருக்காது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

## முழு நேரக் கல்லூரி

***5713—திரு. சுப. தங்கவேலன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டத்திலுள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மாலை நேரக் கல்லூரியை முழு நேரக் கல்லூரியாக மாற்ற அல்லது புதிய கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், தொண்டியில் அழகப்பா பல்கலைக்கழகம்மூலம் இயங்கும் மாலை நேரக் கல்லூரியை முழு நேரக் கல்லூரியாக மாற்ற அல்லது புதிதாகத் தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, சிவகங்கை மாவட்டத்திலுள்ள இளையான்குடி தொகுதி, அதேபோல இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடனை தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கி, தொகுதி மறு சீரமைப்பு அடிப்படையில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற தொகுதி. அது நிறைய கிராமங்கள் அடங்கி இருக்கக்கூடிய தொகுதியாக இருக்கிறது. அந்த வட்டத்திலேயே எந்தக் கல்லூரியும் இல்லாத ஒரு சூழ்நிலையில், கடந்த ஆட்சியில், தலைவர் கலைஞருடைய ஆட்சியில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரியைத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியதைப்போல, கிராமப்புறங்கள் அதிகமாக இருக்கக்கூடிய அந்தத் தொகுதியினுடைய மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து திருவாடனை தொகுதியில் ஒரு புதிய அரசுக் கல்லூரியை உருவாக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*



2012 ஏப்ரல் 9]

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அழகப்பா பல்கலைக்கழக சிண்டிகேட் மூலம் தொடங்கப்பட்ட மாலை நேரக் கல்லூரி ஆகும். அதாவது, பகல் நேரங்களில் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் வேலைக்குச் சென்றுவிட்டு மாலை நேரங்களில் அவர்கள் உயர் கல்வி பெற வேண்டும், அவர்களும் படிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, வேலைக்குச் செல்பவர்களுக்கும் படிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்ட மாலை நேரக் கல்லூரி என்பதால், அதனை முழு நேரக் கல்லூரியாக மாற்றுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன்.*

**டாக்டர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாளும் கோளும் நலிந்தோருக்கு இல்லை;" ஞாயிற்றுக்கிழமைகூட பெண்களுக்கு இல்லை என்கிற வரியைப்போல, நாளும் பொழுதும், அல்லும் பகலும் பாராமல், அஸ்தமனம், உதயம் என்றும் பாராமல் உழைத்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாட்டின் நிருவாகத் தலைநகரம் சென்னை, அதுபோல் கல்வியின் தலைநகர் விருதுநகர் மாவட்டம் என்பதைப்போல, கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திவரும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை*

[2012 ஏப்ரல் 9

ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அவர்களுடைய தொகுதியில் தொடங்கப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு சாத்தூர் தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி, அந்த மாவட்டத்தினுடைய கல்வித் தரம் உயரும் வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இன்றைய காலக்கட்டத்தினைப் பொறுத்தவரையில், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பதற்கு மாணவ, மாணவிகள், அதுவும் குறிப்பாக, கிராமப்புறங்களிலுள்ள மாணவ, மாணவிகள் அதிகமாகப் படிப்பதற்கு விரும்புகிறார்கள். இதுகுறித்து பல்வேறுபட்ட கோரிக்கைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் பலர் இங்கே கோரிக்கைகளை வைத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அவர்களின் அறிவுறுத்தலின்படி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, திசையன்விளை மற்றும் பனங்குடி ஆகிய ஊர்களில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்மூலம் நடத்தப்படும் மனோ கலைக் கல்லூரியினை அரசுக் கலைக் கல்லூரியாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோ கல்லூரி, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்மூலம் நடத்தப்படும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகும். அதற்கான நிதியைப் பொறுத்தவரையில், அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி அந்தப் பல்கலைக்கழகம்மூலமாக அது வழங்கப்படுகிறது. வருங்காலங்களில் இதுபோன்றவற்றை அரசுக் கல்லூரிகளாக ஆக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட 5 சட்டமன்றத் தொகுதிகளில் 4 சட்டமன்றத் தொகுதிகளில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இருக்கிறது. பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதிகளில் 15 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதனருகில் 5 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 20 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, பாலக்கோடு தொகுதிக்கு அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றினைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகூட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டம் சற்றுப் பின்தங்கிய மாவட்டம் என்பதை

[2012 ஏப்ரல் 9

அடிப்படையாக வைத்து, இரண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஊர்களில் வழங்கி அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். இதே மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் மேல்நிலைப் பள்ளிகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்துள்ளார்கள். இக்கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று அதனை வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. எனவே, குடியாத்தம் தொகுதிக்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகின்ற குடியாத்தம் தொகுதி, வேலூர் மாவட்டத்தில் இருக்கிறது. ஏற்கெனவே, வேலூர் மாவட்டத்தில் 3 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனாலும், அவருடைய தொகுதிக்கு ஒரு அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார். பொதுவாக, இப்போது நம்முடைய மாணவர்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் கலைக் கல்லூரியில் படிப்பதற்கு மிகவும் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள். Gross Enrolment ratio என்பது 18 வயதிலிருந்து 23 வயது வரை உயர் கல்வி பெறுகின்றவர்கள் எண்ணிக்கை. அதனை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தயாரித்திருக்கிறார்கள். 2025 ஆம் ஆண்டு வருகின்றபோது, நம்முடைய தமிழகம், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாக 25 சதவீதம் என்ற அளவில் உயர் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக கல்வி நிலையங்களையும், கல்வி கற்பதற்கு வசதி வாய்ப்புகளையும், உயர் கல்வி பெறுவதற்கு பல்வேறுபட்ட சலுகைகளையும் வழங்கி வருகின்றார்கள். அந்த அடிப்படையில் மேலும் பல கல்லூரிகள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வருகின்றபோது உறுப்பினர் குறிப்பிட்ட தொகுதியில் உள்ள தேவையை அறிந்து புதிய கல்லூரி திறப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**54—**

### பயிற்சிகள்

***5973—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புழல் மத்திய சிறையிலுள்ள மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியின் மூலமாகக் கைதிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகளிலே, குறிப்பாக புழல் சிறைச்சாலையிலே இருக்கின்ற சிறைவாசிகளுக்கு, மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியின்மூலம் தொழிற்கல்விக்குப் பயிற்சி

*அளிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போது தமிழகத்தில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகள், புதுக்கோட்டையில் இருக்கின்ற பார்ஸ்டல் பள்ளி, 3 பெண்களுக்கான தனி சிறைச்சாலைகளிலே, தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம்மூலம் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியுடன் இணைந்து சிறைவாசிகளுக்கு 14 வகையான தொழில் சார்ந்த கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட புழல் சிறைச்சாலையிலே 4 சக்கர வாகனம் பழுதுபார்க்கின்ற பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு அழகு சாதன பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* First time offender *என்று சொல்லக்கூடிய முதல் முறை குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தக்கூடிய வகையில் சிறை அமைத்து, ஏற்கெனவே* habitual offender *என்று சொல்லக்கூடிய கைதேர்ந்த குற்றவாளிகளுடன் கலவாமல் இருப்பதற்குத் தனியாக சிறைச்சாலைகள் அமைக்க அரசிடம் கருத்துரு ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மூல வினாவிற்கும், உங்கள் வினாவிற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.*

*வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**55—**

### புதிய கட்டடம்

***11742—திரு. சி. சண்முகவேலு:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் உள்ள மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு திருப்பூர் மாவட்ட வன அலுவலகம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உடுமலைப்பேட்டை நகராட்சி, பாபுகான் வீதி, புல எண் 27–இல், 300 சதுர மீட்டர் (தோராயமாக) பரப்பளவு கொண்ட வன நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பகுதி II திட்டத்தின்கீழ், 2012–2013–ஆம் நிதியாண்டில், ரூபாய் 28 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடுமலைப்பேட்டையிலே வன அலுவலகம் கட்டுவதற்கு இடம் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த இடம் குறைவாக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு திருப்பூர் மாவட்டத்திற்கும், உடுமலைப்பேட்டை கோட்டத்திற்கும் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான 13 ஏக்கர் 23 சென்ட் நிலம் உள்ளது. அனைத்து துறைகளினுடைய அலுவலகமும் கட்டக்கூடிய அந்த இடத்திலேயே வனத் துறையினுடைய அலுவலகமும் கட்டினால் பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறை வாரியாக இடம் தேர்வு செய்யப்பட்டு, 2012–2013 ஆம் நிதியாண்டிலேயே நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதோடு ஒருங்கிணைந்த உடுமலை, அமராவதி வனச் சரகப் பகுதியிலே மலைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய 12 பகுதிகளிலே 749 வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களின் வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையிலே உள்ளன. உள்ளாட்சி அமைப்பின் மூலமாகச் செய்வதற்கு முடியாத சூழ்நிலையில் இருந்தாலும்கூட, வனத் துறையின்மூலமாக வேறு ஏதேனும் நிதியை ஒதுக்கீடு செய்து நடப்பாண்டிலேயே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் வனத் துறையின் நிதிநிலைமையைப் பொறுத்து கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு மாத ஊதியம் ரூ. 13 ஆயிரம் வழங்கி சம்பள ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தர, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினா மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

***2591—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், எம். வேலாங்குளம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணையில் வகுக்கப்பட்டுள்ள புதிய பகுதிநேர அங்காடி அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரிக்கப்பட்ட பின்பு தாய் கடையில் 500 குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை சிவகங்கை மாவட்டத்தில் உள்ள எம்.வேலாங்குளம் கிராமத்தில் பூர்த்தியாகாத காரணத்தினால் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத்

[2012 ஏப்ரல் 9

தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய நோக்கம் அனைத்துப் பகுதி மக்களுக்கும் உணவும், குடி தண்ணீரும் கிடைக்கவேண்டுமென்பதாக சட்டமன்றத்திலே தொடர்ந்து அறிவிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான், விலையில்லா அரிசி வழங்கப்படுவதாக நானும் அறிகிறேன். ஏழையெளிய மக்கள் 4 கி.மீ தூரம், 5 கி.மீ. தூரம் நடந்து கடைகளுக்குச் சென்று விலையில்லா அரிசியைப் பெறுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்குமிடையே உள்ள தூரம் 1 1/2 கி.மீ. க்கு மேல் இருந்தால் பிரிக்கவேண்டுமென்றிருக்கிறது. ஆனால், 500 அல்லது 150 குடும்ப அட்டைகள் என்று ஏதாவது ஒரு விதியைக் குறிப்பிட்டு, 4 கி.மீ, 5 கி.மீ. தூரத்தில் இருக்கக்கூடிய மக்கள்கூட எளிதாக நியாய விலைப் பொருட்களைப் பெற முடியாமல் இருக்கிறது. எனவே, தமிழக அரசு உடனடியாக அந்த விதிகளைத் தளர்த்தி தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்கவேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, 300 கார்டுகள் இருந்தாலே போதும் என்ற அளவிலாவது வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், எம். வேலாங்குளம் கிராமத்திலிருந்து பிரிக்கப்பட்ட 115 குடும்ப அட்டைகளையும் சேர்த்து உதிராப்பள்ளி கிராமத்தில் மொத்தம் 243 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடை செங்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலம் செயல்பட்டு வருகின்றது. 24–8–2006 தேதியிட்ட அரசு ஆணையின்படி, புதிதாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட



2012 ஏப்ரல் 9]

பகுதிநேர அங்காடியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகளும், அது தாய் அங்காடி செயல்படும் இடத்திலிருந்து 1.5 கி.மீ தூரத்திற்கு மேல் இருக்க வேண்டுமெனவும், பிரிக்கப்பட்ட பின்பு தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும் எனவும் உள்ளது. எம்.வேலாங்குளம் கிராமம் தலைமையிடக் கடை இருக்கும் உதிராப்பள்ளி கிராமத்திலேயிருந்து 5 கி.மீ. தூரத்தில் இருந்தாலும், இதர நிபந்தனைகள் பூர்த்தியடையாததால் எம்.வேலாங்குளம் கிராமத்தில் பகுதிநேர அங்காடி அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கிற அத்தனை குடும்ப அட்டைதாரர்களுக்கும் உணவு உத்தரவாதத்தை வழங்குகிற அடிப்படையில், உணவுப் பாதுகாப்பை அளிக்கிற வகையில், விலையில்லாத அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, 1.5 கி.மீ.-க்கு மேல் இருக்க வேண்டுமென்ற விதி பூர்த்தியானாலும் பகுதிநேர அங்காடி அமைக்க இயலாதா என்று கேட்கிறார்கள். நிச்சயமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இது எடுத்துச்சொல்லப்பட்டு சிறப்புக் கூறுகளின் அடிப்படையில் ஆய்வு செய்து வாய்ப்பு இருப்பின் செய்து தரப்படும் என்கிற பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** கோரிக்கை பரிசீலனை செய்து நிறைவேற்றப்படுமென்ற அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்படுகிற நேரத்தில் கிராமத்திலிருக்கக்கூடிய மக்களே வாடகை, ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி ஆகியவற்றைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக, தவறுகள் ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. பகுதிநேர நியாய விலைக் கடைகளில் ஏன் விலை கூடுதலாக விற்கிறீர்கள் என்று கேட்டால், ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி எங்களுடைய சொந்த செலவில் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வியா?

[2012 ஏப்ரல் 9

**திரு. சு. குணசேகரன்:** இது கேள்விதான். வாடகையை நாங்களே கொடுக்கவேண்டியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கு வாடகை, ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி உட்பட்ட எல்லாச் செலவுகளையும் அரசே ஏற்றுக் கொண்டால் அரசு அறிவிக்கிற விலையிலேயே அந்தப் பகுதி மக்களும் பொருட்களை வாங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, இந்த நியாயத்தை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதியில் அதற்கான திருத்தத்தைக் கொண்டு வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கேள்வி, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து, வினாவை எழுப்புகிறேன். எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட புதுகேசாவரம் ஊராட்சி, மாந்தோப்பு கிராமத்திலும், வல்லூர் ஊராட்சி, ஆலபாக்கம் கிராமத்திலும், கைனூர் ஊராட்சி, பங்காரம்மா கண்டிகையிலும், வளர்புரம் ஊராட்சி, வளர்புரம் காலனியிலும், மேல்களத்தூர் ஊராட்சி, மேல்களத்தூர் காலனியிலும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டுமென்ற விண்ணப்பம் பெறப்பட்டு, விதிக்கு உட்பட்டுள்ளதால், கருத்துரு தயாரிக்கப்பட்டு, மாவட்ட நிருவாகத்துக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களிலே விரைவாக பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். அவர் கோடிட்டுக் காட்டிய அந்த இடங்களிலெல்லாம் புதிதாக பகுதிநேர அங்காடிகள் அமைப்பதற்கு விதிகளின் அடிப்படையில் வாய்ப்பிருப்பின் செய்து கொடுக்கப்படும் என்கிற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிப்பதோடு, 1–6–2011 முதல் இதுவரை தமிழகத்தில் 321 புதிய பகுதிநேர நியாய விலை அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. இது, இதுவரை ஓராண்டில் இல்லாத சாதனை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என். ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட தாமரங்கோட்டை, பொன்னவராயன்கோட்டை ஆகிய பகுதிகளில் இருக்கிற கிராமங்கள் பெரிய கிராமங்களாக இருக்கின்ற காரணத்தால், தாய்க் கடையைப் பிரித்து, பகுதிநேர அங்காடியைத் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை மக்கள் வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, விதிகளுக்குட்பட்டிருந்தால் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட தாமரங்கோட்டை, பொன்னவராயன்கோட்டை போன்ற கிராமங்களை நானும் அறிவேன். அவை பெரிய கிராமங்கள்தான். இதுசம்பந்தமாக அவ்வாறு கோரிக்கை வந்திருக்குமேயானால், கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்

[2012 ஏப்ரல் 9

தலைவரிடத்திலே கருத்துரு பெற்று நிச்சயமாக அவை பிரித்துக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேந்தமங்கலம் தொகுதியில், கொல்லிமலை ஒன்றியத்தில் சுண்டக்காடு என்ற கிராமத்தில் 100 கார்டுகளுக்கு ஒரு கடை என்று பிரிக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கொல்லிமலை ஒன்றியம், பாலவந்திநாடு ஊராட்சி, செம்மேடு கிராமத்திலிருக்கும் நியாய விலைக் கடையில் 464 கார்டுகள் இருக்கின்றன. கரையங்காட்டுப்பட்டி, பூச்சக்கரை, சாலக்காடு ஆகிய பகுதிகளில் மொத்தம் 185 கார்டுகள் இருக்கின்றன. இந்த மூன்றுப் பகுதிகளுக்கும் கரையங்காட்டுப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாய்க் கடையிலே 464 கார்டுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலிருந்து 185 குடும்ப அட்டைகளைப் பிரித்தால் தாய்க் கடையினுடைய குடும்ப அட்டைகள் 300–க்கும் குறைவாகப் போய்விடும். அதற்கு விதியில் இடம் இல்லை என்று சொன்னாலும்கூட, மலைப் பகுதியிலே, இதுபோல் அட்டைகள் குறைவாக இருந்தாலும், தூரம் குறைவாக இருந்தாலும், கொடுக்கலாம் என்று விதியைத் தளர்த்தலாம். எனவே, அதனைப் பயன்படுத்தி, அந்த விதிக்குள் வந்தால், நிச்சயமாகப் பிரித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.



2012 ஏப்ரல் 9]

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலியாபுரம் ஒன்றியம், பி.மேட்டூர் பேரூராட்சியில், கல்லாங்குத்துக் கோம்பை என்கின்ற இடம் மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதி. மக்கள் மலையின் அடிவாரத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் தாய்க் கடைக்கு கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டர் தூரம் கடந்து வரவேண்டும். சாலை வசதி கூட சரியாக இல்லாததால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போலவே, செம்புலிச்சாம்பட்டியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற எருமைப்பட்டிக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் எனத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த எருமைப்பட்டி என்ற இடத்திற்கா? (குறுக்கீடு) சரி.

வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

### சர்க்கரை ஆலை

***921—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிக்கிறேன்.

குத்தகைக்கு விடுதல், புனரமைத்தல், இயக்குதல், திரும்ப ஒப்படைத்தல் அடிப்படையில் மதுரா சர்க்கரை ஆலையை மீண்டும் திறக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சர்க்கரை ஆலைகளிலே பணிபுரியக்கூடிய ஏறக்குறைய 9,000 ஊழியர்களில், 8,400 ஊழியர்கள் இன்றைக்கு ஆறாவது நாட்களாக சில கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கும் அரசும், அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 5,637 தொழிலாளர்கள் மட்டும்தான் வேலை செய்கின்றார்கள், 9,000 பேர் இல்லை. இரண்டு முறை, மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது, பேச்சுவார்த்தை இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அது சுமுகமாக விரைவில் முடிவடைய, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள். நிச்சயமாக விரைவில் முடிகின்ற



2012 ஏப்ரல் 9]

வகையிலே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். கடந்த ஆட்சியிலேயே கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டு, ஊதிய உயர்வு கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு, இன்றுவரை கொடுக்கப்படவில்லை. எனவே, உடனடியாக ஊதிய உயர்வைக் கொடுத்து, வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், தனிக் கவனம் செலுத்துமாறு ஆணையிட்டிருக்கின்றார்கள். கூடிய விரைவில் நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவில் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்து கரும்பை விளைவிக்கிறார்கள். ஆனால், தனியார் ஆலைகள் 10 மாதம், 12 மாதம் ஆன பிறகும்கூட கரும்பை வெட்டுவது கிடையாது, 13 மாதம், 14 மாதம் ஆகிவிடுகிறது. வெட்டுக் கூலியை எதிர்பார்த்து நம்பிக்கையோடு இருக்கும் விவசாயிகள் பாதிப்புக்கு

[2012 ஏப்ரல் 9

ஆளாகிறார்கள். இதன்காரணமாக விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற பல்வேறு மாவட்டங்களில் கரும்பு விவசாயிகள் கரும்புக்குத் தீ வைத்து, அதன்காரணமாக உடனடியாக வெட்டவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, எங்கெல்லாம் கரும்பு விவசாயம் செய்து, தனியார் ஆலைகளோடு கரும்பை வெட்டுவதற்கு ஒப்பந்தம் போடப்படுகிறதோ, அங்கெல்லாம் உரிய காலத்தில் வெட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது கடந்தகால தி.மு.க ஆட்சியில் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தச் சர்க்கரை ஆலையாவது 13 மாத காலம் வெட்டவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், நிச்சயமாக அந்த ஆலையின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு தாலுகாவில், கோவிந்தப்பட்டு பஞ்சாயத்தில், பன்னாரி அம்மா சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த ஆலையிலிருந்து வெளியேறும் புகையினால் பக்கத்தில் இருக்கின்ற மயிலாடும்பாறை என்ற கிராமம் மாசுபடுகிறது. எனவே, அந்தப் புகையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். இதுவரை எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படிப் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றவகையில், சுற்றுச்சூழல் மாசுபடுமானால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அரசு கூட்டுறவு நூற்பாலை திறக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தெந்த ஆலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் திறப்பதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் ஸ்பின்னிங் மில்லை கடந்த 15–3–2008 அன்று முதல் ஆலை நிருவாகம் கதவடைப்பு செய்துவிட்டது. ஸ்பின்னிங் மில்லைத் திறக்க வேண்டி 20–1–2012 முதல் தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பேச்சுவார்த்தைமூலம் முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கின்ற வகையிலேயும் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். நிச்சயமாக அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

## ஜரிகை இயந்திரம்

*8468—**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு, ஜரிகை இயந்திரத்தின் பாகமான நியூமேட்டிக் கம்பரஸர் இயந்திரத்தை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எடுத்த சபதம் முடித்துக் காட்டும், எழுச்சிக் கனலாய்த் தோன்றும் அம்மா, கொடுத்துச் சிவந்த புரட்சித் தலைவரின் கொள்கைச் சுடராய் விளங்கும் அம்மா, நினைத்த பணிகளை நடத்திக்காட்டும் நெஞ்சுரத்தோடு திகழும் அம்மா, எதிர்த்துக் கிளம்பும் எதிர்ப்பினையெல்லாம் துணிச்சல் கொண்டு தூள் தூளாக்கும் அம்மா, தன்னலம் கருதா தங்கத் தலைவி, உலகத் தமிழர்கள் போற்றும் ஒப்பற்ற தமிழினத் தலைவி, பொன்மனச் செம்மலின் கொள்கைகளைத் தாங்கி வெற்றிநடை போடும் வீரத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமும், தமிழக மக்களும் சிறந்து விளங்கிட மாபெரும் புரட்சி படைக்கும் புரட்சித் தலைவி, தமிழன் எங்கே துயருற்றாலும், எதிர்த்துக் குரல் கொடுக்கும் சிங்கத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, நல்லறம் காணும் தங்கள் நல்லாட்சியில், எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை 5 முறை சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக அறிவித்து, 3 முறை சட்டமன்ற உறுப்பினராக அமரச் செய்து, இன்று அமைச்சராக்கி, இந்த மாமன்றத்தில் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், என் குடும்பத்தினரும் நன்றியைத் தங்கள் திருப்பாதத்தில் வைத்து வணங்குகிறோம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் ஏழைகளாக இருந்துவிடக் கூடாது, அவர்கள் ஏழ்மையை நீக்கவும், அவர்கள் வாழ்க்கையில் உயரவும் அயராது உழைக்கின்ற ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும், என்னை இம்மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த பரமக்குடி தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா.



2012 ஏப்ரல் 9]

நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை வழங்கிட, ரூ.350 கோடியில் விலையில்லா வேஷ்டி சேலைகள் வழங்கும் திட்டம் தந்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 4 செட் சீருடை வழங்கும் திட்டம் தந்து, நெசவாளர் மக்களின் குல தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெசவாளர்களின் சார்பிலும், கைத்தறித் துறை சார்பிலும், நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா.

நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்கின்ற கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமானது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த, இரண்டு பொருட்கள் வாங்கினால் ஒரு பொருள் இலவசம் என்ற திட்டத்தின்மூலம் 78 வருட கோ–ஆப்டெக்ஸ் வரலாற்றில் 17 நாட்களில் ரூ.35 கோடிக்கு விற்பனை செய்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை செய்துள்ளது

[2012 ஏப்ரல் 9

என்பதை இந்த மன்றத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கோ—ஆப்டெக்சின் மொத்த விற்பனை ரூ.1,000 கோடியைத் தாண்டி கூட்டுறவுத் துறையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய இலக்கை எட்டியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

முற்பகல் 11–05

இளம் தலைமுறைகளைக் கவர்கின்ற வகையில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனங்களை நவீனப்படுத்த நிதியுதவி வழங்கியும், பொதுமக்களின் வசதிக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க உத்தரவுகளை வழங்கியும், குளிர்சாதன வசதியுடன்கூடிய கோ—ஆப்டெக்ஸ் நிறுவனங்களை அமைத்து, தனியார் ஜவுளி நிறுவனங்களோடு போட்டி போட்டு விற்பனையை அதிகப்படுத்திட நடவடிக்கை எடுத்தும், நகரின் முக்கிய வணிக வீதிகளில் கடைகளைத் திறந்திட உத்தரவுகளை வழங்கியும், நல்லாட்சி நடத்திடும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை.

(அ) பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு ஜரிகை இயந்திரத்தின் பாகமான நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரத்தை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யும்.

(ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 2011–2012 ஆம் நிதியாண்டில் 368 நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2012–2013 ஆம் நிதியாண்டில் 2,652 நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.



2012 ஏப்ரல் 9]

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதலில் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் எழுப்பிய வினாவிற்கு விரிவான பதிலை இங்கே அளித்திருக்கின்றார். மாண்புமிகு அமைச்சரவர்கள் பட்டு கைத்தறி நெசவு வைத்து சேலை நெய்பவர்களுக்கு மானியம் போக ரூ.6,000/– செலுத்தினால் நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் வழங்கப்படுகிறது என்றும் கூறியுள்ளார். இரண்டு பட்டு கைத்தறி நெசவு வைத்துள்ளவர்களுக்குத்தான் இது பொருந்தும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இடவசதி இல்லாமல் ஒரு பட்டு கைத்தறி நெசவு மட்டும் வைத்திருந்து, சேலை நெய்பவர்கள் நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் வாங்கும்போது அதன் விலையான 23,000/– ரூபாயில், மானியம் ரூ.10,000/– போக மீதம் ரூ.13,000/– செலுத்த வேண்டியுள்ளது. இதனால், ஒரு பட்டு கைத்தறி நெசவு வைத்திருப்பவர்கள் நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் வாங்க முன்வருவதில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இதனைப் பரிசீலனை செய்து, நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம்மூலம் பட்டு கைத்தறி நெய்பவர்களுக்கு மொத்தமாக 20,000/– ரூபாய் மானியம் வழங்குவதற்கு முன்வருவாரா என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்” என்பதே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் எண்ணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டு கைத்தறிகளுக்கு வடிவமைப்பை உருவாக்கும் பொருட்டு ஜக்கார்டு பெட்டிகளைப் பொருத்தியுள்ளனர். ஜக்கார்டு பெட்டியுடன் இணைந்துள்ள கம்பிகள் 30 கிலோ எடை கொண்டதாக உள்ளன. நெசவாளர்கள் அதனை இயக்கும்பொழுது அவர்களுடைய உடம்பு பலவீனப்படுகின்றது. இதனை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு, அவர்களுடைய இன்னல்களைக் களையும் பொருட்டு, நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் பொருத்தும்

[2012 ஏப்ரல் 9

திட்டத்தை அறிமுகப்படுத்தி, பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் வழங்குவதற்காக மத்திய பட்டு வாரியம் 10,000/– ரூபாயும், மாநில பட்டு வளர்ச்சித் துறை 10,000/– ரூபாயும், ஆக மொத்தம் ரூ.20,000/– மானியமாக வழங்கப்படுகிறது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நியூமேட்டிக் கம்ப்ரஸர் பொருத்துகின்றவேளையில், 2011–2012 ஆம் நிதியாண்டிற்கு 368 பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு 20,000/– ரூபாய் மானியத்துடன் நியூமேட்டிக் கம்ப்ரஸர் பொருத்தப்பட்டிருக்கிறது. எஞ்சிய 2,652 பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு, நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் கம்ப்ரஸர் இயந்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம் இரண்டு பட்டு தறிக்கும் பொருத்துகின்ற விதத்தில் அமைந்துள்ளது. ஒரே ஒரு பட்டுத் தறி வைத்திருப்பவர்களுக்கு மட்டும் இந்த கம்ப்ரஸர் இயந்திரம் வழங்கினால் மின்சார இழப்பு அதிகமாக ஏற்படுகின்றது. ஆகவே, இடவசதி காரணமாக இரண்டு பட்டு தறிகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரே கம்ப்ரஸர் இயந்திரம் வழங்கப்படுகிறது. ஒருவர் இடவசதி இல்லையென்று ஒரே ஒரு கம்ப்ரஸர் இயந்திரம் வாங்கினால், அதற்கும் அரசு 20,000 ரூபாய் மானியம் வழங்குகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல; எஞ்சியிருக்கின்ற 6,000 ரூபாயை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமே நெசவாளர்களுக்கு வழங்கி அவர்களுடைய கூலி உயர்வில் படிப்படியாகக் குறைவாகப் பெற்று வட்டியில்லாத கடனாக மீதம் இருக்கின்ற 6,000 ரூபாயையும் அந்தச் சங்கமே வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.



2012 ஏப்ரல் 9]

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம்மூலம் பட்டு கைத்தறி நெசவு நெய்பவர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறி நெசவாளர்களுக்கு 2 மாதங்களுக்கு 100 யூனிட் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இதற்காக அரசுக்கு வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவாகின்றது. அதுமட்டுமல்ல; விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் மின்சாரம் 2 மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றது. இதற்காக தமிழக அரசு 50 கோடியே 74 இலட்சம் ரூபாயை செலவாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மேற்கொண்டும் இலவசமாக மின்சாரம் வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

## இலவச பயண அட்டை

***6792—திருமதி ஆர். ராஜலட்சுமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2012 ஏப்ரல் 9

*தற்போது அங்கீகரிக்கப்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகையில் பயண அட்டை வழங்கப்பட்டு வருவதால், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.*

**திருமதி ஆர். ராஜலட்சுமி**: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மனுநீதிச் சோழன்கூட மணியோசை கேட்டால்தான் வந்து மக்கள் குறையைத் தீர்ப்பான். ஆனால், மக்களின் மனவோசைக்கிணங்க இன்று மெஜாரிட்டி அரசாங்கமாக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் மனவோசையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஓடிவந்து உதவி செய்துகொண்டிருக்கின்றார். இன்றைய மாணவர்கள்தான் நாட்டின் நாளைய தலைவர்கள் என்பார்கள். அதுபோல, இன்றைய சட்டக் கல்லூரி மாணவர்களே சட்டப் பேரவையின் நாளைய உறுப்பினர்களாகவும் ஆகக்கூடும். எனக்காக இதனைச் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**60—**

**ஓமியோபதி பிரிவு**

***5518—திரு. ஏ. லாசர்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், காணாவிலக்கிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?*



2012 ஏப்ரல் 9]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தற்போது தேனி மாவட்டத்தில் மாநில அரசு திட்டத்தின்கீழ் ஒரு ஓமியோபதி பிரிவு பெரியகுளத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையிலும், தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ் 2 ஓமியோபதி பிரிவுகள் எம்.சுப்புலாபுரம் மற்றும் தேவாரம் ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தேனி மாவட்டம், காணாவிலக்கிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும் வரும் காலத்தில் தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

*முற்பகல் 11–15*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், காணாவிலக்கில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இன்றைக்கு அது பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மிகப் பேருதவியாக இருந்து வரக்கூடிய ஒரு மருத்துவமனை. மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடியவர்கள் அங்கு வந்துபோய்க் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், மருத்துவக் கல்லூரியும் அமைந்திருக்கக்கூடிய அந்த மருத்துவமனையில் பல்வேறு வைத்திய முறைகளைத் துவக்கினால், அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்கிற தன்மையில் இந்தக் கேள்வியை அரசின் முன், பேரவைத் தலைவர் மூலமாக வைத்தேன். மேலும்,*

[2012 ஏப்ரல் 9

மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரக்கூடிய அந்த மருத்துவமனைக்குக் கடந்த 2 தினங்களுக்கு முன்பு நான் சென்று வந்ததினால், அரசினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் தெரியப்படுத்த வேண்டியது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஏ. லாசர்:** 5 ஆண்டுகள் எம்.பி., பி.எஸ்., படிப்பு முடித்தவர்கள் மேற்படிப்பு படிக்க சிறப்புப் பிரிவிற்கு அங்கேயே ஏற்பாடு செய்ய அரசு முயற்சித்தால் அந்தக் கல்லூரியும், அங்கு இருக்கக்கூடிய மருத்துவமனையும் ஏழை எளியோர்களுக்குச் சிறப்புப் பிரிவின்மூலம் வைத்தியம் செய்வதற்கு உதவியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நீங்கள் demand–இல் பேசுவதுமாதிரி இவ்வளவு விரிவாகப் பேசக்கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** எனவே அதுபற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதோடு, அங்கே M.R.I. Scan–ம் இல்லை; எனவே, அதுகுறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைக்கேற்பவும், அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்தும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2012 ஏப்ரல் 9]

# 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், நலத் திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும், அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப்படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.

இதேபோன்று, எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ, மாணவியரை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், செயல் வீரர்களாகவும், புகழ் மிக்கவர்களாகவும் ஆக்கும் சிறந்த செல்வமாம் கல்விச் செல்வத்தைப் போதிக்கும் உன்னதமான, தன்னலமற்ற பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாப் பணியை ஆற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அந்தவகையில், 1–1–2012 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப் படியை, அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 7 சதவீதம் மத்திய அரசு உயர்த்தியதுபோல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் 1–1–2012 முதல் அகவிலைப் படியை 7 சதவீதம் உயர்த்தி வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 9

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1–1–2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள், ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்கள் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வுமூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*முற்பகல் 11–20*

## 3. அறிவிப்புகள்

### (அ) சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் கைபேசி கொண்டுவர அனுமதி மறுப்பு மற்றும் உறுப்பினர்களுக்குக் கைபேசி பாதுகாப்பு மற்றும் Smart Card வசதிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (x)–ன்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தங்களின் கைபேசியினை எடுத்து வரக்கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் கைபேசியைப் பத்திரமாக பேரவை மண்டபத்தின் வெளியிலே வைத்துவிட்டு பேரவையினுள் செல்வதற்கு வசதியாக புறாக் கூண்டு அறைகள் (Pigeon Holes) பூட்டு, சாவி, வசதிகளுடன் பேரவையின் மேல்புறம் மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்களைக் கொண்ட அறைகள்



2012 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தங்களது இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண் கொண்ட புறாக் கூண்டு அறை சாவியினை நூலகப் பிரிவு–2இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், B.S.N.L. smart pay phones கருவிகள் பேரவை மண்டபத்தின் மேல்புற மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்கள், பப்ளிக் பிளாசா, சட்டமன்றப் பேரவை ஆண்கள் மற்றும் பெண்கள் உறுப்பினர்களின் ஓய்வறைகள், தி.மு.க. சட்டமன்றக் கட்சி அறை, கம்யூனிஸ்டு சட்டமன்றக் கட்சி அறையின் நுழைவாயில் மற்றும் பேரவை மண்டபத்தின் பத்திரிகையாளர்கள் மேல் மாடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருட காலம் செல்லத்தக்க வகையில் ரூ.100/– மதிப்பிலான smart card இலவசமாக இச்செயலகத்தால் வழங்கப்படும். அதில் ரூ.70/– வரை பேசிக்கொள்ளலாம். இவ்வசதியைத் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டுமாயின், உறுப்பினர்கள் தங்கள் சொந்த செலவில் ரீசார்ஜ் செய்துகொள்ள வேண்டும். ரீசார்ஜ் செய்துகொள்ள வசதியாக BSNL பணியாளர்கள் நூலகப் பிரிவு–2–ல் இருப்பார்கள். அவர்களிடம் தங்களது smart card அட்டைகளை ரீசார்ஜ் செய்துகொள்ளலாம்.

### 4. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இயந்திரத்தின் அச்சாணியாக விளங்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கும், நாளைய தலைமுறையை உருவாக்குவதிலே பெரும்பங்காற்றுகிற ஆசிரியர் பெருமக்களுக்கும், இந்தக் கோடையிலும் கருணை மழை பொழிந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிரியர்கள் என்றால் குற்றம் நீக்குபவர்கள் என்று ஒரு பொருள் உண்டு. குற்றம் நீக்குபவர்களுடைய குறையை நீக்கியிருக்கிற மனிதருள் மாமாணிக்கமாக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியப் பெருமக்கள்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 ஏப்ரல் 9

சமுதாயத்தின் சார்பிலும் அரசு ஊழியர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழக மக்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், பெருமைப்படுத்துகின்ற வகையிலும், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக, ஆசிரியர் பெருந்தகைகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் அனைத்துத் தரப்பு ஊழியர்களுக்கும் மத்திய அரசு வழங்கியதுபோன்று 1–1–2012 ஆம் தேதியிலிருந்து 7 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழக அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசுதான் தமிழக அரசைப் பார்க்காமல் இருந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நல்ல திட்டங்களையெல்லாம் மக்களிடத்தில் எடுத்துச் செல்வதிலே அரசு ஊழியர்களுக்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. தமிழகத்திலே ஏறக்குறைய 15 இலட்சத்திற்கு மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு இன்று மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக 7 சதவிகிதம் ஊக்கத் தொகை அளித்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் அவர்களை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பெருமக்கள் உட்பட தமிழக அரசு



2012 ஏப்ரல் 9] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட அனைவருக்கும் மத்திய அரசாங்கத்தினுடைய விதிமுறைகளுக்கேற்ப இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் ஊதியத்தை அதிகரித்து அறிவித்தமைக்காக மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

*முற்பகல் 11–25*

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தைப்போல மாநில அரசாங்கமும் 7 சதவிகித அகவிலைப்படி கொடுத்ததற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள், அரசுப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய 7 சதவிகித அகவிலைப் படியை தமிழக அரசும் 1–1–2012 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்து, அதுவும் 1,383.49 கோடி ரூபாய் அளவிற்கு ரொக்கமாக வழங்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[2012 ஏப்ரல் 9

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) மானியக் கோரிக்கைகள், 2012–2013, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு.*



2012 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

*2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2012–2013."

## 6. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

. . . . . .

### (அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.209,87,89,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 34, திரு. விசி. சந்திரகுமார்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 865, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1007, திரு. ப. டில்லி பாபு.



**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 468, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகராட்சிகளில் தேவையான சுகாதார ஊழியர்களை பணி நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 511, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 538, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, கம்பம் நகராட்சியில் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற வகையில் மின் மயானம் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 596, திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 605, திரு. எல். வெங்கடேசன்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோயிலூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 613, திரு. ப. சம்பத்குமார்.

**திரு. ப. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 653, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பசுமை வீடுகள் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 666, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதியில் உள்ள பேரூராட்சிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 676, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 689, திரு. ப. பார்த்தசாரதி.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சி 128, 138 ஆகிய வட்டங்களில் டாக்டர் கானுநகர் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. பல நாள் குடிநீர் கிடைக்காமல் மக்கள் தவிக்கிறார்கள். அங்கு சீரான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 703, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதியிலுள்ள கிராமம் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் சுத்தம் செய்து பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 766, திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 844, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாச்சலம் தொகுதியில் குடிநீர் மாசுபட்டு வருவதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பாதுகாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 854, திரு. அ. பாஸ்கர்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி நகரத்தில் இராமக்கான் ஏரிப் பகுதியில் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 859, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் நகராட்சி, வாத்திமனை, ஜட்ஜ்மனை, குபா மஸ்ஜித் பகுதி, மஸ்ஜிதே அக்ஸா போன்ற பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய், மழைநீர்க் கால்வாய் இல்லாமல் மழைக் காலங்களில் ஏரிபோல் காட்சியளிக்கும் இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான கழிவுநீர்க் கால்வாய், மழைநீர்க் கால்வாய், சாலை வசதி, தெரு விளக்குகள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 864, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 989, திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அதிராம்பட்டினம் பேரூராட்சியின் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *993*, திரு. ஆர். ராமமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *994*, திரு. வீ.பி. நாகைமாலி.

***திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் (Metro Water) உதவிப் பொறியாளர்களுக்கு கடந்த இருபது ஆண்டுகளாக எவ்விதப் பதவி உயர்வும் வழங்கப்படாமல் உள்ளது. அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1043*, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1082*, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1115*, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிப் பகுதியில் மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தவிர்த்திட கழிவுநீர்க் கால்வாய் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1161*, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 40,000—க்கும் மேற்பட்ட ஜனத்தொகை உள்ள மாப்பிள்ளையூரணிக்குட்பட்ட பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு பெரிய அளவில் நிலவி வருவதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1181*, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1420*, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி நகராட்சி, 28—வது வார்டு, முள்ளிப்பட்டி விரிவு பகுதியில் மினி டேங்க் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,698,82,44,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,516,06,17,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.209,87,89,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42— ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 704, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 207, திரு. அ. கணேஷ்குமார்.



**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 478, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1027, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 520, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 551, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, சின்னமானூர் ஒன்றியம், அழகாபுரி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக்கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 597, திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 606, திரு. எல். வெங்கடேசன்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோயிலூர் தொகுதிக்குட்பட்ட பல கிராமங்களில் பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 614, திரு. ப. சம்பத்குமார்.



**திரு. ப. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதிக்குட்பட்ட பல கிராமங்களில் பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 667, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதியில் அதிக மக்கள்தொகை உள்ள பெரிய ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 761, திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 790, திரு. சி.எச். சேகர்.

*முற்பகல் 11–30*

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் கும்மிடிப்பூண்டி, எல்லாபுரம், பூண்டி ஒன்றியப் பகுதிகளிலுள்ள இந்திரா காந்தி நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகள் பராமரிப்புக்கென்று தனி நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 913, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் தொகுதியில் உள்ள கருவேப்பலங்குறிச்சி, நல்லூர் ஆகிய இடங்களில் புதிய சமுதாயக்கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 923, திரு. அ. பாஸ்கர்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி ஒன்றியம், சோகத்தூர் ஊராட்சி, சவுளுப்பட்டி முதல்



மாட்டுக்கானூர் வரை தார் ரோடு அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 931, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 938, திரு. க. அன்பழகன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 939, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 941, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகப் பகுதிகளில் இடிந்து விழக்கூடிய நிலையிலுள்ள பழுதடைந்த கச்சா வீடுகள், தொகுப்பு வீடுகளை மறு சீரமைப்பதற்காக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 984, திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, குத்தாக்குறிச்சி கிராமத்தில் புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர்த் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 998, திரு. வீ.பி. நாகைமாலி.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு காலமுறை ஊதியம், பணி நிரந்தரம் மற்றும் பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1049, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 1118, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இளையநயினார் குளம் வடக்கூர்/தெற்கூரை ஆகியவற்றை அருகில் உள்ள உதயத்தூர் ஊராட்சியுடன் இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1162, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தருவைகுளம், வெங்காப்பட்டி போன்ற கடலோர கிராமப் பஞ்சாயத்துக்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1179, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1439, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி ஒன்றியம், சேவூர், சி.பி. நகர், ஸ்ரீராம் நகர் ஆகிய பகுதிகளில் பக்கக் கால்வாய் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுடைய நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர்

@ 239 முதல் 614 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று, தமிழகத்தில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு, மாவட்ட ஊராட்சிக் குழு என்று மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த மூன்றடுக்கு அமைப்பு முறையை மாற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாக பலர் குரல் கொடுத்து இந்த அவையிலே பேசினாலும்கூட, இந்த அரசு இதைக் கட்டாயம் மாற்றும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனவே, மத்திய அரசை வலியுறுத்தி மூன்றடுக்கு அமைப்பு முறையை மாற்றி, இரண்டடுக்கு அமைப்பு முறையைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, உள்ளாட்சி அமைப்புகளிலே பணியாற்றுவதற்காக இலட்சக்கணக்கான இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்திலே காத்திருக்கிறார்கள். ஆனால், தினக்கூலி அடிப்படையிலே, சாதாரண படிப்பு படித்துவிட்டு வருகின்றவர்கள், 2 வருடம், 3 வருடம் அனுபவம் பெற்றவுடன் நிரந்தரப் பணியாளர்களாக ஆகி, அலுவலர்களாகவே மாறிவிடுகின்றனர். இப்படிக் குறுக்கு வழியிலே வேலைவாய்ப்பு அதிகார வர்க்கத்தின் துணையோடு பெருமளவில் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலே, தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமித்துக்கொள்ளலாம் என்கின்ற அரசின் உத்தரவை மாற்றியமைத்து, அரசினுடைய நிதிநிலை இடம் கொடுக்கவில்லையென்று சொன்னாலும்கூட, தினக்கூலி அடிப்படையில் அவர்களைப் பணியமர்த்துவதை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நேரடியாகச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒவ்வொரு பணிக்கும் ஒரு கல்வித் தகுதியை அடிப்படை கல்வித் தகுதியாக அறிவிக்க வேண்டும். ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குக்கூட இன்றைக்கு 8 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டுமென்ற நிலை இருக்கின்றபொழுது, மக்களைப் பாதுகாக்கின்ற, மக்கள் நலனுக்கான பணிகளை மேற்கொள்கின்ற

ஊரகப் பணியிலே இருப்பவர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலே பணியிலே இருப்பவர்கள் கட்டாயம் அதற்குரிய கல்வித் தகுதியையும் பெற்றிருக்க வேண்டும்; அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணியையும் செய்வதற்குரிய பணித் திறன் தகுதியும் இருக்க வேண்டும். அது ஊராட்சி செயலாளராக இருக்கட்டும்; அல்லது கிளார்க்காக இருக்கட்டும்; எந்த உள்ளாட்சி அமைப்புப் பணியாக இருந்தாலும் அதற்கான கல்வித் தகுதியை நிர்ணயம் செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிட்டத்தட்ட 12,524 ஊராட்சிகளுக்கும் கணினி வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை கிராம ஊராட்சி செயலாளர்களே இயக்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு படித்தவர்கள்தான் கிராம ஊராட்சி செயலாளர் பதவிகளில் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, 10 ஆம் வகுப்பு படித்தவர்களை வைத்து இயக்காமல் வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற வகையிலே, கணினிப் பயிற்சியை முடித்தவர்களை, கணினியை இயக்கத் தகுதியானவர்களை அந்த இடத்திற்குப் பணியிலே அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–35*

ஊராட்சி ஒன்றியங்களிலே 6,124 பணியிடங்கள் நிரப்பப்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் சொல்லப்பட்டது. ஆனால், இதுவரை அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்றே தெரிகிறது. எனவே, காலியாக இருக்கின்ற அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல; இன்றைக்கு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டு பரப்பளவில் மிகப் பெரியதாக இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் கூடுதலாகப் பொறியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. உதவிப் பொறியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவிதப் பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு, அரசுப் பொறியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். பொதுவாகவே, அரசு ஊழியர்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பணியிட மாற்றம் செய்யப்படவேண்டும் என்று விதிகள் இருந்தாலுங்கூட, பெரும்பாலான இடங்களிலே



அது கடைப்பிடிக்கப்படுவது இல்லை. அதனால் பல்வேறு நிருவாகச் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் ஏற்படுவதற்கும் இது ஒரு வாய்ப்பாக அமைகிறது. எனவே, இதை மாற்றி அமைக்கவேண்டும்.

2016 ஆம் ஆண்டு நடைபெறக்கூடிய உள்ளாட்சித் தேர்தலுக்குள், ஊராட்சிகளின் எல்லைகள் மறுசீரமைப்பு, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலே இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றத் தொகுதியின் எல்லைகள், மறுசீரமைப்பிலே உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய புதிய சட்டமன்றத் தொகுதியினுடைய 172 ஒன்றியங்கள் இன்றைக்கு இரண்டு மற்றும் மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்குள்ளே வருகிறது. எனவே, கண்டிப்பாகப் பரப்பளவிலே பெரிதாக இருக்கின்ற ஒன்றியங்களையெல்லாம் பிரித்தும் ஒரு ஒன்றியம் முழுமையாக அந்த சட்டமன்றத் தொகுதிக்குள்ளே வருவதைப்போல ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். சென்னிமலை ஒன்றியம், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தது. காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது. அதேபோல, பெருந்துறை தொகுதி, ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்தது. இந்த மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் சென்னிமலை ஒன்றியம் வருகிறது. இதிலே, உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற நிருவாகம் செய்வதில் சட்டமன்ற அலுவலர்களுக்கும் சிரமமாக இருக்கிறது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, ஊராட்சி ஒன்றிய எல்லைகளை மறுசீரமைப்பில் மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. இதை முறையாகச் செம்மைப்படுத்தி, ஒரு தொகுதிக்குள்ளே ஒரு ஒன்றியம் வருகின்ற வகையிலே, மாற்றி அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அதேபோல, திருப்பூர் மாவட்டத்திலே சாமலாபுரம் பேரூராட்சி இருக்கிறது. அது கோவை மாவட்டத்திலே இருக்கின்ற சூளூர் தொகுதியில் வருவதால் அதிலே பல நிருவாகச் சிக்கல்கள் இருக்கின்றன. எங்கள் சட்டமன்ற உறுப்பினருக்கும் பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அதை நிச்சயம் மாற்றித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி, சிரமமான பணிதான். எப்படிப்பட்ட சிரமமான பணியாக இருந்தாலுங்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மக்களைக் காண்பதற்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே உள்ள ஒன்றியக் குழுத் தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களோடு இணைந்து செயலாற்றுகின்ற வகையில் ஏற்பாடு செய்வதற்கு நிச்சயமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, மாற்றி அமைக்கப்படுகின்ற, சீரமைக்கப்படுகின்ற இந்த உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளையெல்லாம் அரசியல் விருப்பு வெறுப்புக்கெல்லாம் இடந்தராமல், அரசினுடைய வழிகாட்டுதலின்படி, அரசு அறிவித்துள்ள நெறிமுறைகளின்படி, அதைச் செயல்படுத்த அரசு கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசியல் விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் என்ற கருத்தை முதலில் சொல்லிவிட்டு, அடுத்ததாக அரசியல் நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு அது இருக்கவேண்டுமென்று சொன்னார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டத்தின்படி ஆட்சி நடத்தக்கூடியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எந்தச் சூழ்நிலையிலும் அரசியல் நெறி மாறாமல் அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரே ஒரு உதாரணம் என்னுடைய தொகுதியிலே. ஈரோடு கிழக்கு தொகுதியிலே ஈரோடு மாநகராட்சியின் 36 வார்டுகள் இருக்கின்றன. ஆனால், அந்த 36 வார்டுகளை எப்படிப் பிரித்திருக்கிறார்கள் என்று கடந்த கூட்டத் தொடரிலும் நான் பேசினேன். ஆனால், இப்பொழுது எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 36 வார்டுகளையும், நான் இந்த இடத்திலே மீண்டும் அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று சொல்ல விரும்பவில்லை. மொத்தம் 4 மண்டலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஆனால், அந்த 4 மண்டலங்களிலே, ஒரு மண்டல அலுவலகம்கூட, ஈரோடு கிழக்குத் தொகுதிக்குள்ளே வராத அளவிற்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஈரோடு கிழக்குத் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மண்டல அலுவலகம் பழைய வீரப்பன்சத்திரம் நகராட்சி அலுவலகத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஈரோடு மாநகராட்சி மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதையும் ஈரோடு மேற்குத் தொகுதிக்குக் கொண்டு செல்கிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் வேண்டாம் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் என்பவர்கள், இன்று நாம் இருக்கலாம்; நாளை இன்னொருவர் அந்த இடத்திற்கு வரலாம். அங்கே பிரிக்கப்படுகின்ற அமைப்பு, அந்தப் பகுதியினுடைய மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலேயும், அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறும்தான் பிரிக்கப்படுகிறது. தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ உங்களுக்காகவே பிரித்ததைப்போல, இங்கே கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழகம் முழுவதுமே எந்தத் தொகுதியில் நின்றாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறக்கூடிய செல்வாக்குமிக்க ஒரு இயக்கமாக இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாளை தேர்தல் வருகிறது என்று சொன்னால், அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுவிடும். தயவுசெய்து தனிப்பட்ட முறையில், யாருக்காகவும் இதுபோன்ற அமைப்புகளைப் பிரிப்பதில்லை. சட்ட ரீதியாக, அரசியல் ரீதியாக, அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மக்கள் தொகையின் அடிப்படையிலேதான் அது பிரிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சின்ன கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், இந்த மானியக் கோரிக்கையில் வேறு எதையும் பேச முடியாமல் போய்விடும். அது எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் தனிப்பட்ட முறையிலே, நிச்சயமாகக் கடிதமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கிறேன். அதன் பிறகு, அதிலே நியாயம் இருந்தால், மாற்றம் செய்து கொடுங்கள்.

அடுத்து, பட்ஜெட் உரையிலே சொத்து வரி வாரியம் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு கோரிக்கை. சொத்து வரி வாரியத்தை அமைத்து, சொத்து வரியைக் கணக்கிடும்போது ஒரே சீராக இருக்குமாறு பார்த்து செய்ய வேண்டும். அதேநேரத்தில்,



அந்த வாரியத்தின் மூலமாக தயவுசெய்து சொத்து வரியை உயர்த்திவிட வேண்டாம் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொண்டுவரப்படும் என்று அறிவித்துள்ள அந்த வாரியம் குறித்த அறிவிப்பை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசை திருப்பிவிடக்கூடாது. அந்த வாரியத்திற்குச் சொத்து வரி போடுவதற்குரிய உரிமை இல்லை. அது ஆலோசனை மட்டும்தான் கூற இருக்கிறது. அவ்வளவுதான். ஆலோசனையை ஏற்றுக்கொள்வதும், ஏற்காததும் அரசினுடைய பொறுப்பு. தயவுசெய்து அந்த வாரியம்தான் வரி போடுகிறது என்று தவறாக எண்ணிவிடாதீர்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வசதிக்காகப் பல்வேறு திட்டங்கள் இதிலே அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

பென்னாகரம் தொகுதியிலே இருக்கின்ற நாகமரை என்ற ஊராட்சி, மேட்டூர் அணையினுடைய வால் பகுதியில் இருக்கிறது. ஆனால், அந்த இடம் வரைக்கும்தான் நல்ல குடிதண்ணீர் கிடைக்கிறது. ஆனால், அங்கிருந்து, 2 கிலோ மீட்டரிலிருந்து 5 கிலோ மீட்டர் வரையுள்ள சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற பல குக்கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தரப்படவில்லை. எனவே, இதுபோன்ற இடங்களை அரசு ஆராய்ந்து, அந்த இடங்களுக்கு எல்லாம், வாய்ப்பிருக்கின்ற இடங்களுக்கு உடனடியாக நல்ல குடிநீரை வழங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசுப் பணிக்கு ரூ.230/– என்ற அளவிலே சிமென்ட் மூட்டைகள் கிடைக்கின்றன. ஆனால், நான்

கேள்விப்பட்ட வரையிலும், கடந்த 4 மாத காலமாக டெண்டர் விடப்பட்ட பணிகளில் 75 சதவிகிதப் பணிகள் இன்னும் துவக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று ஒப்பந்ததாரர்களிடம் கேட்டால், 'அரசு சிமென்ட் வரவில்லை' என்கிறார்கள். அரசு சிமென்ட் ஏன் வரவில்லை என்று கேட்டால், 'கொஞ்சம், கொஞ்சமாகத்தான் வருகிறது' என்கிறார்கள். கொஞ்சம், கொஞ்சமாக வந்தால்கூட, அதை வாங்கிச் செய்யலாம் அல்லவா என்று கேட்டால், அவர்கள் வேறு மாதிரியாகச் சொல்கிறார்கள். நான் அரசையோ அல்லது இங்கே இருக்கிற உங்களையோ யாரையும் குறை சொல்லவில்லை. அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கின்ற B.D.O. போன்ற அதிகாரிகள், தாய் திட்டத்திற்கும், பசுமை வீடுகள் கட்டும் திட்டத்திற்கும்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தை ஒப்பந்ததாரர்களிடத்திலே சொல்லி, அந்த வேலையைத் தொடங்குங்கள், மற்ற வேலையை நிறுத்தி விடுங்கள் என்று சொல்கிறார்கள். இதை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு தாய் திட்டமும் ஒன்றுதான்; பசுமை வீடுகள் கட்டும் திட்டமும் ஒன்றுதான்; சாலைகளை மேம்படுத்தக்கூடிய, சாலை வசதிகளைப் பெருக்கக்கூடிய திட்டமும் ஒன்றுதான்; இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டமும் ஒன்றுதான். இப்படி அரசின் வாயிலாகக் கொண்டுவரப்படுகின்ற அனைத்துத் திட்டங்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்கள்தான்.

*முற்பகல் 11–45*

எல்லாக் குழந்தைகளும் ஒரே குழந்தைகள்தான். இதிலே எந்தக் குழந்தைக்கு சுண்ணாம்பை வைத்து, எந்தக் குழந்தைக்கு வெண்ணெயை வைப்பார்கள்? தயவுசெய்து இதுபோன்ற கருத்தைச் சொல்லாதீர்கள். ஏதோ அரசியல் ரீதியாகச் சொல்வதற்கு வேண்டுமென்றால், இது நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், பசுமை வீடுகள் கட்டும் திட்டமும், 'தாய்' திட்டமும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



எதிர்காலத்தில் யாருமே ஏழ்மையாக இருந்து விடக்கூடாது; யாருமே வீடு இல்லாமல் இருந்து விடக்கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம் அது. அப்படிக் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தின்மீது, பொறாமை கொண்டவர்கள் சிலர் குறை சொல்லலாம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்துப் பணிகளையும் வேகமாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஆங்காங்கு இருக்கின்ற அதிகாரி பெருமக்களை முடுக்கிவிட்டு, எந்தக் காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிக்கப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லை. ஒரு உதாரணம்; கிணத்துக்கடவு ஒன்றியம் இருக்கிறது. அதிலே 34 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதிலே 6 பஞ்சாயத்துகளிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்த 6 பஞ்சாயத்துகளைத் தவிர, மற்ற 28 ஊராட்சிகளிலே எந்த வேலையுமே நடைபெறவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, இது ஒரேயொரு உதாரணம். இதை நான் குறையாகச் சொல்லவில்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துக் கண்டித்தால் போதும்; அனைத்து வேலைகளும் நடைபெற ஆரம்பிக்கும். அதைத்தான் செய்யச் சொல்கிறேனேயொழிய, இதைக் குறையாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே அவர் ஒரு கருத்தைச் சொன்னார். ஒன்றியங்களைப் பிரிக்கின்றபோது, அது தொகுதிக்குட்பட்டதாக வர வேண்டுமென்று கருத்து சொன்னார்.

அவர் கருத்தை ஏற்றுக் கொண்டேன். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னேன்.

அதேபோல, இப்பொழுது ஒரு தொகுதியைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். அதற்கு நான் இங்கே விளக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். 'தாய்' திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த 5 ஆண்டுகளுக்குள்ளாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா குக்கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான், ஒவ்வொரு தொகுதியிலும், 5 ஊராட்சிகள், 6 ஊராட்சிகள் என்ற அடிப்படையிலே தேர்ந்தெடுத்து பணிகளைச் செய்கிறோம். கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டிலே ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, இந்த 2012–2013 ஆம் நிதியாண்டில், 2,250 ஊராட்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன. கடந்த நிதியாண்டில் 2,020 ஊராட்சிகள் எடுக்கப்பட்டன. இந்த நிதியாண்டில் 2,250 ஊராட்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன. இப்படி ஒவ்வொரு ஆண்டும், அதிக ஊராட்சிகள் எடுக்கப்பட்டு, இன்னும் 5 ஆண்டுகளுக்குள்ளாக எல்லாப் பணிகளும் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல எதுவும் கிடையாது. அனைத்துத் திட்டங்களும் ஒரேமாதிரியாக சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டிலே கோவை மாநகராட்சியிலே,



மேட்டுப்பாளையம் சாலையிலே, ஊட்டி–கோத்தகிரி–குன்னூர்–கூடலூர் பகுதிகளிலே இருந்து வருகின்ற பேருந்துகளை நிறுத்துவதற்காக ஒரு கூடுதல் பேருந்து நிலையம் ரூபாய் 2 கோடி செலவிலே நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் குறித்து இதுவரை சரியான விவரம் இல்லை. அதன்பிறகு 2010 ஆம் ஆண்டிலே ரூபாய் ஏழரைக் கோடி செலவிலே அங்கே ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் 2003 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு, அது முடிக்கப்பட்டதா அல்லது 2010 ஆம் ஆண்டிலே அது நிறுவப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல, 2003 ஆம் ஆண்டிலே 'ஈரோட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடப்பு ஆண்டிலேயே தொடங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 2013 ஆம் ஆண்டு வரப்போகிறது. ஆனால், 2003 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் ஆகியும்கூட, அந்தத் திட்டம் எப்பொழுது முடியும் என்பது போன்ற குறிப்புகள் ஏதும் இல்லை. இது எப்பொழுதுதான் முடியும் என்பதும் தெரியவில்லை. (குறுக்கீடு) அதேபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் இருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தின்போதே, இது தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்கள். பொதுவாக அப்படி கேள்வி எழுப்பியபோது, அப்பொழுது சொன்னேன்; பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக, நெரிசல் மிகுந்த பகுதியில் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பணியை மேற்கொள்கின்றபோது, சில இடங்களில் குறிப்பிட்ட கால அளவிற்குள் அந்தப் பணி முடிக்கப்படாமல் இருக்கும். அதுபோன்ற ஒரு நிலைமை இருந்தால், விரைவாக அந்தப் பணி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் எப்பொழுது முடிப்பீர்கள்?

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *நான் இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் 9 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** இப்பொழுது ஊராட்சியைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்; இன்னும் பேரூராட்சி இருக்கிறது; நகராட்சி இருக்கிறது; மாநகராட்சி இருக்கிறது. *(சிரிப்பு)* 2006 ஆம் ஆண்டிலே மாண்புமிகு முதல்வர் அவர்களாலே, நாகை மாவட்டம், மயிலாடுதுறையிலே பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், இன்றுவரையிலும் அந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அங்கு இடமே ஒதுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, கடந்த முறை அங்கே ஆய்வுக்குச் சென்றிருந்தார். எனவே, அந்தப் பேருந்து நிலையத்தை இந்த நிதியாண்டிலேயாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

அதேபோல, என்னுடைய தொகுதியில் எனக்கு ஏற்பட்ட அனுபவம். உள்ளாட்சியிலே கட்டடம் சம்பந்தமான டெண்டர் எடுப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் முன்வருவதில்லை. காரணம் கேட்டால், கட்டுமானப் பொருட்களின் விலை அதிகமாக உள்ளன; அதனால், டெண்டர் எடுத்தாலும் நஷ்டம்தான் ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். அதனால், அவர்கள் அந்த வேலையைச் செய்கின்ற வகையில், அவர்களுக்கு அந்த டெண்டர் தொகையைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஊராட்சிப் பகுதிகளிலே ஒரு வேலையை முடித்து, Bill Pass பண்ணும்போது, பல்வேறு இனங்களின்கீழ் 7.8% பணம் பிடித்தம் செய்யப்படுகிறது. ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு அப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், பல ஆண்டுக் காலமாக யாருக்குமே அந்தப் பணம் திருப்பித் தரப்படவில்லை. அதிலே எங்களுக்கு 7.8% நஷ்டம் ஏற்படுகிறது என்றெல்லாம் ஒப்பந்ததாரர்கள் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து,



இதில் உண்மையிருப்பின் நிச்சயமாக அந்தப் பணத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்தால், அவர்கள் மேலும் விரைவாகப் பணிகளைச் செய்வதற்கு நன்றாக இருக்கும்.

இன்றைக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரே ஒரு கையெழுத்திலே ஊராட்சித் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிலும், குறிப்பாகக் கடந்த காலங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஊராட்சித் தலைவர்களை எல்லாம் பதவி நீக்கம் செய்ததை நாம் பார்த்திருக்கிறோம். அதிலும் ஊராட்சித் தலைவர் காசோலையில் கையெழுத்துப் போடுகிறார், துணைத் தலைவரும் காசோலையில் கையெழுத்துப் போடுகிறார். அதன் பிறகு, அந்தக் கையெழுத்தைச் சரி பார்க்க வேண்டிய இடத்தில் B.D.O. இருக்கிறார். இப்படி, ஒருவருக்கொருவர் தொடர்புடையதாகத்தான் ஊராட்சி நிருவாகம் இருக்கிறது. ஆனால், தவறு ஏற்பட்டால் தலைவர் மட்டும்தான் பாதிக்கப்படுகிறார். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், தவறு கண்டுபிடிக்கப்படும்போது ஊராட்சித் தலைவரை மட்டும் பதவியிலிருந்து நீக்குவதை விட்டுவிட்டு, ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் ஒரு குழுவை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைத்து, அதன்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 'உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும்' என்பது உலக நியதி. அதுபோல, யார் தவறு செய்தாலும், அவர் B.D.O. ஆக இருக்கட்டும், ஊராட்சித் தலைவராக இருக்கட்டும், துணைத் தலைவராக இருக்கட்டும், ஊராட்சிச் செயலாளராக இருக்கட்டும், நிச்சயமாக இவை களையப்பட வேண்டும்.

அதேபோல, ** குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் பெண்கள் இருக்கின்ற ஊராட்சிகளிலே **, நீங்கள் உடனே எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லுங்கள் என்று கேட்பீர்கள். தயவுசெய்து அதைக் கூற முடியாது. ஏனென்று கேட்டால், ஒரு ** குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை வெறும் பொம்மையாக வைத்துக் கொண்டு மற்றொரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஊராட்சியில் அதிகாரம் செய்கிறார்கள். இந்த நேரத்திலே, அவையிலே, இந்த ஊர் என்று சொல்லுகின்றபொழுது அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக எங்கள்மீது ஒரு தவறான, கோபப் பார்வை பார்க்கின்ற ஒரு நிலை உருவாகிவிடும். எனவே, அதைச் சொல்ல விரும்பவில்லை. அதுபோன்ற இடங்கள்

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பல இருக்கின்றன. இதையும், அரசு கவனித்து சரி செய்து கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் ** சமுதாயம் என்று சொன்னார்கள். அதை இரு வேறுபட்ட சமுதாயம் என்று வைத்துக் கொள்ளலாம். ** என்று இருக்காது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை இங்கே கூறியிருக்கிறார்கள். அது நீண்டகாலமாக இருந்து வந்த ஒரு பிரச்சினை. ஆனால், தந்தை பெரியார் அவர்கள் போராடியதன் காரணமாக, அதைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இன்றைய முதலமைச்சராக இங்கே வீற்றிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ** சமுதாயத்திற்கு சரியான முறையில் அவர்களுக்கு மரியாதை கொடுப்பதோடு, சட்ட ரீதியாகவும் அதனைச் செயல்படுத்துவதற்குரிய நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதுபோன்ற நல்ல காரியங்கள் நடப்பதை வரவேற்கிறோம். தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக திருமதி பெருமாள் என்பவர் இருந்து வருகிறார். (குறுக்கீடு) ஆனால், அவரை வந்து, . . இல்லை, இல்லை. point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக திருமதி பெருமாள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்பவர் இருக்கிறார். அவர் இரண்டாவது முறையாகப் பெருந்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் ஒருநாள் கூட பெருந்தலைவராக அவருக்குரிய இருக்கையில் அமரவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து 10 ஆண்டுக் காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக அவர் தலைவராக வருகிறார் என்று சொன்னாலே, அங்கே செல்வாக்காக இருக்கிற காரணத்தினாலே இரண்டாவது முறையாக வர முடியும். அவருக்கு அந்தப் பதவிக்கான மரியாதை இருந்தால்தான் இரண்டாவது முறையாக வர முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார். நிச்சயமாக அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதுபோன்ற ஒரு சூழ்நிலை இருந்தால் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையிலும், கிராமத்திற்கு ஊராட்சி செயலாளராக இருப்பவர்கள் முன்பு உதவியாளராக இருந்தவர்கள். அவர்களுக்கு, இப்பொழுது, செயலாளராகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் அவர்களை நியமித்துக்கொள்ளவும், மாற்றம் செய்யும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதும், அதேபோல் மனைகளைப் (லே–அவுட்) பிரிப்பதற்கும், ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம், ஒவ்வொரு ஊராட்சியிலும் அவர்களுக்குத் தகுந்தாற்போல அனுமதி வழங்கப்படுகிறது.

*முற்பகல் 11–55*

ஏனென்று சொன்னால், இதில் அரசின் சரியான ஒரு வழிகாட்டுதல் நெறிமுறைகள் இல்லாமல் இருக்கிறதோ என்கின்ற ஒரு ஐயம் எனக்கு இருக்கிறது. அதனால் ஊராட்சிகளைத் தரம் பிரித்து, எப்படி, நகராட்சிகளில் வரி போடுகிறபோதும், மாநகராட்சியிலே வரி போடுகின்றபோதும், மண்டலங்களாகப் பிரித்து, இந்த மண்டலத்தின் தரம் இவ்வளவுதான், இத்தனை சதவிகிதம் வரி போட்டே ஆக வேண்டும், இத்தனை பைசா ஒரு சதுர அடிக்கு என்று கணக்குப்போட்டு, ஒரு கணக்கு வைத்திருப்பதைப் போல, ஊராட்சிக்கும் கட்டாயம் கொண்டு வர வேண்டும். ஏனென்று சொன்னால், ஒரே ஒரு உதாரணம். என்னுடைய மாநகராட்சியை ஒட்டி ஒரு ஊராட்சி இருக்கிறது. எங்கள் மாநகராட்சியைவிட மிகப் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது அந்த ஊராட்சி. ரோட்டிற்கு இந்தப் பக்கம் ஒரு வரியைக் கட்டுகிறார்கள். ஒரு செலவு செய்கிறார்கள். ஆனால், அந்தப் பக்கம் ஒரு செலவு செய்கிறார்கள். ஆனால், அந்தச் செலவு இதே அளவிற்கு ஆகிறது. அவர்கள் செய்கின்ற செலவுகள் வேறு மாதிரியாக பல பேர்களுக்கு அது செல்கின்றது. எனவே, வருவாயை முழுமையாக அரசுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அதுபோன்ற ஊராட்சிகளைத் தரம் பிரித்து, ஊராட்சி வாரியாக நெறிமுறைகளை உருவாக்கி 'ஏ கிரேடு' ஊராட்சி என்று சொன்னால், இவ்வளவுதான் என்று நிர்ணயம் செய்தீர்கள் என்றால், நிச்சயமாகப் பொது மக்கள் பாதிப்பிலிருந்து தப்பிப்பார்கள். முறைகேடுகளும் பெருமளவில் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள். இன்னும் இரண்டு subject–கள் இருக்கின்றன. நீங்கள் சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள். ஒன்பது உறுப்பினர்கள் இன்னும் உரையாற்ற இருக்கின்றார்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அதைப்போல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் பட்டியலே தமிழக அரசிடம் இல்லை. அதை ஏற்றுக்கொள்ளவுமில்லை என்று



சொன்னார்கள். ஆனால், இப்பொழுது பசுமை வீடு திட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களிலிருந்து என்று சொல்கிறார்கள். ஆனால், வறுமைக்கோட்டிற்குக் கீழே என்பதை எவ்வாறு நிர்ணயிக்கிறார்கள் என்பது எங்களுக்கு இன்னும் தெரியவில்லை. அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே என்று இருக்கின்ற பட்டியலின் நகல்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி 2007 ஆம் ஆண்டிலே ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், இன்றுவரை அதுபோல் எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. வேறு யாருக்காவது வந்திருக்கலாம். எங்களுடைய தொகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியல் எங்களிடம் இல்லை. எனவே, அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பது யார் என்பதை, நம்முடைய மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருக்கும் திரு. மாண்டெக் அலுவாலியா 26 ரூபாய் இருந்தால் போதும் என்று கூறியிருக்கிறார். இப்படி அவரவர் சிந்தனைகளுக்கேற்றவாறு வறுமைக்கோட்டை முடிவு செய்கிறார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாழ்க்கையில் கீழ் நிலையில் இருக்கின்ற அத்தனைப் பேர்களையும் தூக்கிவிட வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது விலையில்லா அரிசி, மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் யாருக்கெல்லாம் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், ரேஷன் அட்டை வைத்திருக்கின்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் -- 1 கோடியே, 84 இலட்சம் குடும்பங்களுக்கும் கொடுக்கிறார்கள்.

அதேபோல், விலையில்லாத அரிசி கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் யார் யாரெல்லாம் தாழ்ந்த நிலையில் இருக்கின்றார்களோ, கீழ் நிலையில் இருக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய தாய் உள்ளம் கொண்டவராக

[திரு. கே.பி. முனுசாமி] [2012 ஏப்ரல் 9

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தபொழுது, ஒரு ஊராட்சியைப் பேரூராட்சியாக்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், கடந்த முறை பேரூராட்சிக்கு அதிக நிதி வர வேண்டுமென்று சொன்னால், ஊராட்சியினுடைய அளவிற்குத் தரத்தைச் சிறிது குறைக்க வேண்டுமென்று சொல்லி சிறப்பு நிலை ஊராட்சி என்ற புதிய அமைப்பை உருவாக்கினார்கள். இன்றைக்கு மீண்டும் பேரூராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. பேரூராட்சியாக இருப்பதுதான் சரி என்ற நிலைப்பாடு இருந்தால், எங்கள் மாவட்டத்திலேயே நகராட்சியாகக்கூடிய தகுதியிலே இருக்கின்ற ஊராட்சிகள் எல்லாம் ஊராட்சிகளாகவும், பேரூராட்சிகள் தகுதியில் இருந்தாலும் இன்னும் ஊராட்சியாகவே இருக்கின்றன. அவற்றையெல்லாம் நகராட்சி அளவிற்குத் தரம் உயர்த்த வேண்டும். இல்லையென்று சொன்னால்கூட, பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும்.

அதேபோல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு, பேரூராட்சிகளுக்கு வாகனம் கொடுத்திருக்கிறார்கள். வாகனம் கொடுக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அந்த வாகனத்திற்கு ஓட்டுநர் கொடுக்கவில்லை. எனவே, ஓட்டுநர்களை நியமிக்க வேண்டும், அதேபோன்று பேரூராட்சிகளில் பெரும்பாலானவை கிராமப்புறங்களைக் கொண்டிருக்கின்றன. எனவே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள். நீங்கள் கடைசி பக்கத்திற்குப் போய் விடுங்கள். ஒரு நிமிடத்திற்குள் உரையை முடித்து விடுங்கள்.



2012 ஏப்ரல் 9]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ஐந்து நிமிடங்களில் நான் என் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Not more than five minutes.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ஐந்து நிமிடங்களில் நான் என் உரையை முடித்து விடுகிறேன். பேரூராட்சிகளில் கிராமப் பகுதிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், நகர்ப்புறத்தினுடைய விதிமுறைகளெல்லாம் அதற்கு சற்றும் ஒத்துப் போவதில்லை. எனவே, அதையும் ஊராட்சியினுடைய அளவிற்கு அதை கொஞ்சம் liberal–ஆகத் தளர்த்தினீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். அதேபோல் நகராட்சியைப் பொறுத்தவரைக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வி.சி. சந்திரகுமார் 12 மணி வரைக்கும் உரையாற்றுங்கள்.

நண்பகல் 12–00

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அதேபோல மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும், என்னுடைய ஈரோடு மாநகராட்சியில் நடந்த விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு அமர்கிறேன். கடந்த 2011–2012 ஆம் ஆண்டினுடைய வளர்ச்சித் திட்டத்திலே ஈரோடு மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டது 15 கோடி ரூபாய். அதிலே ரூ.5.31 கோடி தார்ச் சாலை போடுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எல்லாப் பகுதிகளையும் குழி தோண்டி தோண்டி, நடந்து செல்வதற்கே சிரமமாக இருக்கிறது. அதற்கு 5.31 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சாலைகளில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு மட்டும் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்றவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டும். இதை ** கவனத்தில் கொள்ள வேண்டும். அதுபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சந்திரகுமார், தொகுதி விஷயங்களை நீங்கள் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நான் ஏற்கெனவே இதுகுறித்து rulings கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு கருத்தைச் சொல்லி இதற்கு 5 கோடி ரூபாய், அதற்கு 5 கோடி ரூபாய் என்று சொல்லி ** என்று சொல்லியிருக்கிறார். எப்போதுமே, மாநகராட்சிகளாகட்டும் அல்லது நகராட்சிகளாகட்டும், ஏற்கெனவே திட்டம் தீட்டப்பட்டு, எவ்வளவு நிதி வழங்க வேண்டுமென்று கூறியதற்குப் பின்புதான், அரசு அந்த நிதியை விடுவிக்கிறது. ** என்று சொல்கிறார். அதைத் தயவுசெய்து அவைக் குறிப்பிலே ஏற்ற வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி ** என்கின்ற அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பில் ஏறாது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று அவர் சொன்னார். அதற்கு அமைச்சர் ** என்று சொன்னதால், அதைப் பதிவு செய்துகொள்கிறீர்கள். உறுப்பினர் சொன்னதை மட்டும் நீக்குவது எந்தவிதத்தில் ஜனநாயகமாக இருக்கும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 கோடி ரூபாயில் ஒரு திட்டம் கொண்டு வருகிறார்கள். 5 கோடி ரூபாயில் சாலை, 5 கோடி ரூபாயில் தெரு விளக்குகள் என்று சொல்கிறார். இப்படித்தான் திட்டமே கொண்டு வருகிறார்கள், இதிலே எங்கே ** வழி இருக்கிறது? அதனாலேதான் நீக்கச் சொல்கிறோம். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதைப் பதிந்துகொள்ளுங்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. அவர்கள் ** என்று சொன்னார், அவர் விளக்கம் சொல்லியிருக்கிறார். விளக்கத்தைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது.

**செல்வி கே. பாலபாரதி:** விளக்கத்தைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சாதகமாகப் பேசுகிறார். நான் இங்கே சொல்வது, ** ஆதாரபூர்வமாகச் சொன்னால், இயற்கையாகவே அவைக் குறிப்பிலே ஏறி விடுகிறது. பொதுவாக, இப்போது நான் நேரடியாக இவரை ஏதாவது ** என்று சொல்லிவிட்டால், அதை எப்படிக் குறிப்பிலே ஏற்ற முடியும்? ஆதாரபூர்வமாகச் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு—இதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் பேசிய கருத்துகளுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் சொல்லப்பட்டது. அவர் கொடுத்த ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர் சில இடங்களில் சொன்ன கருத்துகள், தவறு என்று மறுத்துக் கூறப்பட்டது. அப்படி மறுத்துக் கூறப்படுகின்ற நேரத்தில், ** என்று சொன்னால், ஓர் ஆட்சியை, ஓர் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் ** என்று சொன்னால், அது பத்திரிகையில் வந்தால், அந்த ஆட்சியைப் பற்றி என்ன நினைப்பார்கள்? குறிப்பிட்டுச் சொன்னால், அதை அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளுங்கள். குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுவாகச் சொன்னால் அதை எப்படி அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ள முடியும்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) விவாதம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) விவாதம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். வேறு சந்தர்ப்பத்தில் பேசுங்கள்.* Sit down, Mr. Chandrakumar. *(குறுக்கீடு) வேறு சந்தர்ப்பத்திலே பேசுங்கள். எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழாய், அருந்தவப் புதல்வியாய், அட்சயப் பாத்திரமாய், அதர்மத்தை ஆணி வேரோடு அறுத்தெறியும் அறமாய்த் திகழும் எங்கள் அன்னையே. *(மேசையைத் தட்டும் ஒலி)* எதிர்வந்த தடைகளையெல்லாம் தூள் தூளாக்கி துவம்சம் செய்து, தொண்டர் படை நடத்தி வெற்றிநடை போடும் எம் வேலுநாச்சியாரே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்னல், துயரம், துன்பம் எனக் கடைக்கோடி மக்களுக்கு எத்தனை துயர் வந்தாலும் அறிக்கை விட்டபடி ஆறுதல் சொல்லும் தலைவர்களுக்கு மத்தியிலே 'சுனாமி', 'தானே' போன்ற இயற்கைச் சீற்றத்தைத் துணிவோடு எதிர்த்து நின்று, அவர்தம் துயர் துடைத்திட களத்திற்கு நேராகச் சென்று, கலங்கிநிற்கும் மக்களின் கண்ணீர் துடைத்திடும் காவியத் தாயே! விழிகளில் நீர்கசியும் முன்னே, தன் விரல்களைக் கொண்டு தடுத்து நிறுத்தி தைரியம் தந்திடும் தாயாய், தாயினும் மேலாய் இருக்கக்கூடிய எங்கள் அன்னையே! ஆறுதல் சொல்லும் உதடுகளைவிட ஓடிச் சென்று உதவும் கரங்களே மேலானவை என்று சொன்ன அன்னை தெரசா வழிவந்த வாழும் தெரசாவே! *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசிடும் வாய்ப்புத் தந்த இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன். சுகாதாரமே வாழ்வியலின் ஆதாரம் என்று சொல்வார்கள்.



2012 ஏப்ரல் 9] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

பிற்பகல் 12–05

2001–2006 ஆம் ஆண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களையெல்லாம் கட்டி முடித்து, இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மகளிர் சுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் அற்புதமான திட்டத்தை அள்ளிக்கொடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை அப்படியே கிடப்பில் போட்டு, பூட்டு போட்டு இழுத்து மூடிவிட்டது. ஆனால், இன்றைக்கு மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எங்களுடைய அம்மா அவர்கள் நிறுவி, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே உள்ளாட்சித் துறையில் 170 கோடி ரூபாய் செலவிலே 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களுக்குப் புத்துயிர் கொடுத்து புதுப்பித்து இன்றைக்கு கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளிய தாய்மார்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற கருத்தை நான் இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முழு சுகாதார இயக்கத்தின் கீழே 2001–2006 ஆம் ஆண்டிலே தனி நபர் கழிப்பறை கட்டவேண்டும் என்ற நோக்கத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே சுமார் 4,10,000 தனி நபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு, ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு வந்தன. அதற்குப் பிறகு, 2006–லே ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம், அதைக் கண்டுகொள்ளாமல் விட்டதோடு, வெறும் 2,40,000 தனி நபர் இல்லக் கழிப்பறைகளை மட்டுமே கட்டியது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே கட்டப்பட்ட 4,10,000 தனி நபர் இல்லக் கழிப்பறைகளைக் கண்டுகொள்ளாமல் விட்டது. இதனால் என்ன ஆனது? இந்த நாடு சுகாதாரத்திலே எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணியவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கின்றேன், உங்களால் இந்தத் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணியின் இலக்கு 2017 ஆம் ஆண்டு வரை நீடிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற கருத்தை நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். கிராமப்புற சுகாதார

இயக்கத்தை உற்சாகப்படுத்துகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு 15 ஊராட்சிகளைத் தேர்வு செய்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், உற்சாகப்படுத்தும் வகையில் 5 இலட்சம் என்று அறிவித்து கிராமப்புற சுகாதாரத்தைப் பேணிக்காத்தவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

தற்போது மீண்டும் தூய்மையான கிராம இயக்கத்தைத்–Clean Village Campaign– தொடங்கி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் எல்லாம் இருந்துகொண்டு கிராமப்புறங்களிலே எங்கள் அம்மா அவர்கள் இலவசமாகக் கொடுத்தனுப்பிய விலையில்லா அரிசி, மிக்சி, கிரைண்டர் மற்றும் ஃபேன் போன்றவற்றை வழங்குவதற்கு ஊர் ஊராகச் செல்லும்போது, ஒவ்வொரு கிராமத்திற்குள்ளேயும் நுழைகின்றபோது ஊராட்சிமன்றத் தலைவர்கள், ஊராட்சிமன்றத் துணைத் தலைவர்கள், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் எங்களை நாடி ஓடி வருகிறார்கள். அவர்கள் ஒன்றுதான் கேட்கிறார்கள். எங்களுக்கு 'தாய் வருமா? தாய் வருமா? தாய் வருமா?' என்று கேட்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு 'எப்போது தாய் வரும், தாய் வரும், தாய் வரும்' என்று கேட்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தங்கத் தாய் கொண்டுவந்த திட்டம்தான் தாய் திட்டம். அதைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எண்ணித்தான், அவர்கள் கொடுக்கும் திட்டம் எங்களுக்கும் வரவேண்டும் என்று கேட்கிறார்கள். தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள், கிராமம்தான் இந்தியாவினுடைய முதுகெலும்பு என்று சொல்லியிருக்கிறார். ஒரு கிராமத்தினுடைய முன்னேற்றத்திலே இந்தத் தேசத்தினுடைய முன்னேற்றம் இருக்கிறது என்று இன்னும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். மகாத்மா காந்தி அவர்களின் சிந்தனையையும் தாண்டி இன்றைக்கு ஒருபடி மேலே போய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குக்கிராமங்களின்



முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார். குக் கிராமத்தைப்பற்றி சிந்தித்த ஒரே தலைவி இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்று சொன்னால், இன்றைக்கு குக் கிராமங்களை அடிப்படையாகக்கொண்டு, அளவுகோலாகக் கொண்டு தீட்டப்பட்ட அற்புதமான திட்டம்தான் இந்தத் 'தாய்' திட்டம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டும் என்று சொன்னால், நீலகிரி மாவட்டத்தில் சேரன்கோடி என்ற ஊராட்சியில் 158 குக் கிராமங்கள் இருக்கின்றன. இப்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், அந்தத் திட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள் வரும் என்ற காரணத்தினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குக் கிராமங்களை அளவாகக்கொண்டு உன்னதமான தாய் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 2011–2012 ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 25,335 குக் கிராமங்களில் இன்றைக்கு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள்தான் எங்களுக்கும் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் இங்கே சபையிலே கேட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

அதேபோல, 2012–2013 இந்த நிதியாண்டிலே 2,250 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 18,581 குக் கிராமங்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, ரூபாய் 750 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளதை இன்றைக்கு நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 79,396 கிராமங்களும், குக் கிராமங்களும் பயன்பெறக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் தொடரும் என்பதை மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். Habitation approach என்று சொல்வார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையிலே குக் கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், ஒரு தாய்க்குத்தான் தெரியும். தன்னுடைய குழந்தைக்கு எது தேவை, அந்தக் குழந்தைக்கு எது பிடிக்கும் என்பது தாய்க்குத்தான் தெரியும். ஒரு வாழை இலையைப்போட்டு, பசிக்கின்ற தன்னுடைய

குழந்தைக்குப் பரிமாறுகின்ற அந்தத் தாய், பரிமாறிக்கொண்டே, குழந்தை பசியாறுகின்ற அழகை ரசித்துக் காணுகின்ற தாய், அந்தக் குழந்தையினுடைய பசியை அறிந்து, மனம் அறிந்து, நோக்கம் அறிந்து, எது பிடிக்கும், எது பிடிக்காது என்று தேவையை அறிந்து, இன்னும் சொல்லப்போனால் need basis என்று சொல்வார்களே, எது தேவை என்பதை உணர்ந்து, தீட்டப்பட்ட அற்புதமான திட்டம்தான், சுமார் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட திட்டம்தான் இந்தத் “தாய்” திட்டம் என்பதை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசிலே, உள்ளாட்சித் துறையிலே, பல்வேறு வேதனைகள், சோதனைகள் நடந்ததையெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். வெறும் 75 ஆயிரம் ரூபாயிலே கே.வி.டி. என்ற திட்டத்தை அறிவித்து 200 சதுர அடியிலே புறாக்கூடு போன்ற வீடுகளைக் கட்டித் தருவோம் என்று அறிவித்து, 6 இலட்சம் வீடுகளுக்கு ஒர்க் ஆர்டர் கொடுத்தார்கள். 6 இலட்சம் வீடுகளுக்கு ஒர்க் ஆர்டர் கொடுத்துவிட்டு, தேர்தலுக்காக, அவசரமாக அள்ளித் தெளிக்கப்பட்ட அந்தத் திட்டத்திலே ஒரு இலட்சம் வீடுகளைக்கூட முழுமையாக—புள்ளிவிவரங்கள்படி ஒரு இலட்சம் வீடுகளைக்கூட முழுமையாகக் கட்டி முடிக்காமல், அவர்களுடைய கழுத்திலே டோக்கன்களை மாட்டிவிட்டு, அவர்களை நடு ரோட்டிலே நிர்கதியாக ஆக்கிவிட்ட, அற்புதமான திட்டத்தை மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் தந்தது. ஆக உங்களுக்குத் தெரியாத வரலாறு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தை நம்பினால், நம்புகின்ற மக்களை நட்டாற்றிலே விட்டுவிடுவார்கள், நம்பிய கட்சிக்காரர்களை கம்பிக்குப் பின்னாலே வைப்பார்கள். இதெல்லாம் வரலாறு. நான் அதற்குள்ளே செல்லவில்லை. இருந்தாலும்கூட, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவிலே, 60 ஆயிரம் புதிய வீடுகளை, 300 சதுர அடியிலே விசாலமான வீடுகளை, சூரிய ஒளி மின் சக்தி கொண்ட வீடுகளை, இன்றைக்கு 1,080 கோடி ரூபாய் செலவிலே அள்ளிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்றபோது நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.



கடந்தகால மைனாரிட்டி ஆட்சியிலே உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த, இன்றைக்கு உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நின்றுகொண்டே சுழல்நிதியைக் கொடுத்தார்கள். நின்றுகொண்டே சுழல் நிதியை வழங்கினார்கள், அதிலே கின்னஸ் சாதனை என்றெல்லாம் பேசப்பட்டது. பத்திரிகையிலே செய்தி வந்தது. நான் அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நின்றுகொண்டு கொடுத்தது மட்டும்தான் சாதனையா? உட்கார்ந்துகொண்டு வாங்கிக் குவித்ததும் சாதனையா என்பதை நான் இங்கே அறிய விரும்புகிறேன். அதையெல்லாம் தாண்டி இன்றைக்கு, அதுமட்டுமல்ல, உலகமே மிரண்ட 2ஜி வழக்கிலே கூட கின்னஸ் சாதனைதான். அதையும் தாண்டி (குறுக்கீடுகள்) இன்றைக்கு 2ஜி வழக்கிலே கைதாகி திகார் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் கவனிக்க வேண்டும். உட்கார்ந்து குவித்தது என்று சொன்னார். வேறு எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை உறுதியாகச் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. மாண்புமிகு உறுப்பினர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. Please sit down. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. அவர்கள் நின்றுகொண்டு கொடுத்ததாகத்தான் சொன்னார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சை நீங்கள் கவனிக்க வேண்டும். முதலில், மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் நின்றுகொண்டு சுழல் நிதி கொடுத்தார் என்றுதான் சொன்னார். அப்போது அவருடைய பெயரைச் சொன்னார். அதற்குப் பிறகு உட்கார்ந்துகொண்டு குவித்தார் என்று சொல்லும்போது, அவர் பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த சுய உதவிக் குழுக்களைப் பற்றி இங்கே கோடிட்டுக் காட்டியபோது,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அவர் கருத்தைச் சொன்னார். முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது, நிறைய மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சியை அவர் நடத்தினார். அப்படி நடத்தியபோது அங்கே 5,000 சுய உதவிக் குழுப் பெண்கள், 10,000 சுய உதவிக் குழுப் பெண்கள் என்று, அவர்களைக் கால்கடுக்க நிற்க வைத்து, இவரும் நீண்ட நேரம் நான் அவர்களுக்குச் சுழல் நிதியைக் கொடுக்கிறேன் என்று ஒரு நிகழ்ச்சியை நடத்தி, பத்திரிகையிலே வந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்கள். வேறு ஒரு கருத்தையும் சொல்லவில்லை. அதோடுமட்டுமல்லாமல் நல்ல கருத்தை ஆழமாகச் சொல்லியிருக்கிறார். இவர் சுழல் நிதியைக் கொடுத்தார். அந்த சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கை ஆதாரத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை எதையாவது கொடுத்தாரா என்று கேள்வி கேட்டு, அவர் உட்கார்ந்துகொண்டே இருந்துவிட்டார் என்று சொல்லியிருக்கிறார். வேறு ஒன்றும் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியாக ஒன்றைச் சொல்லுகின்றேன். இனி மக்கள் ஒருபோதும் உங்களை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

*__திரு. மு.க. ஸ்டாலின்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்ல, அதற்கு அமைச்சர் அவர்களும் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆக, சுழல் நிதி நின்றுகொண்டு கொடுத்ததை அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆனால், நின்று கொண்டு கொடுத்த காரணத்தால் அவருடைய வாழ்க்கை வளம்பெற்றதா



என்று கேட்கிறார்கள். அப்படிக் கொடுத்த காரணத்தால், அவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாக வளம்பெற வேண்டுமென்பதற்காகத்தான், அந்த சுழல் நிதியை முழுமையாக எந்தவிதத் தவறும் நடந்துவிடக்கூடாது என்கிற நல்ல எண்ணத்திலேதான் அதை முழுமையாகத் தந்துவிட்டு வரக்கூடிய அந்த வழக்கத்தை, அந்த மரபை நான் தொடர்ந்து கடைப்பிடித்தேன் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய உதவிக் குழுக்கள் நிகழ்ச்சியில் எந்தத் தவறும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1991–இல் உருவாக்கப்பட்ட இந்தக் குழுக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு மூலையிலே முடங்கிக் கிடந்த பெண்களுக்கு தைரியத்தைக் கொடுத்து, ஆதரவு கொடுத்து, 'வெளியில் வா, வந்து வீராங்கனைபோல் நட, உலகத்திலே இருக்கிற நிகழ்ச்சிகளைப் பார். அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து உன்னை யார் எதிர்க்கிறார்களோ, உன்னை யார் அழிக்க நினைக்கிறார்களோ அவர்களை அழிப்பதற்காக ஒரு துணிச்சலைக் கொண்டு வா' என்று 1991–லே தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பெண்களுக்கும் தைரியத்தைக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்கள் செய்கின்ற அந்த சுய உதவிக் குழு பணியிலே அமைச்சர் நானாக இருந்தாலும் சரி, முன்னாள் அமைச்சராக இருந்தாலும் சரி, மற்ற சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, யாரும் எந்த வகையிலும் அதிலே தவறு செய்திடமுடியாது. இங்கே சொல்லுகின்ற கருத்து . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், இது முறையல்ல. ஏற்கெனவே அவை நடவடிக்கைக்கு இடையூறு விளைவிக்கின்ற வகையிலே செயல்பட்டதால் நீங்கள் இரண்டு முறை வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். தொடர்ந்து இதுபோன்று அவை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தால் இந்தக் கூட்டத் தொடர் முழுவதற்கும் உங்களை வெளியேற்ற

வேண்டிய சூழ்நிலை ஏற்படும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினர்கள் அமைதியாக இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட உறுப்பினர் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். நான் எதுவும் கருத்து மாறி சொல்லவில்லை. அவர் கருத்தையொட்டித்தான் நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். தேவையில்லாமல் எதற்காக முந்திரிக் கொட்டை மாதிரி அவசரப்பட்டு திரு. அன்பழகன் எழுந்து நிற்கிறார்? எதற்காக எழுந்து நிற்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியின்றி அவர் இனிமேல் எழுந்து நின்றார் என்றால் இந்தக் கூட்டத் தொடர் முழுவதற்கும் அவர் வெளியேற்றப்படுவார். நான் இதை இறுதி எச்சரிக்கையாகக் கொடுக்கிறேன். ஏற்கெனவே இரண்டு முறை நீங்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். இந்த மாதிரி நீங்கள் அனுமதியின்றி எழுந்து நின்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய உதவிக் குழுக்கள் குறித்து பதிலுரையிலே சொல்லலாம் என்று நான் கருதினேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் பதில் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** நான் பதில் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முந்திரிக் கொட்டை என்பது unparliamentary word இல்லையே!

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அது ஒரு வழக்குச் சொல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு நல்ல healthy product. உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அவர் ஏதோ விவரமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு பேசுகிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) உட்காருங்கள். இதை நான் அனுமதிக்கவில்லை. திரு. துரைமுருகன், நான் உங்களை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்வதற்காக நின்றுகொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு வழக்குச் சொல். இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுகின்றபோது சிரிக்கிறார், ஆடுகிறார். அது அவருடைய குணம். அதை ஒன்றும் செய்ய முடியாது. அதை மாற்றிக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) அது அவருடைய பழக்கம். அதை ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறிய ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) This is too much. No, there are certain limits. You should not exceed your limit. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோபத்தின் உச்சத்திற்கு சென்றுவிட்டார். அவரை, அவரால் கட்டுப்படுத்தமுடியவில்லை. அதனால்தான், இதுபோன்ற வார்த்தைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் கோபப்பட்டு ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோபப்பட்டு எங்களுக்கு ஒன்றும் ஆகப்போவது இல்லை. அவர் என்னவோ, அவர் கோபப்பட்டு ரொம்ப நாட்கள் ஆனது மாதிரியும், அவர் கோபப்பட்டால் இந்த நாடே வேறுமாதிரியாக ஆகிவிடும் என்பது போலவும் பேசுகிறார். கோபப்பட்டுத்தானே வெளியில் இருக்கிறீர்கள். சாந்தமாக மக்களைச் சந்தித்ததால்தானே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். அவர், அனுமதியின்றிப் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சுய உதவிக் குழுக்கள் குறித்து என்னுடைய பதிலுரையிலே அவர் சொன்ன கருத்துகள் நிறைய இருக்கின்றன. ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 85 இலட்சம் உறுப்பினர்கள் சுய உதவிக் குழுக்களிலே இருக்கிறார்கள். இந்தத் துறையினுடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ் பேசுகின்றபொழுதுகூட சொன்னார், இந்திய துணைக் கண்டத்திலே கிட்டத்தட்ட சுய உதவிக் குழுவிலே 3 கோடி பெண்கள் இருக்கிறார்கள் என்று, இன்னும் ஐந்தாண்டுகளில் 7 கோடி பெண்கள் வருவார்கள் என்றும் சொன்னார். ஆனால், தமிழகத்தில் மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நேர்காட்டலின் காரணமாக 85 இலட்சம் பெண்கள் சுய உதவிக் குழுக்களிலே சேர்ந்திருக்கிறார்கள். (மேசையை தட்டும் ஒலி) கடந்த நிதியாண்டு, 2011–2012-இல் மட்டும் 65,000 சுய உதவிக் குழுக்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



65 ஆயிரம் சுய உதவிக் குழுக்களும் அரசு உருவாக்கி இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுழல்நிதி நின்றுகொண்டே கொடுத்த காரணத்தினாலே வாங்கிய மக்களின் வாழ்வு வளம் பெற்றது என்று சொன்னார்கள். அப்படி வாங்கிய மக்களின் வாழ்வு வளம் பெற்றிருந்தால் அவர்கள் உங்களை ஆட்சியிலே அல்லவா உட்கார வைத்திருப்பார்கள்? அவர்கள் ஆட்சியிலே அமர வைத்தது எங்களுடைய அம்மா அவர்களை. (மேசையைத் தட்டும் ஒலி) நின்றுகொண்டே சுழல்நிதியை வாங்கியவர்கள், ஆட்சியிலே அமர வைத்தது எங்கள் அம்மா அவர்களை. ஆக, உறுதியாக ஒன்றைச் சொல்லுகின்றேன், இது ஒத்திகை. இனி ஒருபோதும் உங்களை உட்கார வைக்க மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கின்னஸ் சாதனை என்றுகூட பல்வேறு கருத்துகள் இருந்தன. திகார் சிறையில் அடைக்கப்பட்டு, ஜாமீன் வாங்கி வந்ததற்கு, கெஞ்சி, கூத்தாடி ஜாமீன் வாங்கிவிட்டு வந்ததற்கு மேளதாள வரவேற்பு கொடுத்ததுகூட, கின்னஸ் சாதனைதான். நான் தெரியாமல் கேட்கிறேன், ஒலிம்பிக்கில் அவர் என்ன தங்கமா வாங்கிட்டு வந்தார்? ஜாமீன்தானே வாங்கிக்கொண்டு வந்தார்? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அருமையான வரிகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

“அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி
அதனருகினில் ஓலை குடிசை கட்டி
பொன்னான உலகென்று பெயரும் இட்டால்
இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்”

என்று சொல்லியிருக்கிறார். புரட்சித் தலைவருடைய அற்புதமான வரிகளுக்கு ஏற்ப இன்றைக்கு இதய தெய்வம் அம்மா அவர்கள் கிராமத்திலே மட்டுமல்ல—கிராமத்திலே ‘தாய்’ திட்டம்.

அதைப்போல நகரத்திலே அடிப்படை வசதிகளை மேம்பாடு செய்கின்ற அளவிற்கு, இன்றைக்கு மக்கட்தொகைக்கேற்ப அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். (IUDM) 750 கோடி ரூபாயிலே செயல்படுத்துகிறார். சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM) 500 கோடி ரூபாயிலே ஒதுக்கீடு செய்திருக்கிறார். மதுரை மாநகராட்சிக்கு சிறப்பு ஒதுக்கீடாக 250 கோடி ரூபாய். திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் 2015–க்குள் பொது இடங்களில் (மணியடிக்கப்பெற்றது) மலம் கழிப்பதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். பொது இடங்களிலே மலம் கழிப்பதை முற்றிலுமாக ஒழிக்க அரசு நடவடிக்கை எனத் திட்டங்கள் தொடருகின்றன. ஊரகக் குடியிருப்புப் பகுதிகளிலே 566.35 கோடி ரூபாய்க்கும் இன்றைக்கு ஒதுக்கீடு தொடர்கிறது.

நான் அன்போடு ஒரேயொரு சிறிய நிகழ்வைச் சொல்லி முடிக்கலாம் என்றிருக்கின்றேன். ஓர் ஊரிலே ஒரு பெரிய கட்டடம்; வானளாவிய ஓர் உயர்ந்த கட்டம் இருந்து கொண்டிருக்கிறது. எழில் மிகுந்த, கம்பீரமாகக் கட்டி முடிக்கப்பட்ட கோபுரமாக அந்தக் கட்டடம் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்திற்குப் பக்கத்தில் சின்ன சின்ன கட்டடங்கள் எல்லாம் இருக்கின்றன. சில கட்டடம் கட்டியும், கட்டாமலும், பூசியும், பூசாமலும், முடிந்தும், முடியாமலுமெல்லாம் கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரே கட்டடம். அந்த கட்டடம்தான் ஊரில் மிகப் பெரிய கட்டடம். அசைக்க முடியாத கட்டடம். அந்தக் கட்டடத்திற்கு கீழே, அந்தக் கட்டடத்திற்குப் போகக்கூடிய வழியில் சாலையிலே, போவோர், வருவோர் எல்லாம் போய்க் கொண்டிருக்கிறார்கள். வழிப்போக்கர் போய்க் கொண்டிருக்கிறார். ஒரு வழிப்போக்கர் போகின்றபொழுது அந்தக் கட்டத்திற்குக் கீழே, அடியிலே, கட்டடத்தின் நிழலிலே ஒருவர் நின்றுவிட்டு ஏதோ ஒரு விசித்திரமான செயலைச் செய்து கொண்டிருக்கிறார், உடனே, சரி, கிட்டதானே போவோமே; என்னதான் என்று பார்ப்போமே! என்று அந்த வழிப்போக்கர் அந்தக் கட்டடத்தின் அருகிலே செல்கிறார். அருகிலே போன அந்த வழிப்போக்கர் பார்க்கிறார், அங்கே ஒரு டிப்டாப் ஆசாமி, கையிலே ஒரு மரக் கம்பு—அந்த மரக் கம்பை தன்னுடைய கையிலே கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, உயர்ந்த, எழிலார்ந்த, கம்பீரமான அந்தக் கட்டடத்திலே, கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்திலே, கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்திற்குப் பக்கத்திலே கட்டடத்தின் நிழலிலே நின்றுகொண்டு, கையில் கம்பை வைத்து, அந்த கம்பினுடைய ஒரு முனை பக்கவாட்டு சுவற்றிலும், இன்னொரு முனையை தன் கையிலும் வைத்துக்கொண்டு நாக்கைத் துருத்திக்கொண்டு ஏதோ— நன்றாக கவனிக்க வேண்டும் — நாக்கை துருத்திக்கொண்டு ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறார். அதைச் செய்வதைப் பார்த்த வழிப்போக்கர், சரி என்னதானென்று கேட்டு விடுவோமே என்று, “தம்பி, என்னதான் செய்கிறாய்?” என்று கேட்கிறார். உடனே, அந்த டிப்டாப் ஆசாமி சொல்கிறார், “வந்துவிடாதீர்கள்; கிட்டே வந்துவிடாதீர்கள்; கொஞ்சம் நகர்ந்து கொள்ளுங்கள்; இந்தக் கட்டடம் விழப் போகிறது; நான்தான் கெட்டியாகப் பிடித்து, கட்டடத்தை முட்டுக் கொடுத்து தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்” என்று சொல்கிறார். உற்றுப் பார்க்கின்றபொழுது, நாக்கைத் துருத்திக் கொண்டிருந்த அந்த டிப்டாப் ஆசாமி தன்னுடைய நிதானத்திலும் இல்லை, தன்னுடைய நிலையிலும் இல்லை, தன் காலே தரையில் ஊன்றுவதற்குத் தடுமாறிக் கொண்டிருக்கின்ற நிலையில் இருப்பதைப் பார்த்துவிட்டு தலையிலே அடித்துக்கொண்டு அந்த வழிப்போக்கன் நகருகின்றான்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்திற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பதாக நினைத்தவர்கள், முட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பதாக நினைத்தவர்களுக்கு விட்டுக் கொடுத்ததுதான் 29 என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அப்படி விட்டுக் கொடுத்ததை நன்றி மறந்த காரணத்தினாலே, (குறுக்கீடுகள்) விட்டுக் கொடுத்ததை நன்றி மறந்த காரணத்தினாலே, குட்டு வைத்ததுதான் சங்கரன்கோவில். இன்றைக்கு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா. . . (குறுக்கீடு)

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில்

ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர். பார்த்திபன், எப்போதுமே நீங்கள்தான் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத் தேர்தலுக்குப் பின்னாலே, சிரமங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற இயக்கங்கள் இருக்கக்கூடிய இந்த நாட்டிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு கதையைச் சொல்கிறார். அந்தக் கதையைச் சொல்லும்போது உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? அதுதான் இப்போது கேள்வி. இதில் கோபம் வரவேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். இல்லை, இல்லை, அவை உறுப்பினர் ஒரு கதை சொல்வது தவறான கருத்தா? (குறுக்கீடுகள்) அவர் ஒரு கதையைச் சொல்கிறார். கதையைச் சொல்வது தவறான கருத்தா? (குறுக்கீடு) ஒரு கதையைச் சொல்கிறார் அவர். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை, உங்களை நான் அனுமதிக்கவில்லை. இது அவைக்குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? அவை அலுவல்களுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அவையிலிருந்து வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும். தயவுசெய்து நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அவர் கதைதான் சொன்னார். யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

*(தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள், பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*



**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத் தேர்தலுக்குப் பிறகு, சிரமங்களை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்ற இயக்கங்கள், மத்தியில் சிகரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் அம்மா வழிநடத்துகின்ற இந்த அரசைக் குறை சொல்லி, குற்றம் சொல்வதற்கு யாருக்கும் தகுதியில்லை என்ற கருத்தைப் பதிவு செய்கிறேன்.

இறுதியாக, பகவத் கீதையிலே, இவர்களுக்காக அழகாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கேட்டுவிட்டுச் சென்றிருக்கலாம். இருந்தாலும் சொல்கின்றேன்.

"கர்மாதுரானாம், நாசுகம், நாபீரித்தி, நாநித்திரா" என்று பகவத் கீதையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மக்களுக்குச் செய்யக்கூடிய சேவையையே தன்னுடைய வாழ்நாளாகக் கொண்டிருக்கக்கூடிய மன்னனுக்கு "நா சுகம்" அதாவது, தனி சுகம் இல்லை. "நா பீரீத்தி" அதாவது, தனி விருப்பு வெறுப்பு கிடையாது. "நா நித்ரா" அதாவது, தனி தூக்கம் இல்லை. ஆக, அப்படி வாழக்கூடிய அவருக்கு யார் பரிபாலனம் செய்கிறார்? கடவுள் பரிபாலனம் செய்கிறார். இந்த நாட்டு மக்களை, எங்கள் அம்மா பார்த்துக்கொள்கிறார். எங்கள் அம்மா அவர்களை, இமை மூடாமல் உழைத்துக்கொண்டிருக்கின்ற எங்கள் அம்மா அவர்களை, கடவுள் பார்த்துக்கொள்கிறார் என்று சொல்லி, All leaders are not visionaries, but our Amma, is both a visionary, as well as a leader. "As a visionary, Amma has catapult the people of Tamil Nadu in the vision 2023 and as a leader, Amma is leading us towards that vision" என்று சொல்லி என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பை வழங்கி, நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே ஒட்டன்சத்திரம் தொகுதியிலே நின்று போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கி, எனது வெற்றிக்குப் பேருதவி செய்த எங்களுடைய தலைவர், அடக்கப்பட்ட,

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக தன்னுடைய 75 ஆண்டு பொது வாழ்வில், ஐந்து முறை தமிழகத்தில் முதலமைச்சராக இருந்து, ஏராளமான பணிகளைச் செய்த எங்களுடைய முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வாழும் வள்ளுவர் அவர்களின் வழித்தோன்றல், எங்களுடைய கழகத்தின் பொருளாளர், சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் தலைவர் மரியாதைக்குரிய அமெரிக்காவின் மாகாணமான கெண்டகி மாகாணம் வழங்கியிருக்கின்ற கர்னல் விருதைப் பெற்று, இந்தச் சபையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற எங்களுடைய அண்ணன் தளபதி அவர்களே, இந்த மன்றத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியிருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர் அண்ணன் அழகிரி அவர்களுக்கும் இந்த சட்டமன்றத்திலே, ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வீற்றிருக்கின்ற எங்களது முன்னாள் வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அண்ணன் இ. பெரியசாமி அவர்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், வாக்களித்த ஒட்டன்சத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் எனது நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

நகராட்சி நிருவாகம் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊராட்சித் துறை போன்ற துறைகள் மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு, சுகாதாரம், கல்வி போன்றவற்றை நிறைவேற்றுகின்றன. கிராமங்கள் முன்னேறினால்தான், நாடு முன்னேறும் என்பதை இலட்சியமாகக் கொண்டுதான், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்தத் துறைக்கென்று திறமை மிக்க அமைச்சரை நியமித்து, எண்ணற்ற திட்டங்கள் தீட்டப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1994 ஆம் ஆண்டு ஊராட்சிச் சட்டங்கள் உங்களது ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்டன. ஆனால் இரண்டு ஆண்டுகளாக



உள்ளாட்சித் தேர்தலை நீங்கள் நடத்தவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, அதிலும் குறிப்பாக மகளிருக்கு 33 சதவிகித ஒதுக்கீடு வழங்கி, இன்றைக்கு அந்த மகளிருக்குப் பெருமை சேர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல 2010 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடப்பது என்பது அந்தந்தக் காலக்கட்டத்தில் நடந்தாகும். இதேபோன்று, கடந்த நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் நீங்கள் எல்லாம் எப்போது உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று கேட்டீர்கள். இடைமறித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "குறிப்பிட்ட காலத்தில், குறித்த நேரத்தில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறும்" என்று கூறினார்கள். அந்தத் தேர்தலும் நடந்து முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி நடத்தப்பட்ட தேர்தலில் ஜனநாயகம் எங்காவது மீறப்பட்டதா? சட்டம் எங்காவது மீறப்பட்டதா? ஆனால், 2006 இல் நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு நடைபெற்ற அந்த உள்ளாட்சித் தேர்தலில், மிகவும் கீழ்த்தரமான முறையிலே நடத்தப்பட்ட ஒரு தேர்தலைச் சந்தித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்ற தேர்தலிலே பல்வேறு வழக்குகள் பதியப்பட்டிருக்கின்றன. மறு தேர்தல் நடைபெற வேண்டும் என நீதிமன்றமே உத்தரவிட்டிருக்கின்றது என்று சொன்னால், அந்த ஆட்சி எந்த அளவிற்குச் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்திருக்கிறது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டும். ஆட்சியில் இருக்கிறவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதுதான் முக்கியம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே எங்காவது ஒரு சிறு அசம்பாவிதம் நடந்ததா? நீங்கள் தேர்தல் நடத்தியபோது பத்திரிகைகள் மிகவும் கண்டித்து எழுதின. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திய

தேர்தலைப் பற்றி அடுத்த நாள் பத்திரிகைகள் எல்லாம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி எழுதியன. எந்தவிதக் குறுக்கீடும் இல்லாமல் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்றும் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் எந்தவித பயமும் அச்சமும் இல்லாமல் வாக்களித்தார்கள் என்றும் பத்திரிகைகள் பாராட்டி இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலிலே எங்காவது தவறுகள் நடைபெற்றிருந்தால் சொல்லுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ** மாண்புமிகு நிதியமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர் மற்றும் மின் துறை அமைச்சர் ஆகியவர்களுக்குத் தெரியும். உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு ** சொல்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) நான் முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேன். அது நீதிமன்றத்திற்குப் போய், அந்த மனுவைத் தள்ளுபடி செய்தது சரி என்று நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி. நீங்கள் என்னை காலையில் சந்தித்தீர்கள். இப்படி ஆதாரத்தை என்னிடம் காலையிலே கொடுத்திருந்தால், நான் அதைப் பார்த்துவிட்டு, படித்துவிட்டு அதை அனுமதிப்பதா இல்லையா என்று தீர்மானித்திருப்பேன். இப்போது ஏதோ ஒரு கவரைக் கொடுத்துவிட்டால், இந்த அலுவலில் எப்படி நான் இதைப் பார்க்க முடியும்? நீங்கள் பிறகு வந்து என்னுடைய அறையில் கொடுங்கள். எதற்கும் right place என்ற ஒன்று இருக்கிறது அல்லவா? என்னுடைய சேம்பரில் காலையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்னிடம் பேசினீர்கள்; அப்போது கொடுத்திருக்கலாம் அல்லவா? என்னுடைய சேம்பருக்கு வந்து என்னிடம் கொடுங்கள். அதை விட்டுவிட்டு இப்படிக் கொடுப்பது முறையல்ல. ஆகவே ஆதாரம் இல்லாமல் கூறிய சொற்கள் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனு தள்ளுபடி செய்யப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார். அதுசம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றமே அதற்கு தீர்ப்பளித்திருக்கிறது. அந்த மனுவினைத் தள்ளுபடி செய்தது சரியானதுதான், நியாயமானதுதான் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதை மறந்துவிட்டு மற்றதைப் பேசுகிறார்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் பேசுவதற்கென்று ஒரு மரபு இருக்கிறது; முறை இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது உடனடியாக நீங்கள் மைக்கை விட்டுவிட்டு என்னிடம் வந்தால் என்ன நியாயம்? தயவுசெய்து இதுபோன்ற செயல்களெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற சமயத்தில் (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால் கொடுங்கள், எங்காவது தவறு நடந்திருந்தால் சொல்லுங்கள் என்று சொல்கிறார். (குறுக்கீடு) ** (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்லப்பட்ட வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தள்ளுபடி செய்யப்பட்ட மனுதாரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திலே மாநிலத் தேர்தல் ஆணையமும், தேர்தல் அதிகாரிகளும் எடுத்த நடவடிக்கை சரியானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதற்குப் பின்பு இதை விமர்சிப்பது தேவையற்றது. அப்படி விமர்சிக்கப்பட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு அதை விமர்சனம் செய்து பேசுவது என்பது நீதிமன்றத்தை அவமதிக்கின்ற செயலாகும். (குறுக்கீடு) எனவே, அதுகுறித்த அந்தக் கருத்து அவைக்குறிப்பில் ஏறாது. தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறார், ஆத்தூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (குறுக்கீடு) அது இல்லை என்று சொல்கிறாரே! அதை எப்படி நான் ஏற்றுக்கொள்ள முடியும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியிலே எவ்வளவு நேர்மையாக நடந்தது என்பதற்கு ஒரு நல்ல உதாரணமே, ஆத்தூர் தொகுதி, 18 ஆவது வார்டிலே நடந்த மாவட்ட கவுன்சிலர் பதவிக்கு நடந்த தேர்தல் முடிவுதான். அங்கே, உள்ளபடியே சரியாக–தற்போது நீதிமன்ற வழக்கில் இருக்கிறது, ஆகவே, அந்த வழக்கிற்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் 45 வாக்குகள் வித்தியாசத்திலே அங்கே வெற்றி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பெற்றிருக்கிறார். ஆனால், உண்மைக்கு மாறாக, ஒரு clerical mistake ஆக–ஒரு வாக்குச் சாவடியில் மொத்தம் 490 ஓட்டுகளே இருக்கின்றன. உதயசூரியனுக்கு விழுந்த வாக்குகள் 1,490 என்று பதிவு செய்திருக்கிறார்கள். மொத்த வாக்குகளே வெறும் 490 என்று இருக்கிறது. ஆனால் பதிவு செய்த–தி.மு.க.வுக்கு, உதயசூரியனுக்கு விழுந்த வாக்குகள் 1,490 என்று அங்கே பதிவு செய்திருக்கிறார்கள். காரணம் என்னவென்று அந்த அதிகாரியைக் கேட்டால், அங்கே clerical mistake ஏற்பட்டுவிட்டது, அதை நாங்கள் சரிசெய்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அங்கே இருக்கின்ற விதிமுறைப்படி அந்த அதிகாரி மறுத்துவிட்டார். Clerical mistake–படி அங்கே தவறு இழைத்திருந்தாலும் தீர்ப்பு தீர்ப்புதான், அந்தத் தீர்ப்பு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும், தவறைச் சுட்டிக்காட்டியதற்குப் பின்பும், அந்தத் தீர்ப்பை நான் இங்கு மறுபரிசீலனை செய்யக்கூட விரும்பவில்லை. ஆக, தி.மு.க–தான் வெற்றி பெற்றது என்று ஜனநாயகத்திற்குப் புறம்பாக, உண்மைக்கு மாறாக வெற்றியை அங்கே அறிவித்தார்கள். அதில்கூட நாங்கள்தான் இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. முறைகேடாக நடந்ததைக்கூட இன்று சட்டப்படியாக எதிர்கொள்பவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப்போன்று மோசடியாகத் திட்டமிட்டு நடத்தியவர்கள் அல்ல. உள்ளாட்சித் தேர்தலைப் பற்றிக் குறை சொல்வதற்கு தார்மீக ரீதியாக, தரும ரீதியாக உங்களுக்கு அருகதையே இல்லை என்பதை இந்த நேரத்தில் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உங்கள் ஆட்சிக் காலத்தில் சென்னை மாநகராட்சிக்கு நடந்த தேர்தலில் 90 மாநகராட்சி வார்டுகளில் தேர்தலை இரத்து செய்து, உயர் நீதிமன்றம் மறு தேர்தலுக்கு உத்தரவிட்டது. (குறுக்கீடு)

இப்பொழுது நடந்திருக்கின்ற தேர்தலிலே நியாயமாக, நேர்மையாக, இன்னும் சொல்லப்போனால் எங்காவது ஓரிரு இடங்களில் பாதிக்கப்பட்டிருந்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான் பாதிக்கப்பட்டிருப்பார்களே தவிர, தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. ஆக, 100 சதவீதம் நேர்மையாக, நாணயமாக, திறந்த புத்தகமாக இங்கே உள்ளாட்சித் தேர்தலை நடத்திக் காட்டி சாதனை படைத்த தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, நீங்கள் வேறு சப்ஜெக்டிற்குப் போங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார். அதற்கு நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேறு சப்ஜெக்டிற்குப் போங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அந்த clerical mistake–இன் படி தவறு நடந்திருப்பதற்கு வேண்டுமானால், தேவைப்பட்டால் நானும் ஆதாரத்தைத் தருகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சக்கரபாணி, உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை. ஒரு குறிப்பிட்ட இடத்திலே அவர் நின்றுகொண்டிருக்கிறார். இதற்காகக் கால நேரம் விரயமாகிக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதனால்தான் நான் அவரை வேறு சப்ஜெக்டுக்குப் போகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.



**திரு. அர. சக்கரபாணி**: இல்லை, உள்ளாட்சித் தேர்தலைப்பற்றி அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, நீங்கள் வேறு சப்ஜெக்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி**: நான் பேரவைத் தலைவருக்குச் சொல்வது என்னவென்றால், அதாவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: Election Commission–ஐக் குறித்து இங்கே discuss பண்ணமுடியாது. இதுகுறித்த பொருள் நீதிமன்றத்திற்குப் போய், அதிலே ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அது முடிந்துபோன விஷயம். அதனால் நீங்கள் வேறு சப்ஜெக்டுக்குச் செல்லுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 23 மாவட்ட ஊராட்சிகளில் 22 மாவட்ட ஊராட்சிகளில் மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்திலே அம்மா அவர்களுடைய வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒரே ஒரு ஊராட்சியில் வெற்றி பெற்றுத்தான் அந்த மாவட்ட ஊராட்சியைப் பிடிக்க வேண்டிய அவசியம் அம்மா அவர்களின் அரசுக்கு இல்லை. ஆனாலும்கூட, அங்கு முறைகேடுகள் நடந்திருப்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். அந்த முறைகேடுகள் நடந்திருப்பதைக்கூட பலமுறை நான்—வேண்டுமானால் நானும் ஆதாரத்தைச் சட்டப் பேரவைத் தலைவருக்கு இங்கே கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆகவே, இதனைத் தொடர வேண்டாம். நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மற்றவற்றை விவாதித்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். அதனால் நீங்கள் வேறு சப்ஜெக்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல 2010 ஆம் ஆண்டு மத்திய அரசு பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளிலே 50 சதவிகித ஒதுக்கீடு வழங்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி ஒவ்வொரு மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர்களிடத்திலே கருத்து கேட்டபோது, எங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு தளபதி அவர்கள் உடனே ஒப்புதல் அளித்து இன்றைக்கு மகளிருக்கும் 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு உள்ளாட்சி அமைப்புகளிலே கொடுக்கலாம் என்று அன்றைக்கு ஒப்புதல் கடிதம் கொடுத்தவர் எங்கள் தளபதி அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலே மகளிருக்கு எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறதென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கடந்தமுறை 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்புதான், அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அதேபோல, திட்டக் குழுத் தலைவர் ஏ.ஜி. ஜெயின் அவர்களுடைய தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்களிடமிருந்தும், உள்ளாட்சி மன்ற அமைப்புகளிடத்திலேயிருந்தும் அறிக்கைகள் பெறப்பட்டு, அந்த அறிக்கைகள்மீது அவர்கள் வைத்த பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றியது தலைவர் கலைஞருடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, அமருங்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சக்கரபாணி அவர்கள், ஏதோ உள்ளாட்சித் துறை அமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் இருந்த நேரத்தில்தான் பெண்களுக்கான 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் தந்ததாகவும், மத்திய அரசின்



வேண்டுகோளை இவர்கள் நிறைவேற்றியதாகவும் சொல்கிறார். ஆனால், உள்ளாட்சித் துறை அமைச்சராக இவர் வருவதற்கு முன்னாலேயே எங்களுடைய தங்கத்தாரகை, தாய்க்குலத்தின் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலேயே அதிகமான பெண்களை தமிழ்நாட்டினுடைய சட்டமன்றத்திற்கும், அதிகமான பெண்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; 2001 முதல் 2006 வரை முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலேயும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைய பெண் சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சட்டமன்றத்திற்கு மட்டுமல்ல; தன்னைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் எல்லா ஊராட்சி மன்றங்களிலேயும் இருக்கக்கூடிய கழக அமைப்புகளிலேயும்கூட, இணைச் செயலாளர் என்கிற பதவி பெண்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களிலேயும், ஊராட்சிகளிலேயும் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டுமென்பதற்காக ஆணை பிறப்பித்து, அவர் அப்போதே 50 சதவிகித இட ஒதுக்கீடு மட்டுமல்ல; அதற்கு மேலாகவும் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சக்கரபாணி, உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டு, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித் துறையின் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தால் அது தன்னிகரற்ற துறையாகத் திகழும் என்பதை ஆராய்ந்து, அதனைத் தளபதி அவர்களிடம் ஒப்படைத்தார். தளபதி அவர்களும், தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பில் எள்ளளவும் பிசகாமல் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சக்கரபாணி, அமைச்சர் பேசுகிறார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ அவர்களுடைய தளபதி, அவர் எல்லாவிதமான நிகழ்வுகளையும் பெண்களுக்காகவே செய்தார் என்று சொல்லுகிறார். நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில், மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில், எத்தனை பெண் வேட்பாளர்களை அவர்களுடைய தளபதி நிறுத்தினார்? ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 மாநகராட்சிகளில் 6 பெண் வேட்பாளர்களை நிறுத்தி, 6 பெண் வேட்பாளர்களையும் வெற்றிபெறச் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) 'வணக்கத்திற்குரிய மேயர் அவர்களே', எப்படி அழைக்கிறார்கள் என்றால், 'வணக்கத்திற்குரிய மேயர் அவர்களே', என்று 6 பெண் மேயர்களை இன்று அந்தந்த மாநகராட்சிகளிலே இவ்வளவு மரியாதையோடு அழைப்பதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ மைக் கிடைத்துவிட்டது என்பதற்காகச் சொல்லிவிட்டு, நாளை பத்திரிகையில் வருவதற்காக அல்ல. உளப்பூர்வமாகச் சிந்தித்து, பெண்கள் மேம்பாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவர் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிறார் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** உள்ளாட்சித் துறையில் தனி முத்திரையைப் பதித்து, உள்ளாட்சித் துறையை ஏற்றம் காண வைத்தவர் எங்கள் தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, தலைவர் கலைஞருடைய ஆட்சி எப்பொழுதெல்லாம்



மலர்கிறதோ அப்பொழுதெல்லாம் நகராட்சி, ஊராட்சிகள் மிகச் சிறப்பாகச் செயலாற்றத் தொடங்கின.

சென்ற முறை தளபதி அவர்கள் அந்தத் துறையில் அமைச்சர் பொறுப்பை ஏற்று, கடந்த 5 ஆண்டுக் காலத்திலே எண்ணற்ற சாதனைகளைப் புரிந்து, உள்ளாட்சித் துறையின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்தினார்.

"காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்றம்"

எனக் காலத்தின் மாற்றத்தைக் குறிப்பிட்டு, அதை யாரும் மறந்துவிடக் கூடாது எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணீயம் என்னும் நாடகக் காப்பியத்திலே தெளிவுபடுத்தியுள்ளார். அப்படிப்பட்ட காலத்தின் மாற்றத்தால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை மறந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளை ஏளனப்படுத்தியும், ஏகடியம் பேசியும் ஆட்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ இவருடைய தளபதி அவர்கள் அமைச்சராக இருந்தபோது பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார் என்றும், கால மாற்றத்தின் காரணமாக ஆட்சி மாறியது என்றும் சொன்னார். அப்படியல்ல; கடந்த ஆட்சியில் செய்த பல்வேறு தவற்றின் காரணமாகவும், அந்தத் தவறுகளைச் செய்யாமல் இரண்டு முறை தமிழகத்தை நீதியோடும், நேர்மையோடும் ஆட்சி செய்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொடர்ந்து இனி இறுதிக் காலம்வரை முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று வாக்களித்திருக்கிறார்கள். ஏதோ பெரிய திட்டம் தீட்டினார் என்றார். என்னுடைய பதிலுரையிலே அதனை நான் விளக்குகிறேன். இந்தத் துறையினுடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் என்னென்ன செயல்பாடுகளிலே தவறு செய்து, இந்த மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய திட்டங்களையெல்லாம் நழுவ விட்டுச் சென்றிருக்கிறார் என்பதை

[திரு. கே.பி. முனுசாமி] [2012 ஏப்ரல் 9

பதிலுரையிலே நான் சொல்ல இருக்கிறேன். தயவுசெய்து, உறுப்பினர் அவர்கள் இருந்து அதைக் கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளை ஏளனப்படுத்தியும், ஏகடியம் பேசியும் ஆட்சிக் கட்டிலில் ஏறியவர்கள், மறைக்கப் பார்த்தால் முடிவில் ஏமாந்துதான் போவார்கள். அரசினுடைய நிருவாகத்தை ஆல மரத்துடன் ஒப்பிட்டால், அதன் வேர்களாகவும், விழுதுகளாகவும், உள்ளாட்சி அமைப்புகள் விளங்குகின்றன என்பதை உணர்ந்துதான் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறையில் பொறுப்பை ஏற்றவுடன், ஓய்வறியாமல், உறக்கமின்றி உள்ளாட்சியின் செயல்பாடுகளை ஆராய்ந்து அறிந்தார்.

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்"

என்பார் வள்ளுவர். அதற்கேற்ப தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய முதல் உத்தரவின்படி தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாவட்டங்களுக்கெல்லாம் சுற்றுப் பயணம் செய்து, அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற பிரச்சினைகள் என்ன என்பதை, அங்கிருக்கின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையெல்லாம் அழைத்து, ஆராய்ந்து வரச் சொன்னார். அந்த வகையில் தளபதி அவர்கள், எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, அடுத்ததாக உள்ளாட்சித் தேர்தல் முடிந்தபின்பு தளபதி அவர்கள் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** குறுக்கீடு எவ்வளவு என்று பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்பொழுது பேசுங்கள். ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** குறுக்கீடு இல்லாமல் அவர் பேச வேண்டும். குறுக்கிடுவதற்குரிய வாய்ப்பை அவர் உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுதுகூட இடையிலே குறுக்கிட்டிருப்பேன். ஆனால் பதிலுரையிலே சொல்கிறேன் என்பதற்காகத்தான் குறுக்கிடவில்லை. அவர் ஏதோ பல திட்டங்களைத் தீட்டி, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, ஆங்காங்கு இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் முடித்தார் என்று சொல்கிறார். கிட்டத்தட்ட 35 நகராட்சிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அவர் ஆட்சிக் காலத்திலே அறிவித்தார். அதுவும் 18 நகராட்சிகளுக்கு அரசாணையே வழங்கப்பட்டது. ஆனால், அந்த 18 நகராட்சிகளோடு சேர்ந்து 35 நகராட்சிகளினுடைய பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அப்படியே நட்ட நடுவிலே போட்டுவிட்டு அவர் வீட்டுக்குச் சென்றுவிட்டார். அதுதான் அவருடைய சாதனை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே பல முறை இதே அவையிலே அவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது அதற்குரிய ஒரு சிறு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை, விரைவிலே செயல்படுத்தப்பட வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கேள்வி நேரத்தின்போது, அமைச்சரிடத்திலே கேள்வி கேட்கின்றபோதெல்லாம், அதில் இருக்கக்கூடிய டெக்னிக்கல் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதை மறந்துவிடக் கூடாது. அந்த டெக்னிக்கல் அடிப்படையிலேதான் பல பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் தாமதமாக நடைபெற்றதே தவிர, வேறு எந்தவித உள்நோக்கமும் கிடையாது. எந்தவிதத் தவறும் கிடையாது. அதுமட்டுமல்ல; அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், கடந்த முறை அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், தஞ்சை நகரத்திலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைத் தொடங்கினார்கள். ஆனால், அந்த 5 ஆண்டுக் காலம் ஆட்சிக் காலத்திற்குள்

அந்தப் பணி முழுமை பெறவில்லை. அப்படியே கிடப்பிலே இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் முடித்து, அதனை மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தோம் என்பதும் செய்தி என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய தோழர், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், தோழர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியதை இப்பொழுது மறுபடியும் இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். குடியாத்தம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்படுமா என்ற கேள்வி எழுப்பியபோது, அந்தக் கேள்விக்குரிய பதிலைப் பெறுகின்ற நேரத்தில் மைய அரசினுடைய ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்புத் திட்டத்தின் வாயிலாக மைய அரசிடமிருந்து நிதி ஆதாரத்தைப் பெறுவதற்காக கோப்பினை மாநில அரசு அனுப்பியது. அப்படி அனுப்பப்பட்ட கோப்பினை, முழுமை பெறாமல் அங்கே சுத்திகரிப்பு செய்யக்கூடிய இடங்களைக்கூட அவர்கள் அடையாளம் காணாமல், பொதுவாக அனுப்பிவிட்டிருக்கிறார்கள். அவ்வாறு அனுப்பிய அக்கோப்பு முழுமை பெறாத காரணத்தினால் மைய அரசு திருப்பி அனுப்பி விட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், தஞ்சையைப் பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது அதனுடைய பிரச்சினையைப்பற்றி நானும்தான் சொன்னேன். ஆனால் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, ஏதோ இவர்கள் முடித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். தஞ்சை நகராட்சியில் இருக்கின்ற பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும்



முடிவு பெறவில்லை. அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பெரிய நகராட்சியில் புதிதாக இடங்கள் சேருகின்றபோது, அந்தக் கழிவு நீரை அகற்றுவதற்காக, அதை முறையாக வெளியே எடுத்துச் சென்று வெளியிலேயே அது சுத்திகரிக்கப்பட்டு, பாதுகாப்பற்ற நீரை வெளியேற்ற வேண்டுமென்பதற்காக தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள். *(குறுக்கீடு)* இல்லை. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசிக் கொள்ளலாம். நிறைய பேசிவிட்டீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடு)*

***திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். இன்று நேரம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் பேசுகின்றபோது, உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு பெண்களுக்காக அவர்களால் கொண்டு வரப்பட்டது, அவர்களுடைய முதலமைச்சர்தான் கொண்டு வந்தார் என்று இங்கே குறிப்பிட்டார்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி ஏற்படுத்தப்பட்டதாகும். இதன் அடிப்படையில், எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டத்தினை இயற்றியது. அதிலேயே பெண்களுக்கான இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி கூறியதுபோல், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இது ஏற்படுத்தப்பட்டது அல்ல என்றும், எனது தலைமையிலான அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான சட்டத்தினைக் கொண்டு வந்தது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, தயவுசெய்து ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பின்பு உருவாக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் உயர்நிலைக் குழு, ஊராட்சிகளுக்கென்று ஒரு குழுவும், நகராட்சிகளுக்கென்று ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அதிலே கொடுக்கப்பட்ட ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், 99 பரிந்துரைகளில் 62 பரிந்துரைகள் அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. நகராட்சி, ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், 62 பரிந்துரைகளில் 47 பரிந்துரைகளும் அரசால் ஏற்கப்பட்டு, அப்பரிந்துரைகளை நிறைவேற்றியதில் எவ்வித சுணக்கமும் காட்டாமல், ஒவ்வொரு துறையாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அவற்றை நிறைவேற்றியவர் எங்கள் தளபதி அவர்கள்தான். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, நிறைய சந்தர்ப்பங்கள் வரும். தயவுசெய்து உட்காருங்கள், விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, 2012–2013 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்துகளை சட்டமன்றப் பேரவையின்முன் எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு எனது நன்றியினையும், இந்த அவைக்கு எனது வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12–55

சுகாதாரம் பேணுதல், தெரு விளக்கு பராமரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், உட்பகுதி சாலைகளைப் பராமரித்தல், கல்வி வசதி போன்ற முக்கிய அடிப்படையான சேவைகளை உள்ளாட்சிகள் மக்களுக்குச் செய்துவருகின்றன. எனவே, உள்ளாட்சிகளுக்குக் கூடுதலான நிதியும், அதிகாரமும் வழங்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் நிதி வசதியின்றி தள்ளாடக்கூடாது. எனவே, தமிழக அரசின் மொத்த வருமானத்தில் தற்போது வழங்கப்படும் 10 சதவிகிதத்தை உயர்த்தி 30 சதவிகிதம் உள்ளாட்சிகளுக்கு நிதி வழங்க வேண்டும். அதிகாரங்கள் பரவலாக்கப்படுவது ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், கீழ்மட்டம்வரை மக்களை நேரடியாக அதிகாரத்திலும், திட்டங்களை உருவாக்குவதிலும் பங்கேற்கவும் செய்யும்.

உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவல் கோரிக்கை எழும்போதெல்லாம் அதற்கான குழுக்கள் அமைக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக இருந்தது. 1996–இல், எல்.சி. ஜெயின் குழு, 1997–இல், கோ.சி. மணி குழு, 2007–இல், மு.க. ஸ்டாலின் குழு என்று குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்கள், உள்ளாட்சிகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கப் பயன்படவில்லை. எனவே, உள்ளாட்சி அமைப்புகள், அதிகாரிகளின் அதிகாரக் குவிப்பிலிருந்து விடுபட்டு, சுய அதிகாரம் படைத்த அமைப்புகளாக மாற வேண்டும். பெண்களுக்கு மத்திய அரசு, உள்ளாட்சிகளில் 50 சதவிகித ஒதுக்கீடு வழங்கி உள்ளது. கேரளம் உட்பட பல மாநிலங்களில் பெண்களுக்கான 50 சதவிகித ஒதுக்கீடு அமலுக்கு வந்துவிட்டது. தமிழகமும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே பெண்களுக்கு 50 சதவிகித ஒதுக்கீடு உள்ளாட்சிகளில் வழங்கிட வேண்டும்.

அதேநேரத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாக பெண்களை அங்கீகரிக்க மறுக்கும் போக்கும், சுயேச்சையாகச் செயல்படவிடாமல் தடுக்கும் போக்கும் ஆங்காங்கே நிகழ்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களில் சிலருக்கு, சமீபத்தில் சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நிகழ்ச்சிகளில் கொடியேற்றும் உரிமைகூட மறுக்கப்பட்டது. இதற்குக் காரணமான குற்றவாளிகள்மீது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இந்தக் கருத்தை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதுபோன்ற நிகழ்வுகள் நடக்காத வண்ணம் எல்லா நடவடிக்கைகளையும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற இடங்களில், எங்காவது ஆணாதிக்கம் இருந்து, இதுபோன்ற ஒரு நிகழ்வு நடந்தால் உடனடியாக அரசுக்குத் தெரியப்படுத்தினால், நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** சில விவரங்களை நான் அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தருகிறேன். இதற்குக் காரணமான குற்றவாளிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களைத் தேர்வு செய்யும்போது, மக்களால் தேர்வு செய்யப்படும் நேரடித் தேர்தல் முறை கொண்டுவரப்பட வேண்டும். உள்ளாட்சிகளில் ஊழல்களையும், முறைகேடுகளையும் தடுக்கவும், ஊழல் பேர்வழிகள்மீது நடவடிக்கை எடுக்கவும், ஊழலுக்கெதிரான ஊழல் கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட வேண்டும். உரிய காலத்தில் உள்ளாட்சிகளில் மக்கள் நலப் பணிகள் முடிக்கப்படாததால் நிதி விரயம் ஏற்படுகிறது. எனவே, உரிய நேரத்தில் இப்பணிகளை முடிக்க கடுமையான கண்காணிப்பு வேண்டும்.

துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது. ஆனால், மக்கள்தொகை உயர்ந்துகொண்டே போகிறது. மக்கள்தொகைக்கேற்ப துப்புரவுத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். இறந்த தொழிலாளர்களின் பணியிடங்கள் ஆயிரக்கணக்கில் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்களை . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார். மக்கள்தொகைக்கேற்ப துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இப்போது அறிவியல்ரீதியாக பல உபகரணங்கள் வந்துவிட்டன. அதனடிப்படையிலே எவ்வளவு குப்பைகள் இருந்தாலும் அதற்கேற்றவாறு உபகரணங்களைப் பயன்படுத்தினோம் என்று சொன்னால், விரைவாக அந்தக் குப்பைகளை அகற்ற முடியும். காரணம், பல்வேறு மாநகராட்சிகளிலோ, நகராட்சிகளிலோ, பேரூராட்சிகளிலோ கூடுதலான தொழிலாளர்களை நியமிக்கின்ற நேரத்தில், அவர்கள் சில நேரங்களில் பணி செய்யாமல் ஒதுங்கிவிடுகிறார்கள். எனவே, அந்தப் பகுதிக்கு ஏற்றவாறு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு துப்புரவுத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இறந்த தொழிலாளர்களின் பணியிடங்கள் ஆயிரக்கணக்கில் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். மத்திய அரசு, துப்புரவுப் பணியில் உள்ளோருக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கைக்கு ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வின்போது எங்களிடத்திலே உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். காலியாக உள்ள பணியிடங்கள் முழுவதையும் உடனடியாக நிரப்ப வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணையின்படி, புதிய அறிவிப்புகளில் அதுவும் வெளியிடப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த தொழிலாளர்களின் பணியிடங்கள் ஆயிரக்கணக்கில் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு, துப்புரவுப் பணியில் உள்ளோருக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து எண் எம்.2 (01/2011) நாள் 6–4–2011–இல் அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி பெருநகரங்களில் ரூ.247, நகரங்களில் ரூ.205, சிறு நகரங்களில் ரூ.165 தினக்கூலி வழங்க வேண்டுமென வழிகாட்டி நெறிமுறைகள் உள்ளன. இது தமிழகத்தில் இதுவரை அமலாக்கப்படவில்லை. இதனைத் தமிழக அரசு அமலாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அப்பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறச் சாலைகளைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும் ஊராட்சி ஒன்றியங்களில் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இவ்வேலைகள் முறையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் பேசத் தொடங்கியிருக்கிறேன்.



எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகளில், குடிநீர், திடக்கழிவு, கழிவுநீர் அகற்றுதல் போன்ற பணிகளை அந்தந்த ஊராட்சிகளுக்கு அருகிலுள்ள நகராட்சிகளுடன் இணைத்தால், இப்பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். குறிப்பாக, மதுரை, சென்னை போன்ற மாநகரங்களில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட கைப் பம்புகள், பைப் லைன்கள் இவற்றை அடியோடு மாற்றி, பைப் லைன்களை ஆழத்தில் பதித்து நல்ல குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 174 சதுர கிலோ மீட்டர் கொண்ட சென்னை மாநகராட்சியைப் பெருநகராட்சியாக மாற்றி, கிட்டத்தட்ட 426 சதுர கிலோ மீட்டர் கொண்ட மாநகராட்சியாக உருவாக்கியிருக்கிறார்கள். அதனால், மாநகராட்சியின் அருகிலே இருந்த ஊராட்சிகள், நகராட்சிகளெல்லாம் இன்றைக்கு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி புதிதாக இணைக்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்கும் சென்னை மாநகராட்சியில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அத்தனை வசதிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு இன்று அறிவிப்பிலே அதுவும் அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** ஒரே ஒரு முக்கியமான விஷயம் இருக்கின்றது. மதுரை மாநகராட்சி ஆணையராக ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒரே ஒரு முக்கியமாக விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, சிதம்பரம் நகராட்சியில் ** சிதம்பரம் நகராட்சியில் பணி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. வீ.பி. நாகைமாலி, நீங்கள் நாளை காலை என்னுடைய அறைக்கு வந்து சொல்லுங்கள்.

***திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காக 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை நடத்தி, அதன்மூலம் வெள்ளையனை வெளியேற்றி, இந்த மண்ணிற்குச் சுதந்திரம் கிடைத்ததைப்போல, நடைபெற்று முடிந்த 14–வது சட்டப் பேரவைத் தேர்தலில் மக்கள் சக்திமூலம் தீய சக்தியை வீழ்த்தி கொள்ளையர்களை வீட்டிற்கு அனுப்பி, மீண்டும் ஒரு சுதந்திரப் போரை நிகழ்த்தி, தாய்த் திருநாடாம் தமிழ் மண்ணிற்கு குடும்ப ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுத் தந்து, மக்கள் ஆட்சியாம், மக்கள் திலகத்தின் ஆட்சியை 3 ஆம் முறையாக நிறுவி (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலையும், ஆன்மீகத்தையும் இரு கண்களாகப் போற்றி, கழகத்தையும், ஆட்சியையும் நாட்டிலுள்ள நல்லோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள் ** என்று குறிப்பிட்டார்கள். அது அவைக் குறிப்பிலே ஏறினால் தவறாகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள் குறிப்பிட்ட சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. கடம்பூர் ராஜு:** நாட்டிலுள்ள ஆன்றோர்கள், சான்றோர்கள் போற்றிப் புகழுகின்ற நல்லாட்சியை நடத்திவரும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய மூவரின் ஒட்டுமொத்த மறு உருவமாக வாழ்ந்து வருகின்ற தமிழகத்தின் பொற்கால முதல்வர், எதிர்கால இந்தியாவின் எதிர்காலம், எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, 34 ஆண்டுகளாக எளிய தொண்டனாக கழகத்தில் பணியாற்றி வருகின்ற எனக்கு 14–வது சட்டப் பேரவைத் தேர்தலில் கோவில்பட்டி தொகுதியில் போட்டியிட வாய்ப்பும் அளித்து, எதிரிகளையும் வீழ்த்தி, துரோகத்தையும் முறியடித்து, தூத்துக்குடி மாவட்டத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெற வைத்ததோடு வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் துறைசார்ந்த விவாதத்தில் இரண்டாவது முறையாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த இறை தூதராக இவ்வுலகில் அவதரித்த முகராசி கொண்ட மகராசி, எங்கள் இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒளிவிளக்கு, எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா.

பிற்பகல் 1–05

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழக வாக்காளர்கள் அம்மா அவர்கள் தலைமையில் மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி அமைந்தால்தான் நாடும் நலம்பெறும், தமிழர்தம் வாழ்வும் வளம்பெறும் என்கிற வகையிலேதான் ஆளுகின்ற பொறுப்பை அம்மா அவர்களுக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், அம்மாவுடன் சும்மா வந்தவர்களுக்குக்கூட எதிர்க்கட்சி அந்தஸ்தையும் வழங்குவோம் என்று நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பு அளித்தார்கள் அம்மா. தமிழ் மக்களின் நாடித் துடிப்பை அறியாத கத்துக்குட்டிகள், அம்மா! தங்கள் செல்வாக்கினால் கிடைத்த எதிர்க்கட்சி அந்தஸ்தைத் தங்களுக்குக் கிடைத்த செல்வாக்காக அறியாமையால் மயங்கிக் கிடந்தார்கள். அம்மா, அவர்களின் மயக்கத்தையும், அறியாமையையும், ஆணவத்தையும் அவர்களுக்கு உணர்த்திட ஒரு வாய்ப்பு அளிப்பதற்காக, அதற்குப் பின் நடந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலில் எவர் துணையும் இன்றி, கழகத்தைத் தன்னந்தனியாகப் போட்டியிடச் செய்து, உலக வரலாற்றில் எந்த ஒரு அரசியல் இயக்கமும் பெற்றிடாத வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று, சரித்திரச் சாதனை படைத்தீர்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

இந்நிலைக்குப் பின்பும், தன் நிலை உணராதவர்கள் சமீபத்தில் நடைபெற்ற சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் சவால் விட்டார்கள் அம்மா. அம்மாவுக்கே சவாலா என்று கொதித்தெழுந்த சங்கரன்கோவில் தொகுதி வாக்காளர்கள்தான், தன்னுடைய மனைவி, மைத்துனர் என்று குடும்பமே 5 நாட்கள் தொகுதியில் முகாமிட்ட கும்பலுக்கு, தங்களின் வெறும் 5 மணி நேரப் பிரச்சாரத்திலேயே அம்மக்கள் இவர்களின் காப்புத் தொகையைப் பறித்தார்கள் அம்மா.

தேர்தல் பிரச்சாரத்தின்போது, அம்மா! தாங்கள் எங்கள் கழகத்தை வெற்றி பெறச் செய்து மற்ற வேட்பாளர்களை டெப்பாசிட் தொகை இழக்கச் செய்திட வேண்டுமென்று பேசினீர்கள் அம்மா. தங்களின் வாக்கே எங்களின் வேதவாக்கு என்று அத்தொகுதி மக்கள் அனைவரின் டெப்பாசிட்டையும் காலி செய்தார்கள் அம்மா.

அம்மா! வீணாகிப் போனவர்களைப் பற்றிப் பேசி நம் நேரத்தை வீணாக்காமல், அம்மா அவர்கள் நாட்டு மக்களுக்கு அளித்திட்ட நல்லதோர் நிதிநிலை அறிக்கையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையில் அறிவிக்கப்பட்டுள்ள நல்ல பல திட்டங்களைப் பற்றி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி உரையைத் துவக்குகிறேன் அம்மா.

ராஜியத்தைப் பூஜியமாக்கியவர் கடந்தகால மைனாரிட்டி ஆட்சியின் முதலமைச்சர் கருணாநிதி. ஆனால், பூஜியத்தையும் ராஜியமாக்கும் வல்லமை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்பதை நாடு நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டை பூஜியமாக்கிய கருணாநிதி, இந்த நிதிநிலை அறிக்கையை விமர்சித்ததை எண்ணி இன்று நாட்டு மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள் அம்மா.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த அற்புதத் திட்டம்தான் 'தாய்' திட்டம். திட்டத்தை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டத்திற்கு 780 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளீர்கள் அம்மா.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புறங்களில் வேளாண்மைத் துறையை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குப் பெருமளவு



தட்டுப்பாடு ஏற்படுவதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மத்திய அரசோடு கலந்தாலோசித்து வேளாண் பருவத்தின்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பணிகளைத் தவிர்த்து, தனியார் விவசாய நிலங்களில் மேற்கொள்ளும் வேலைகளுக்கு இத்திட்டத்தைப் பயன்படுத்துவது பற்றி அம்மா அவர்களின் ஆலோசனையை நாட்டின் ஒட்டுமொத்த விவசாயிகளும் உள்ளம் மகிழ்ந்து பாராட்டுகிறார்கள் அம்மா.

பசுமை வீடுகள் திட்டம் – அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உதித்த அற்புதமான திட்டம்தான் பசுமை வீடுகள் திட்டம். அம்மா அவர்களின அரிய சிந்தனையில் உதித்த அற்புமான திட்டம். திட்டத்தைத் தந்தால் மட்டும் போதாது என்று சென்ற ஆண்டிலே 1,080 கோடி ரூபாயை ஒதுக்கி 60,000 வீடுகள் கட்டுவதற்கு வழி செய்தீர்கள் அம்மா. அதேபோல, இந்த ஆண்டிலும் 1,080 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கி நாட்டு மக்கள் நலன்பெறும் பணியைச் செய்திருக்கிறீர்கள் அம்மா.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் – சென்ற ஆட்சியிலே ஒரு வீட்டிற்கான குறைந்த ஒதுக்கீட்டுத் தொகையைக் கொண்டு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சிறிய வீடாகக் கட்டுகின்ற திட்டம். அந்த நிலைமையை மாற்றி, அந்தத் திட்டத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது. அதிலே மாநில அரசின் பங்கு 66,250 ரூபாய். ஆனால், மத்திய அரசின் பங்கு வெறும் 33,750 ரூபாய் மட்டுமே. இத்திட்டத்தின்கீழ் கடந்த நிதி ஆண்டில் 1,00,553 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டிலும் இதே அளவு வீடுகள் கட்டித் தருவதற்கு 666 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளீர்கள் அம்மா.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 1.75 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக உயர்த்தியதோடு, சென்ற நிதியாண்டில் 296.98 கோடி ரூபாய் ஒதுக்கி, அதன்மூலமாக 11,093 பணிகள் நடைபெறுவதற்கும் ஆவன செய்துள்ளீர்கள் அம்மா. அதோடு இந்த நிதியாண்டிலும் அத்திட்டத்திற்கு 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, மக்கள் நலப் பணிகளைச் செய்வதற்கு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, நகர்ப்புற வளர்ச்சித் துறையில், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம், மதுரை மாநகராட்சிக்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு, நகர்ப்புறங்களில் கழிப்பிட வசதி, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பல நல்ல திட்டங்களை அறிவித்துள்ளீர்கள். காலத்தின் அருமை கருதி சுருக்கமாகப் பேசுகிறேன். குடிநீர் வழங்கல் துறையில் கொண்டு வந்த வீராணம் திட்டத்தை வீணான திட்டமாக்கி அதில் பல கோடி ரூபாய் ஊழல் செய்து, மக்கள் வரிப் பணத்தை வீணாக்கி சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட வழிவகை தெரியாமல், மக்களை அல்லலுக்கு ஆளாக்கியதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், புதிய வீராணம் திட்டம் தந்து சென்னை மாநகர மக்களின் தாகத்திற்குத் தண்ணீர் தந்த தன்னிகரில்லா தலைவி அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் சென்னை மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 330 கோடி ரூபாயில், 2014–ல் முடிவடையும் வகையில், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகையில் புதிய ஏரி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா.

இதோடு எனது தொகுதியில் உள்ள கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, இந்த ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் திருக்கோயில்களைப் புனரமைத்து 1,006 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்று அறிவித்தீர்கள் அம்மா. அதன் அடிப்படையில் கோவில்பட்டி நகரின் மையப்பகுதியில் இருந்து அருள் பாலித்துவரும் அருள்மிகு செண்பகவல்லி அம்மன் உடனுறை பூவனாதசுவாமி திருக்கோவிலுக்கு கோவில்பட்டி தொகுதிவாழ் மக்கள் மட்டுமல்ல; தென் மாவட்ட மக்களே போற்றிப் புகழும்வண்ணம் கால் நூற்றாண்டுக்குப் பிறகு, 29–1–2012 அன்று மிகப் பிரம்மாண்டமான முறையில் குடமுழுக்கு விழா நடைபெறுவதற்கு ஆணையிட்ட எங்கள் அன்னை ஆதிபராசக்தி அவர்களை வணங்கி, தொகுதி மக்களின் சார்பாக அனைவரின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன் அம்மா. நிறைவாக. . .



பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். மூன்றாவது முறையாக மகத்தான வெற்றி பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் முதன்முறையாக டெல்லிக்குச் சென்றதைப் பற்றி 15–6–2011–ல் வெளி வந்த 'Deccon Chronicle' என்கின்ற ஆங்கில இதழில், மாண்புமிகு அம்மா அவர்களின் டெல்லி வருகை பற்றி 'Prime Minister was waiting at the door with flowers to welcome the charming Lady' என்று செய்தி வெளியிட்டது. இது கடந்த கால வரலாறு. ஆனால், எதிர்காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன், அதே பத்திரிகையில், 'Prime Minister post is waiting with flowers to welcome the charming Lady' என்று செய்தி வெளிவரும் காலம் வெகு தொலைவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது காலத்தின் கட்டாயம். உலக வரலாற்றில் சீசரின் கண்பட்ட இடமெல்லாம் அவர் கைக்கு வந்தது; கால்பட்ட இடமெல்லாம் அவர் கொடி பறந்தது. சீசருக்குப் பிறகு அம்மா அவர்களுக்கு மட்டுமே அப்படி ஒரு வரலாறு அமையவிருக்கிறது என்பதைச் சொல்லி, டெல்லி செங்கோட்டையிலும் அம்மா அவர்களின் கொடி பறக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் காவல் தெய்வம், தெய்வத் திருமகள், எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்கி என் தொகுதி கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடம் சமர்ப்பித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

## தொகுதிக் கோரிக்கைகள்

மதுரை மற்றும் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் எனது தொகுதிக்குட்பட்ட கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் வரலாற்றை நினைவுகூரும் வண்ணமாக வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை நிறுவப்பட்டுள்ளது. அச்சிலைக்குப் பின்னால் புராண காலத்தில்

கட்டப்பட்ட மிகப்பெரும் பழமையான சிற்பங்களுடன்கூடிய அகிலாண்டேஸ்வரி உடனுறை கோதண்டராமர் திருக்கோயில் அமைந்துள்ளது. வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கும் மேற்கண்ட கோயிலுக்கும் இடையே சுமார் 4 1/2 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த இடத்தில் தென் மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான வெள்ளையனை எதிர்த்து வீர முழக்கமிட்ட விடுதலை வீரன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணி மண்டபம் கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளையும் வைத்திட விழைகிறேன். அம்மா, கயத்தாறு பேரூராட்சியின் மையப் பகுதியில் அருள் பாலித்து வரும் அருள்மிகு திருமலை நாயகி சமேத திருநீலகண்டேஸ்வரர் என்கிற முத்துகிருஷ்ணேஷ்வரர் கோயில் பழம் பெரும் கோயிலாகும். இங்கே சுற்று வட்டார கிராம மக்கள் எல்லாம் அதிக அளவில் திருமணத்தை நடத்தி வருகிறார்கள். இத்திருக்கோயில் மிக உயர்ந்த மதில் சுவர்களுடன் தாராளமான இட வசதியுடன் உள்ளது. கோபுரத்தை சீரமைத்து கோயிலையும் புனரமைத்து குடமுழுக்கு விழா நடத்துவதற்கு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

கோவில்பட்டி தொகுதி விவசாயத்தை நம்பி மக்கள் அதிகம் வாழ்கின்ற தொகுதி. அதற்கு அடுத்தபடியாக கால்நடைகளை அதிகம் வளர்ப்பதன்மூலம் பால் உற்பத்தி பெருகி, அதிக அளவில் பால் பண்ணைகளும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் கயத்தாறு மற்றும் கடம்பூர் பகுதியில் இயங்கி வருகின்றன. பாலிலிருந்து பால் பவுடர், வெண்ணெய், நெய் மற்றும் அதைச் சார்ந்த உப பொருட்கள் தயாரித்திட சிறிய அளவில் ஒரு தொழிற்சாலையையும், ஒரு பால் குளிரூட்டும் நிலையமும் கடம்பூரில் அமைத்திட அம்மா அவர்களின் அரசு ஆவன செய்திட அன்புடன் வேண்டுகிறேன்.

கோவில்பட்டியில் மூன்று நீதிமன்றங்கள் பழைய கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. அந்த நீதிமன்ற வளாகத்தில் போதுமான இட வசதி உள்ளது. அவ்விடத்தில் புதிய நீதிமன்ற வளாகம் புதுப் பொலிவுடன் கட்டித் தர அம்மா அவர்களிடம் பணிந்து வேண்டுகிறேன்.



தமிழ்நாடு எரிசக்தி வாரியம் என்கிற TEDA–விற்குச் சொந்தமான இடம் கயத்தாறு ஒன்றியத்தில், பணிக்கர்குளம் கிராமத்திற்கு அருகில் சுமார் 200 ஏக்கர் உள்ளது. அந்த இடத்தில் பணிக்கர்குளம் குடிநீர் வசதிக்காக ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, அதில் தண்ணீர் அதிகம் இருந்தாலும், கடந்த மூன்று ஆண்டுகளாக மின் இணைப்பு பெறுவதற்கு TEDA–வில் N.O.C. (தடையில்லாச் சான்று) பெறுவதற்குக்கூட கடந்த கால மைனாரிட்டி திமுக அரசு தடையாக இருந்தது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு அமைந்த மூன்றே மாதத்தில் TEDA நிறுவனத்தில் N.O.C. வழங்கி, மின் இணைப்பு பெற்று, அக்கிராமத்திற்கு தாராளமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டதற்காக அக்கிராம மக்கள் மிக்க நன்றி உணர்வோடு தங்களை வணங்குகிறார்கள் அம்மா. அவர்களோடு நானும் தங்களை வணங்குகிறேன் அம்மா.

இங்கே ஒரு கோரிக்கையும் வைக்கிறேன் அம்மா. ஏற்கெனவே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடம், நீர் செறிவு அதிகம் உள்ள பகுதி. அந்த இடத்தில் மேலும் பல ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டமாக அறிவித்து, கயத்தாறு ஒன்றியத்தின் மேற்குப் பகுதியில் உள்ள வறண்ட பகுதிகளாக இருக்கின்ற சுமார் 20 கிராமங்களுக்குக் குடிநீர் வசதியை ஏற்படுத்தி, அப்பகுதி மக்களின் தாகத்தைத் தீர்த்திட தாயுள்ளம் கொண்ட தாயை வணங்கி வேண்டுகிறேன் அம்மா.

கோவில்பட்டி தொகுதியில் பல்வேறு வகையான கல்வி நிலையங்களும், கல்லூரிகளும், தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. கோவில்பட்டி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ இதுவரை இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள், தொகுதியில் கல்வித் தரம் மேம்பட, அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை மிகவும் பின்தங்கிய பகுதியான கயத்தாறு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைத்துத் தந்திட அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

கோவில்பட்டி தாலுகாவில் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியில் உள்ள இராணுவ வீரர்களின் சுமார் 4,000 குடும்பங்கள் உள்ளன. அவர்கள் பொருட்களைப் பெறுவதற்கு CSD கேன்டீன் மற்றும் ECHS மருத்துவமனைக்கு சுமார் 70 கி.மீ. தொலைவிலுள்ள திருநெல்வேலி அல்லது தூத்துக்குடி அல்லது திருவில்லிப்புத்தூர் பகுதிகளுக்குச் செல்ல

வேண்டியுள்ளது. இப்பகுதியில் CSD கேன்டீன், ECHS மருத்துவமனை அமைப்பதற்கு சுமார் ஒரு ஏக்கர் நிலத்தைப் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள சுபா நகரில் தனியார் நிறுவனம் ஒன்று இலவசமாக வழங்கியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்னாள் இராணுவ வீரர்களின் நலம் காத்திடும் வண்ணம் CSD கேன்டீன் மற்றும் ECHS மருத்துவமனை அமைத்திட ஆவன செய்திட அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

எனது சொந்த ஊரான கடம்பூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் Block PHC ஆக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் கடம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர, ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாக கோவில்பட்டி உள்ளது. அதுவும் நான்கு வழிச் சாலைகள் அமைந்துள்ள மிக முக்கியமான நகரம். இங்கு பழங்காலத்தில் நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்ட ஒரு பயணியர் விடுதி மட்டும் அடிப்படை வசதி இல்லாத நிலையில் உள்ளது. அதைப் புதுப்பித்து, வேண்டிய வசதிகள் செய்து தந்து, நவீனப்படுத்தித் தரவும் வேண்டுகிறேன். அதே சமயம் பொதுப் பணித் துறை அலுவலகத்திற்கு எதிரே உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் தேவையான காலி இடம் உள்ளது. அந்த இடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய சுற்றுலா மாளிகை ஒன்று பொதுப் பணித் துறை சார்பாக அமைத்துத் தர அம்மா அவர்களிடன் அன்புடன் வேண்டுகிறேன்.

கோவில்பட்டி அருகே உள்ள நாலாட்டின்புத்தூர் கிராமம் 10,000 மக்கள்தொகை இருக்கின்ற பெரிய ஊராட்சிப் பகுதியாகும். இம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைப் புதிதாக அமைத்திடவும், இதேபோல் கயத்தாறு ஊராட்சி ஒன்றியம், கழுகுமலைக்கு அருகே உள்ள கே. துரைசாமிபுரம் ஊராட்சியிலும் மற்றும் அய்யனார் ஊத்து ஊராட்சியிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தந்திட அம்மா அவர்களை வணங்கி வேண்டுகிறேன்.

கோவில்பட்டியில் ஏராளமான கல்வி நிலையங்கள் உள்ளன. இது விளையாட்டு ஆர்வலர்கள் நிறைந்த பகுதி. ஹாக்கி



விளையாட்டில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் உள்ளனர். பெரிய நகரமான கோவில்பட்டியில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு அரங்கம் ஒன்றை அமைத்துத் தந்திட அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வளர்ந்து வரும் இந்திய மாநிலங்களில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்வதை நாம் பெருமையோடு பார்க்க வேண்டும். தமிழக மக்கள்தொகையில் 50 சதவிகிதம் மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புற வளர்ச்சியில் தமிழகம் முன்னேற்றம் கண்டுவருவதை நாம் பெருமையாகக் காண வேண்டும். வளர்ந்துவரும் மக்கள்தொகைக்கேற்ப பல்வேறு அடிப்படை வசதிகளும், தேவைகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு '2023' என்ற திட்டத்தைத் தயாரித்துள்ளார்கள். மாநிலம் முழுவதும் சமச்சீர் உட்கட்டமைப்பு வசதி, அனைத்துப் பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சுகாதாரமான மனித வாழ்வுக்கு வழி ஏற்படுத்துதல் போன்ற முன்னுரிமை திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்னும் தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். தமிழக அரசால் நிறைவேற்றப்படும் பசுமை வீடுகள் திட்டம், மத்திய, மாநில அரசுகளின் சார்பில் செயல்படுத்தப்படும் I.A.Y. திட்டம் போன்றவற்றால் கிராமப்புறங்களில் தற்போது குடிசைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவதோடு, குடிசைகளில் இருந்தோரும் கான்கிரீட் வீடு கட்ட முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றுள்ளார்கள். 300 சதுர அடி பரப்பளவில், ஏழைக்

குடும்பங்களுக்கு சூரிய ஒளி மின்சக்தி வசதியுடன் கட்டப்பட்டு வரும் பசுமை வீடுகள் திட்டம் மற்றும் I.A.Y. திட்டம், தற்போதைய விலைவாசி உயர்விற்கேற்ப, ஒரு வீட்டின் அலகினை ரூ.3 இலட்சம் என்ற அளவில் உயர்த்தி வழங்க வேண்டும். பசுமை வீடுகள் திட்டம் மற்றும் I.A.Y. திட்டம் ஆகிய இரண்டையும் செயல்படுத்த அரசு சில விதிமுறைகளை வகுத்துள்ளது. அதன்படி பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் சிற்றூராட்சிகளின் மூலமாகவே கட்டப்பட வேண்டும். இந்தத் திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்வு செய்வது கிராம சபைகள்தான். கிராம சபைகள் சம்பிரதாயத்திற்காகக் கூட்டப்படாமல், அனைவருக்கும் தகவல் தெரிவிக்கின்ற முறையில் கூட்ட நடவடிக்கைகள் இருந்திடவும், கிராம சபைக் கூட்டத்தைக் கண்காணிக்கச் செல்லும் அரசு அலுவலர்கள் சரியான நேரத்திற்குச் சென்று கூட்டம் நடைபெறுவதை உறுதி செய்திடவும் வேண்டும். ஒரு சில இடங்களில் அரசு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டதற்கான கையொப்பம் மட்டுமே இடுகின்றனர். இதுபோன்ற முறைகேட்டால், எங்கள் மாவட்டத்தில் தற்போது மாவட்ட திட்ட அலுவலருடைய அலுவலகத்திற்குப் பூட்டுப் போட்டுள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் தற்போது திட்ட அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துகளைச் சொன்னார்கள். அரசின் சார்பிலே கட்டப்படுகின்ற வீடுகளுக்கு நிதியாதாரம் போதவில்லை, ரூ.3 இலட்சம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் இதற்குத் தேவையான கூடுதல் நிதியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்கு மைய அரசு கொடுக்கின்ற நிதி ரூ.33,750/– மட்டும்தான். இன்றைய விலைவாசியால் 5,000 செங்கல் தேவைப்படுகிறது என்று சொன்னால், இப்போது ஒரு செங்கல் ரூ.4/– என்று சொன்னாலும்கூட, செங்கல்லுக்கு ரூ.20,000 ஆகிறது. 150 கிலோ



கம்பி தேவைப்படுகிறது. ஒரு டன் கம்பி ரூ.50,000/– ஆகிறது. அதற்கு மட்டும் கிட்டத்தட்ட ரூ.75,000/– ஆகிவிடுகிறது. அதேபோல, 65 சிமெண்ட் மூட்டைகள் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் கணக்குப் போட்டாலே ரூ.42,000/– ஆகிவிடுகிறது. இந்த மூன்று பொருட்களுக்கே 42 ஆயிரம் ரூபாய் ஆகிவிடுகிற நிலையில், மத்திய அரசு கொடுக்கின்ற நிதி எவ்வளவு என்று சொன்னால், வெறும் 33,750 ரூபாய் மட்டும்தான். அதனால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற உடனேயே தன் கனவுத் திட்டமாகக் கொண்டுவந்த பசுமை வீடுகள் திட்டத்திற்கு 1,80,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மைய அரசு கொடுக்கின்ற நிதியாதாரத்தைக் கொண்டு, 200 சதுர அடியில் வீடு கட்ட வேண்டும். 300 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் ஆகிறது. அதனடிப்படையிலே 200 சதுர அடி வீடு கட்டுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆகிறது என்பதால், மாநில அரசு கொடுக்க வேண்டிய நிதியான 11,250 ரூபாயை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து மடங்காக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 66,250 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்குப் பெயர் 'இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்'; அது மத்திய அரசின் திட்டம். ஆனால், அந்தத் திட்டத்திற்கு மும்மடங்கு அதிகமாக நிதியைக் கொடுப்பவர் எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதன் பெயரை மாற்றினால்தான், அது சிறப்பாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலிக்க வேண்டும். I.A.Y. திட்டத்தின்மூலம் வீடு கட்டுபவர்களும் நம்முடைய மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். அதேபோல, பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்மூலம் வீடு கட்டுபவர்களும் நம்முடைய மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். பசுமை வீடுகள் திட்டத்தின்மூலம் கட்டுபவர்களுக்கு ஒரு தொகையும், I.A.Y. திட்டத்தின்மூலம் கட்டுபவர்களுக்கு ஒரு தொகையும் இருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பல தலைவர்கள் இருக்கிறார்கள்; நாட்டிலே பல தலைவர்கள் இருக்கிறார்கள். அப்படி பல தலைவர்கள் இருந்தாலும், நீண்ட நெடிய புகழோடு இருக்கின்ற தலைவர்கள் ஒரு சிலரே. அதைப்போலத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தனையிலே எழுகின்ற திட்டங்களெல்லாம், ஏழையெளிய மக்களுக்குச் சரியான முறையில் சென்றடையக்கூடிய வகையிலே இருக்க வேண்டுமென்பதற்காகத்தான், 1,80,000 ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். I.A.Y. திட்டத்தைப் பொறுத்தவரையில், மைய அரசு கொடுத்த திட்டம். மைய அரசு கொடுத்த திட்டத்திற்குக் கூடுதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, உரையை முடியுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிராமப்புறங்களில் குடிசையில்லாத நிலைமை ஏற்பட்டு வரும் நிலையில், நகராட்சிகள், பேரூராட்சிப் பகுதிகளில் இன்னும் அதிக அளவு குடிசைகளும், மனிதன் குடியிருக்க முடியாத வீடுகளும் அதிக அளவில் உள்ளன. இவற்றைக் கருத்தில்கொண்டு, ஒரு சிறப்புத் திட்டத்தின்மூலம் அதிக அளவில் பயனாளிகள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்டுவதற்குத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அதேபோல, குடியிருக்க வீடும் இல்லாமல், இடமும் இல்லாமல், அரசிடம் பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசு, சுகாதாரத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படுத்துவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது. நம்முடைய முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் கிராமப்புறங்களில் பயன்பாடற்ற நிலையில் உள்ள சுகாதார வளாகங்கள் அனைத்தையும் சீரமைத்திட நிதி ஒதுக்கீடு



செய்து, அதையெல்லாம் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். ஆனாலும், இன்றைக்கு நகர்ப்புறப் பகுதிகளிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் திறந்தவெளியைத்தான் பல இடங்களில் பயன்படுத்த வேண்டிய அவல நிலையில் மக்கள் உள்ளனர். காரணம், கழிப்பிடம் கட்ட இட வசதியில்லாததுதான். என்னுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில்கூட, கிருஷ்ணன்கோவில், வைத்தியலிங்காபுரம், இடையன்குளம் போன்ற பகுதிகளில் இதுபோன்ற நிலைமை உள்ளது. இதுபோல தமிழகம் முழுவதும் உள்ள இடங்களைக் கண்டறிந்து, சுகாதார வளாகங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெரிசல் நிறைந்த பகுதிகளிலே பொதுக் கழிப்பிட வசதி கட்ட முடியாமல் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். ஏற்கெனவே வீடுகளில் கழிப்பறை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக மைய அரசு ஒரு நிதி கொடுக்கிறது; மைய அரசு ஒரு நிதியும், மாநில அரசு ஒரு நிதியும், அந்தப் பயனாளி ஒரு நிதியும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, அது நடைமுறையில் இருக்கிறது. அந்த நிதி போதாது என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்காக மாநில அரசின் பங்காக இருந்த ரூபாய் ஆயிரத்தை, 2,500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோக, மீதியை மைய அரசு கொடுத்து, 5,000 ரூபாய்க்கு அந்தக் கழிப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். திரு. வெ. பொன்னுப்பாண்டி, உரையை முடியுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், தமிழக கிராமப்புற மக்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப் பிரசாதமாகும். கடந்த காலங்களில் சொந்தக் கிராமங்களில், வேலையில்லாமல் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டத்திற்கும் வேலை தேடிச் சென்ற நிலை மாறியுள்ளது. மனைவியை, குழந்தைகளை, வயதான தாய், தந்தையரைப் பிரிந்து வேலைக்குச் சென்ற அவல நிலை குறைந்துள்ளது. சொந்த பூமியில் வேலை செய்யமுடியும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பிற்பகல் 1–20

மேற்படி வேலைக்கு மத்திய அரசு ஊதியமாக 119 ரூபாய் அறிவித்திருந்தாலும், இனியும் பல்வேறு இடங்களில் 65 ரூபாய், 70 ரூபாய் என்ற அளவிற்குத்தான் கூலியைப் பெறுகின்றனர். மேற்படி பணிக்குச் செல்பவர்களை எங்கு வேலைக்குச் செல்கிறீர்கள் என்று கேட்டால் கண்மாய் வேலைக்குச் செல்கிறோம் என்று சொல்கிறார்கள். இனியும் மேற்படி திட்டப் பணிகள் சம்பந்தமான முழு விவரங்களும் அவர்களுக்குத் தெரிய வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி வேலைக்குச் செல்கின்றவர்களுக்கு 60 ரூபாய், 80 ரூபாய் எனக் கொடுத்தது முந்தைய ஆட்சிக் காலத்தில். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, அந்தத் திட்டத்தினுடைய பயன்கள் எப்படியெல்லாம் அந்தத் தொழிலாளர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று ஆய்ந்து, அறிந்த பின்புதான், ஓர் ஊராட்சியில் முந்தைய ஆட்சியில் ஒரு வேலைதான் எடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் வசிக்கின்ற இடங்களுக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட வேலையை எடுத்துக்கொள்ளலாம் என்று ஆணையிட்டதன் அடிப்படையில்தான், கடந்த நிதியாண்டில் மட்டும் மனித உழைப்பிற்காக 3,000 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.



இந்த நிதியாண்டில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் இவ்வளவு பெரிய மனித உழைப்புக்கான ஊதியம் தமிழகத்திற்கு வந்த காரணத்தினால், இந்த நிதியாண்டில் மைய அரசு இதற்காக 33,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அந்த 33,000 கோடி ரூபாயில், 5,000 கோடி ரூபாய், தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் 15 விழுக்காடு தமிழகத்திற்கு வருகிறது. அப்படி வருகின்ற நேரத்தில், எந்த அளவிற்கு இதை விரிவுபடுத்தியிருந்தால், அந்தத் தொழிலாளர்களுக்கு நிதி சரியான முறையில் சென்றிருந்தால், இந்த நிதியை ஒதுக்குவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு நான் நன்றி சொல்லுகிறேன்.

அற்புதமான பல திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, குறிப்பாக ‘தாய்’ திட்டம், உள்ளாட்சித் துறை மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைவார்கள் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம், நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் சரியாகச் சென்றுவிட்டால் நிச்சயமாக தமிழகம் அனைத்து வகைகளிலும் முன்னேறும் என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எல்லா மாவட்டங்களிலும் plant நிறுவி பாட்டில்கள் மூலமாகவும், கேன்கள் மூலமாகவும் மினரல் வாட்டரை நிரப்பி, நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்தால் அரசுக்கு நல்ல

வருமானம் வரும்; மக்களுக்கும் நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரயில்வே துறையிலும்கூட 'ரெயில் நீர்' என்று விநியோகம் செய்கிறார்கள். இதை மாநில அரசு ஏற்றுக்கொண்டால் நிச்சயமாகத் தமிழக அரசுக்கு நன்மை வரும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சிகளிலே 'குடிநீர் உடனாளிகள்' ஆக, தற்காலிகமாகப் பணிபுரிபவர்களை உடனடியாக நிரந்தரப் பணியாளர்களாக்க வேண்டுகின்றேன்.

மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களான, பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்ற தலைவர்களுக்கு, local bodies–இலே வெற்றி பெற்றவர்களுக்கு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாத ஊதியம் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பேரூராட்சி அலுவலகங்களில், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டம், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகளில், 30 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலியாகப் பணிபுரிந்து வந்தவர்களுக்கு மூன்றாண்டுகள் தொகுப்பூதியம் என்று அரசு ஆணை எண் 198, நாள் 26–10–1998–இல் பிறப்பிக்கப்பட்ட பின்னரும், தாமதமாக 2000 ஆம் ஆண்டில் தொகுப்பூதியத்தை வழங்கியதால், 1998, 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பழைய ஓய்வூதியப் பயன்கள் எதுவும் இதுவரையிலும் வழங்கப்படவில்லை. அதை வழங்க ஆவன செய்யும்படி அன்போடு வேண்டுகின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் சிறப்புச் சாலைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய சாலைகள், அதிகமாக மழை பெய்யக்கூடிய காரணத்தினால் சீக்கிரமாகச் சேதமடைந்து விடுகின்றன. ஆகவே, சிறப்புச் சாலைத் திட்டத்தின்மூலமாக, அப்பகுதிகளில், பிளாஸ்டிக் சாலைகள், rubberised சாலைகள் போன்றவற்றை அமைத்தால் நீண்ட காலமாக அவை சேதமடையாமல் இருக்கும் என்பதையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.



குளச்சல் நகராட்சியின் மக்கள்தொகை 24,000, அங்கே bore மூலமாகவும், கிணறு மூலமாகவும்தான் தண்ணீர் விநியோகம் செய்து வருகிறார்கள். மின்சாரத் தட்டுப்பாட்டால் தண்ணீர் சரியாக விநியோகம் செய்ய முடியவில்லை. ஆகவே, நம்முடைய அரசு powerful motor–ஐ மானிய விலையில் வழங்கி உதவி செய்ய வேண்டுகின்றேன்.

பாம்பூரி வாய்க்காலில் தடுப்பணை கட்டவும், கடல் உப்புநீர், பாம்பூரி வாய்க்காலில் கலக்காதவாறு அவசர நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகிறேன். மேலும், A.V.M. சேனலில் தண்ணீர் தேங்கிக் கிடப்பதால், கடல் உப்புநீர் கலந்து இயற்கைத் தண்ணீருக்குக் கேடு விளைவிக்கிறது. ஆகவே A.V.M. சேனலை சுத்தப்படுத்த வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

பிற்பகல் 1–25

ரீத்தாபுரம் டவுன் பஞ்சாயத்தில் அதிகமாக தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தகுந்த வருமானம் இல்லாத பஞ்சாயத்துகளாக இருப்பதால், குறைந்தபட்ச செயல் திட்டத்தில், குடிநீர்த் திட்டம் வழங்க வேண்டுகின்றேன். பாம்பூரி வாய்க்காலில் புதிதாக ஒரு பாலம் அமைக்கவும், உப்பளம் பகுதியில் சுமார் 50 ஏக்கர் நிலம் இருப்பதால், ஒன்றுபட்ட வணிக வளாகம் மற்றும் பஸ் நிலையம் அமைக்கவும் வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய குளச்சல் தொகுதியிலே 50 எக்கர் நிலம் இருக்கிறது. அது கடலோரப் பகுதியானதால் அரசுக் கல்லூரிகளே அங்கு இல்லை. ஒரு Marine கல்லூரி தந்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மருதங்குறிச்சி பகுதியிலே, பஞ்சாயத்திலே, மூன்று ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்தப் பகுதியை ஏற்கெனவே அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள். அங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்றபோது, டவுன் பஞ்சாயத்தாக இருக்கக்கூடிய கப்பியறை, வாள்வச்சகோஷ்டம், முளகுமூடு, மருதங்குறிச்சி ஊராட்சி மற்றும் பக்கத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கும்

தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் புதிதாகச் செயல்படுத்த வேண்டுமென்று வேண்டுகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும், குருந்தங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட கட்டிமாங்கோடு, குருந்தங்கோடு, ரத்தினங்கோடு, கடியப்பட்டணம் கிராம பஞ்சாயத்துகளுக்கும் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள் நகரிலே, ஒரு பஸ் நிலையம் இருக்கின்றது. அந்த பஸ் நிலையம் மூன்று பகுதிகளாக இருக்கின்றது. ஒருங்கிணைந்த ஒரு பஸ் நிலையமாக இல்லை. மிகவும் பழுதடைந்த, நீண்ட காலமான ஒரு பஸ் நிலையம். அதை மாற்றி விட்டு, அந்தப் பகுதியிலே ஒரு புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திங்கள் நகரில் உள்ள மார்க்கெட் சீரழிந்து கிடக்கிறது. மீன் மார்க்கெட் கெட்டுப்போய் இருக்கிறது. அங்கு நவீன முறையில் ஒரு மீன் மார்க்கெட் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல என்னுடைய தொகுதியிலே எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படாமல் எங்கள் தொகுதி ஒரு ஒதுக்கப்பட்ட தொகுதியாக இருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசினால் போடப்பட்டிருக்கும் திட்டங்கள் நிலைப்படுத்தபடுமா என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எல்லாத் திட்டங்களும் அறிவிக்கப்படுகின்றன. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் சொல்வது, என்னுடைய சொந்த தொகுதியிலே திங்கள் நகரிலிருந்து மணவாளக்குறிச்சி செல்லும் சாலை 9 ஆண்டுகளாகப் பணிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த காலத்திலேயே இந்தப் பணி தொடங்கி இன்னும் முடியவில்லை. பெரிய ஆதங்கமாக, மக்கள் வருத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சாலையை சீக்கிரமாகச் செய்து முடிக்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல என்னுடைய தொகுதியிலே ஒரு அரசு கல்லூரிகூட இல்லை. அரசுக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுகின்றேன்.

ஆகவே, பல்வேறு திட்டங்களை, சிறந்த திட்டங்களை வகுத்திருக்கின்ற இந்த அரசு, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே திருத்தங்களை நடைமுறைப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல ஆட்சியினுடைய அடையாளமாக, அழகிய முகமாக விளங்குவது, பல்வேறு துறைகளில் முதன்மையாக இருப்பது உள்ளாட்சித் துறை. அந்த அடிப்படையில் உள்ளாட்சித் துறையின் மானியத்தில் புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

ஏறக்குறைய 40 வருடங்களுக்கு முன்பு, இந்தியாவினுடைய கிராமங்களில் வாழக்கூடிய மக்கள்தொகை 80% ஆக இருந்தது. ஆனால், மெல்ல மெல்ல குறைந்து இப்போது வெறும் 51% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி, கிராமங்களுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டக்கூடிய வகையிலே, கிராமத்தினுடைய அனைத்துக் கட்டுமானங்களையும், உள் கட்டுமானத்தையும் வலுப்படுத்தக்கூடிய வகையில், தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த “தாய்” திட்டத்தை புதிய தமிழகக் கட்சி வரவேற்கிறது. அதே சமயத்தில், இந்தத் “தாய்” திட்டம் குக்கிராமங்களுடைய மேம்பாட்டை அடிப்படையாக வைத்தாலும்கூட, அதை நிறைவேற்றுகின்றபொழுது, ஊராட்சிமன்றத் தலைவர்கள் அதிலே புறக்கணிக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்தமாக ஊராட்சி ஒன்றிய அளவில் அந்தப் பணிகளை மேற்கொள்கின்றபோது, ஊராட்சிமன்றத் தலைவர்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்துகின்றேன்.

பிற்பகல் 1–30

திறந்தவெளிக் கழிப்பிடங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இப்போது முழுமையான சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒன்று அறிவிக்கப்பட்டு, அனைத்து வீடுகளிலேயும் கழிப்பறை கட்டும் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கழிப்பறை கட்டுவதற்கு ரூ.5,500 மட்டும் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு கழிப்பறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ரூ.5,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் 500 ரூபாய் சேர்த்துச் சொன்னால் அதற்கு எங்கே போவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 5,000 ரூபாயில் நிச்சயமாக ஒரு கழிப்பறையைக் கட்ட முடியாது. இது மிகப் பெரிய நல்ல திட்டம். ஏனென்று சொன்னால், சுகாதாரத்தினுடைய அடிப்படையே கழிப்பறையில்தான் தொடங்குகிறது. இந்தியாவில் திறந்தவெளிக் கழிப்பிடங்களைப் பயன்படுத்துவதன் காரணமாகத்தான் காலரா, மலேரியா போன்ற பல்வேறு நோய்கள் பரவுகின்றன. எனவே, அப்படி ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வருகிறபோது, 5,000 ரூபாயோடு இன்னொரு 5,000 ரூபாயைச் சேர்த்து 10,000 ரூபாயாகக் கொடுத்தால் அனைத்து வீடுகளிலும் கழிப்பறைகள் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். அவர்கள் நிறைவேற்றுவார்கள்; நூற்றுக்கு நூறு இந்தத் திட்டம் நிறைவேறும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய



கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். ஆனால், மைய அரசு, நம்மிடத்திலே பணத்தைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் நம்மிடத்திலே கொடுக்கிறபோது அவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருந்தன்மையாக 'நான் சேர்த்துக் கொடுக்கிறேன்' என்று சொன்னால்கூட, அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவம் மைய அரசுக்கு இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்து வைக்கப்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் கடலோர மாவட்டமாகும். அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய 11 ஒன்றியங்களில், 9 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் அபாயகரமான நிலைக்குக் குறைந்திருக்கிறது. Local source மூலம் கிடைக்கும் குடிநீர் எந்தவிதத்திலும் உபயோகமானதாக இல்லை. எந்த இடத்திலாவது ஆழ்குழாய்க் கிணறு தோண்டினாலும், முழுவதும் உப்பு நீராக வருகிறது. எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றுதான் அந்த மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். உலக சுகாதார நிறுவனம் ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்கு அறிவித்திருக்கக்கூடிய 40 லிட்டர் என்ற அளவை நாம் கொடுக்க முடியும். ஆனால், ஏறக்குறைய 20, 25 வருடங்களுக்கு முன்பு அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை வைத்து மட்டும் அவர்கள் போட்டிருக்கிறார்கள். இன்று இருக்கக்கூடிய மக்கள்தொகைக்கேற்ப அது உபயோகமானதாக இல்லை. எல்லா இடங்களிலும் பாதி அளவிற்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

தூத்துக்குடிக்கு மட்டும் கேட்கிறார். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதற்கும் வழங்கவிருக்கிறார்கள். ஏனென்றால், இவை நீண்ட வருடங்களுக்கு, முன்பாகக் கொண்டு வரப்பட்ட திட்டங்கள். மக்கள்தொகை கூடியிருக்கின்ற காரணத்தால், அந்தத் தண்ணீர் போதவில்லை. எனவே, அனைத்து மக்களுக்கும் நிறைவான தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் மீண்டும் அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து, அதற்கு எவ்வளவு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது; எங்கிருந்து தண்ணீரைப் பெறலாம் என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதற்கேற்றவாறு எல்லாப் பகுதிகளிலேயும் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. ஒருசில கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு அறிவிக்க இருக்கிறேன். மாநில அளவிலே ஆய்வு செய்து முறையாக அனைவருக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் 2001 ஆம் ஆண்டு ஜனத்தொகைபடி 27,367 பேர். இன்றைய கணக்கெடுப்பின்படி 2011–இல் தோராயமாக 38,295 பேர். அந்தக் கிராமத்தில் 59 குடியிருப்புகள், அதாவது hamlets இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட வெறும் 12 இலட்சம் லிட்டர் தண்ணீர் மட்டுமே குறியீடாக உள்ளது. ஆனால், கடந்த 3 ஆண்டுக் காலமாக, ஒருநாள்கூட 12 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. 5 இலட்சம், 6 இலட்சம் லிட்டர் தண்ணீர் மட்டுமே கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக மாப்பிள்ளையூரணியில் வாழக்கூடிய 40,000–க்கும் மேற்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நீண்ட காலத்திற்கு முன்பாகவே, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே அமைக்கப்பட்ட அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின் மோட்டார்கூட பயனற்று இருக்கிறது. 15 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவிலே அந்த மின் மோட்டார்கள் அமைக்கப்பட்டிருக்கும். கிட்டத்தட்ட 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் வருகிறபோது அதனுடைய இழுக்கும் சக்தி குறைந்த காரணத்தால், அதுபோன்ற மின் மோட்டார்களையும் மாற்றி அமைக்க வேண்டுமென்று அந்தந்தத் துறையினுடைய அலுவலர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

பிற்பகல் 1–35

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 374 கிராமங்களில் இதுவரையிலும் வெறும் 260 கிராமங்களில் மட்டும்தான் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலில் இருக்கிறது. ஏறக்குறைய 120 கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்றுவரையில் செயல்படவில்லை. அதன் காரணமாக, ஒரு சிறப்புத் திட்டத்தை அங்கே அமல் செய்து அந்தப் பகுதி மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையினைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 5 ரூபாய், 10 ரூபாய் என்று விலை கொடுத்து மக்கள் தண்ணீரை வாங்குகின்றனர். எனவே, ஒரு சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மாப்பிள்ளையூரணி, குலேந்திரசெல், தருவிக்குளம், வெள்ளப்பட்டி போன்ற கடலோரக் கிராமங்களுக்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற இடங்களில் வணிக வளாகங்கள் கட்டப்பட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து பெண்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் அதில் 10 சதவிகிதம் கடைகளை ஒதுக்கித் தந்தார்கள். தற்போது அந்த முறை வழக்கத்தில் இல்லை. எனவே, ஒடுக்கப்பட்ட, பட்டியலின மக்களுக்கு அனைத்து வணிக வளாகங்களிலும் கடைகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 1991 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே, நம்முடைய சமூக மக்கள் கடைகளை வைக்க வேண்டும் என்பதற்காக பல இடங்களில், விலை மதிப்புள்ள பல இடங்களில், பேருந்து நிலையங்களில்கூட வணிக வளாகங்கள் கட்டப்பட்டு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதனை எடுக்க வேண்டும் என்ற ஓர் உத்தரவினைப் பிறப்பித்து இன்றுவரை அவர்கள் அங்கே கடை வைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) திரு. கதிரவன் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகளில் கருத்துகளைப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச



வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துகளை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றத்தைக் கொடுத்துக்கொண்டே இருப்பேன்' என்று பல திட்டங்களைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உருவானதுதான் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023 என்ற திட்டம். தமிழக மக்களின் வாழ்க்கைத்தரத்தை நிச்சயமாக உயர்த்தும் என்ற நம்பிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். குறிப்பாக 'பசுமை வீடு' திட்டம்; இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம். 300 சதுர அடியில் வீட்டைக் கட்டிக்கொடுக்கவும், அதிலே விளக்குகள் அமைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1,80,000 ரூபாய் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

பசுமை வீடு திட்டம் குறித்தும் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுபோன்று 'தாய்' திட்டம். தமிழகத்தில இருக்கின்ற 12,524 கிராம ஊராட்சிகளும், அதை உள்ளடக்கியிருக்கின்ற 79,393 குக்கிராமங்களும் பயன்பெறும் வகையில் அனைத்து கிராமங்களும் முன்னேற வேண்டும் என்ற வகையில், அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற சிந்தனையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 'தாய்' திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கு மட்டும், 2012–2013 நிதியாண்டுக்கு மட்டும் 2,250 கிராம ஊராட்சிகளுக்கு, 'தாய்' திட்டத்தின் மூலமாகப் பணம் ஒதுக்கப்பட்டு, 12,589 குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் செய்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேநேரத்தில், இன்றையதினம் 49 சதவிகித மக்கள் நகரத்தை நோக்கியும், நகரத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சென்னை உட்பட 10 மாநகராட்சிகளுக்கும், 125 நகராட்சிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை முன்னேற்றுகின்ற வகையில் வீடு கட்டிக் கொடுப்பதற்காக முறையே 750 கோடி ரூபாய், 500 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்களின் அரசு, தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் சுகாதாரமான முறையில் 40 லிட்டர் தண்ணீர் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளித்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே நகர்ப்புறங்களிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். குறிப்பாக, தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களுக்கு இப்போது பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும், தண்ணீர் மட்டும் சரியாகச் சென்றடைவதில்லை. அதுமட்டுமல்ல; மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பியிருந்தாலும், சுத்தமான நீரைப் பெறமுடியாத நிலை இப்போது தமிழகத்தில் இருந்துவருகிறது. அதற்குப் பதிலாக சின்டெக்ஸ் டாங்குகளை அமைத்து அதன்மூலமாக தண்ணீர் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை இருந்துவருகிறது. தேனி மாவட்டத்தில் லோயர் கேம்ப்பிலேயிருந்து 3 மாவட்டத்திற்கும் குடிநீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால், மின் மோட்டார் உபயோகிக்காமல், gravitational force மூலமாக 3 மாவட்டங்களுக்கும் தண்ணீர் கிடைக்குமாறு லோயர் கேம்ப் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே கிட்டத்தட்ட 4 திட்டங்கள், சேடப்பட்டி குடிநீர்த் திட்டம், கருமாத்தூர் குடிநீர்த் திட்டம், 99 கிராம குடிநீர்த் திட்டம், 85 கிராம குடிநீர்த் திட்டம் என்று இருக்கின்றன. தண்ணீர் வருகிறது. ஆனால், கடைசி கிராமங்களுக்குத் தண்ணீர் செல்வதில்லை. இன்னும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 64 கிராமங்களுக்கு சுத்தமான தண்ணீர் வருவதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து அந்தப் பகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். (குறுக்கீடு) திரு. கதிரவன், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் பேசலாம். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மதுரை மாநகரம் வளர்ச்சி அடைகின்ற நிலையை உருவாக்கித் தந்தமைக்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களது உசிலம்பட்டி தொகுதியில் பேருந்து நிலையம் இருக்கிறது. ஆனால், டாக்சி ஸ்டாண்ட் கிடையாது, ஆட்டோ ஸ்டாண்ட் கிடையாது, சைக்கிள் ஸ்டாண்ட் கிடையாது. ஆகவே, உசிலம்பட்டி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், அமைச்சரிடம் எழுதிக்கொடுத்துவிடுங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற உலகப் பொது மறையாம் திருக்குறளில் உள்ளபடி, பொருள் வரும் வழிகளை இயற்றி, பொருள் சேர்த்து, சேர்த்த பொருளைக் காத்து, காத்தவற்றை முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுவதிலே நல்ல அரசு என்பதற்கேற்ப, முறையாகத் திட்டங்களுடன் பொருள் சேர்த்து அதை நாட்டுமக்களின் துயர் துடைக்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்ற தொலைநோக்குத் திட்டத்தை வகுத்துச் செயல்படும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.

'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று சொல்வார்கள். கடந்த 10 மாத கால ஆட்சியிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுக்கு மாபெரும் துணையாக தமிழக மக்கள் இருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றாகவும், அதை உணர்த்துகின்ற வகையிலே, ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதை எடுத்துக்காட்டத்தான், சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் மக்கள் மாபெரும் வெற்றியை அளித்துள்ளனர் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலங்கைப் போரிலே ஒன்றரை இலட்சம் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டு, வாய் மூடி மௌனமாக இருந்து, போர் நிறுத்தம்கோரி, உண்ணாவிரதம் என்ற பெயரிலே 2 மணி நேரம் காமெடி நாடகம் நடத்தி, தன்னுடைய மொத்த குடும்பத்தினுடைய பதவி சுகத்திற்கு ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திய சுயநலக் கூட்டத்திற்கு மத்தியில், 'இலங்கையிலே தனி ஈழம் அமைப்போம், இலங்கைத் தமிழரைக் காப்பேன்' என்று சூளுரைத்து, ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியதோடு, ஐக்கிய நாட்டு மனித உரிமை மன்றத்திலே இலங்கைக்கு எதிராக மத்திய அரசை வாக்களிக்க வைத்து உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியான புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிலே, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்பு தந்த நான் வணங்கும் மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதமலர்க் கமலங்களுக்கு நன்றியைத் தெரிவித்து எனது உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் *1–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்குக் குடிநீர், சுகாதாரம், வீட்டு வசதி, தெரு விளக்கு, சமூகப் பாதுகாப்பு போன்ற சிறப்புத் திட்டங்களை, அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் செய்துதருகின்ற ஒரே துறை குடிநீர் வழங்கல் துறை. அந்த அடிப்படையிலேதான் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை இயற்றி உள்ளாட்சி நிருவாகத்தை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்தால் மட்டும் போதாது என்று சொல்லி, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித்தருகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம். தமிழகம் முழுவதும் தற்போது 60 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட இங்கே அம்மா அவர்கள் சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், கடந்த கால மைனாரிட்டி



தி.மு.க. ஆட்சியில் தேர்தல் நேரத்திலே வாக்குகளைப் பெறுவதற்காக ஒரு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கி அதற்கு அவர்களுடைய பெயரையும் வைத்து, வீடு கட்டுவதற்கு பணத்திற்குப் பதிலாக டோக்கனை வழங்கி, மக்களை ஏமாற்றி அவர்கள் வசித்துவந்த சிறிய குடிசை வீடுகளை இடிக்கவைத்து, மக்களை நடுத்தெருவில் நிறுத்தியவர்கள்தான் கடந்தகால ஆட்சியாளர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மேலும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்மூலமாக ஒரு வீடு கட்டுவதற்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகை ரூபாய் நாற்பத்து ஐந்தாயிரம். மத்திய அரசின் பங்காக இருக்கும் 33,750 ரூபாயோடு இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 66,250 ரூபாயைக் கூடுதலாகத் தந்து, ஒரு இலட்சம் ரூபாய் மொத்தமாக வழங்குகிற ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருப்பது இதுவரை எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஓர் அற்புதமான திட்டம்.

அதைப்போல, 1991–1992 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் மகளிர் சுய உதவிக் குழு. மகளிர் சுய உதவிக் குழு இன்று ஏறத்தாழ 85 இலட்சத்து 70 ஆயிரம் மகளிரைக் கொண்ட ஓர் இயக்கமாக வளர்ந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடித்தளமிட்டதன் காரணமாகத்தான் இன்று அது மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியிருக்கிறது. இந்த மகளிர் சுய உதவிக் குழு வளர்ச்சியடைந்து, பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதற்குக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும், இந்தத் திட்டத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுசெல்கிற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கிராமம்—ஓர் உற்பத்திப் பொருள், கல்விச் சந்தை, மதி பஜார் எனும் இடைவேளை விற்பனை மற்றும் மாநில அளவிலான விற்பனைச் சங்கங்கள் தோற்றுவித்தல் போன்ற புதிய திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி, பெருமை சேர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001–2006 ஆம் ஆண்டு வரை அம்மா

[திரு. ஓ.கே. சின்னராஜ்] [2012 ஏப்ரல் 9

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 12,793 மகளிர் சுய உதவி வளாகங்கள் கட்டப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பேற்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பராமரிக்காமல் விட்டுவிட்டதன் காரணத்தினால் மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே 170 கோடி ரூபாய் அளவிலே இன்று நிதியொதுக்கீடு செய்து அவற்றைப் பராமரிப்பு செய்து கொண்டிருக்கிறார் என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதைப்போல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 144–இல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். திரு. ஓ.கே. சின்னராஜ் உட்காருங்கள். வேறு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம். Chamber–இல் வந்து நன்றி சொல்லுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கைகளில் பேசக்கூடிய வாய்ப்பளித்தமைக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது, சிறப்பாக நடைபெற்று வருகின்ற 'தாய்' திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பசுமை வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருப்பதற்காக மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நகர்ப்புறங்களிலே 2015 ஆம் ஆண்டிற்குள் பொது இடங்களிலே மலம் கழிப்பதை முற்றிலும் ஒழிக்க தற்போது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை மனதார வரவேற்கின்றோம். அனைத்து நகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் மேற்கொள்வது போன்ற நல்ல திட்டங்களை வரவேற்பதுடன், 2005 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட ஆம்பூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் விரைவிலே தொடங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 9] [திரு. அ. அஸ்லம் பாஷா]

அதேபோன்று, கீழக்கரை, இராமேஸ்வரம் போன்ற நகரங்களிலே அறிவிக்கப்பட்டு, இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்ற பாதாளச் சாக்கடைத் திட்டங்களை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுபான்மையின மக்கள்மீது அதிக அக்கறை கொண்ட இந்த நல்ல ஆட்சியிலே ஒரு கோரிக்கையை நான் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாநகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்படும்போது ஹலால்முறையில் அதாவது இஸ்லாமிய வழிமுறையைப் பின்பற்றி பிராணிகளை அறுப்பதற்கு சிறுபான்மையின மக்களின்மீது அக்கறையுள்ள இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, எத்தனையோ சலுகைகளை வழங்குகின்ற இந்த அரசு, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைக் கட்டணமில்லாமல் வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–50

ஒரு முக்கிய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நகராட்சிகளிலேயும், ஊராட்சிகளிலேயும் சாலைகள் அமைக்கப்படுவதற்கு முன்பாக, முதலிலே கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பல பகுதிகளிலே கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கப்படாமல் வெறும் சாலைகள் மட்டுமே போடப்பட்டுள்ளதால் கழிவுநீர் தேங்கிக் கிடக்கின்றது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. முதலிலே கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட வேண்டும். பிறகு தெருச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். தெரு விளக்குகளைப் பராமரிப்பதையும், குப்பைகளை அகற்றுவதையும், கொசு மருந்து அடிப்பதையும் தனியார்வசம் இருப்பதை அறவே ஒழித்து அனைத்துப் பணிகளையும் நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையே மேற்கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல அங்கீகரிக்கப்படாத மனைகளிலே கட்டப்படும் வீடுகளுக்கு அடிப்படை வசதிகளைப் பெறுவதிலே மிகவும் சிரமம்

உள்ளது. ஏற்கெனவே இருந்ததைப்போல ஒரு சதுர அடிக்கு ரூபாய் இரண்டு என்று கட்டணம் செலுத்தினால் அடிப்படை வசதிகள் பெற முடியும் என்ற திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வைக்கின்றேன்.

சில இடங்களிலே குடிநீருக்காகப் போடப்படுகின்ற borewell—அதனுடைய ஆழம்—ஆழ்துளையினுடைய ஆழம் குறைந்தபட்சம் 300 அடி இருக்க வேண்டுமென்ற சட்டம் இருந்தும், சில இடங்களிலே அதைக் குறைவாகப் போடுவதால் இரண்டு, மூன்று மாதங்களிலே நீர் வற்றி, borewell பயனற்றுப் போவதைத் தடுக்க கடுமையான சட்டம் மேற்கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குகள் அமைத்தல், துப்புரவுத் தொழிலாளர் நியமனம், கால்வாய் வெட்டுவது, குப்பை எடுப்பது, கொசு மருந்து அடிப்பது, குடிநீர் விநியோகிப்பது போன்ற பணிகளைத் தனியார்வசம் ஒப்படைப்பதை ஒழித்து நகராட்சி நிருவாகமும், உள்ளாட்சித் துறைகளுமே இந்தப் பணிகளையெல்லாம் மேற்கொண்டால் மக்களுக்குச் சிறப்பாகப் பணி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண தொண்டனாகிய என்னை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிலைகளில் சமூகத்திலே ஓர் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்து, சமூகத்திலே என்னையும் ஒரு மனிதனாக உருவாக்கி, இன்று தங்கள் முன்பாக பதிலுரை கூறுவதற்குரிய நல்ல வாய்ப்பினையும் உருவாக்கிக் கொடுத்த எங்கள் அன்னை, இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பணிவான வணக்கத்தினையும், நன்றியினையும் நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு குடிநீரைப் பற்றி ஒரு வரையறை கொடுத்திருக்கிறது. கிராமப்புறங்களில் வாழ்கின்றவர்களுக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் தண்ணீரும், பேரூராட்சிகளில் வாழ்கின்றவர்களுக்கு ஒரு நாளைக்கு 70 லிட்டர் தண்ணீரும், நகராட்சியில் வாழ்கின்றவர்களுக்கு ஒரு நாளைக்கு 90 லிட்டர் தண்ணீரும், மாநகராட்சியில் வாழ்கின்றவர்களுக்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லை என்று சொன்னால், 110 லிட்டர் தண்ணீரும், பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறதென்று சொன்னால், 135 லிட்டர் தண்ணீரும் வழங்கப்பட வேண்டுமென்று மைய அரசு ஒரு வரையறை கொடுத்திருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டு மக்களின்மீது நீங்காத பற்றுக்கொண்டு, தன்னுடைய இலட்சியத் திட்டமான 'தமிழ்நாடு விஷன்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'Theme–4' –இல் உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு, தண்ணீர் மற்றும் சுகாதாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 2023–க்குள்ளாக தமிழகம் இந்த நிலைக்கு வரவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–55

Tamil Nadu shall provide piped and pressurised 24x7 water supply to 100% of its residents and ensure that all of them have access to save sanitation including open defecation–free and garbage–free environment.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் 24 மணி நேரமும் வாரத்தில் அனைத்து நாட்களிலும் குழாய்மூலம் சுத்தமான தண்ணீர் விநியோகிக்கப்படும். திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பது இல்லாத வகையில், அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படும், குப்பைக் கூளங்கள் இல்லாத சுற்றுப்புறம் உருவாக்கப்படும் என்று தன்னுடைய இலட்சியத் திட்டமான Vision Tamilnadu–வில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய முதல் கட்டமாகத்தான் கடந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற, கடைக் கோடியிலே இருக்கின்ற மனிதனுக்குக்கூட நிறைவான, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்

வழங்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கின்ற பல திட்டங்கள் நீண்ட காலத்திற்கு முன்பாக உருவாக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் திட்டங்களின் வாயிலாக அவர்களுக்கு உரிய நிறைவான தண்ணீர் கிடைக்கிறதா என்று ஆய்ந்தபொழுது, நிறைவான தண்ணீர் கிடைக்காதபட்சத்தில், கடந்த நிதியாண்டில் ஏற்கெனவே குடிதண்ணீர் கொடுக்கக்கூடிய பகுதியிலேயும், அந்தப் பகுதியில் யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்களுக்கும் சேர்த்து கடந்த நிதியாண்டில் 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினார்கள். கடந்த நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநில அரசின் பங்காக 345.04 கோடி ரூபாயும், மத்திய அரசின் பங்காக 273.84 கோடி ரூபாயும், ஒட்டுமொத்தமாக 618.88 கோடி ரூபாய்க்கு அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் கடந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதற்காக மத்திய அரசின் இந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். நல்ல திறமையுள்ள ஒரு முதல்வர், நாட்டு மக்களுக்குக் கொண்டு வருகின்ற திட்டங்களை அந்தக் குறிப்பிட்ட காலத்திலேயே நிறைவேற்றக்கூடிய செயல்களில் ஈடுபட்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மத்திய அரசு கொடுத்த அந்த வாழ்த்துச் செய்தியை இங்கே படிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

"Dear Madam Chief Minister, The Ministry of Drinking water and Sanitation, Government of India had allocated Rs.273.84 crores to your State under the National Rural Drinking Water Programme for 2011–2012. Considering the fact that your State has performed well and utilised more than 60% of the available funds under the N.R.D.W.P. during the year, I am pleased to inform you that I have decided to give an additional allocation and release of Rs.98.2 crores to your State under N.R.D.W.P. for 2011–2012." (Thumping of desks)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது, மத்திய அரசு கொடுக்கின்ற நிதியை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே முழுவதுமாகச் செலவழித்து இலக்கை எய்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



அவர்களுக்கு மத்திய அரசினுடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. ஜெயராம் ரமேஷ் அவர்கள் ஒரு பாராட்டுக் கடிதத்தை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில், கடந்த ஆண்டு 6,000 ஊரகக் குடியிருப்புகளை எடுத்ததுபோல, இந்த நிதியாண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக மாநில அரசின் பங்காக 566.35 கோடி ரூபாயும், மத்திய அரசின் பங்காக 400 கோடி ரூபாயும், மொத்த நிதி ஒதுக்கீடாக 966.35 கோடி ரூபாயும் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டில் இதேபோல புதிய குடிநீர்த் திட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். எட்டு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்து, கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை இந்த நிதியாண்டில் அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்ன கூற்றை ஏற்று, துறையினுடைய அலுவலர் பெருமக்கள் உடனடியாக அதற்கு திட்ட அறிக்கையைக் கொடுத்தார்கள்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு– தேனி ரூ.60.60 கோடியும், கடலூர் ரூ.650 கோடியும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ.575 கோடியும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரூ.12.84 கோடியும், திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.48.40 கோடியும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.31.52 கோடியும், அதே திருநெல்வேலி மாவட்டத்திற்கு இன்னொரு திட்டத்திற்காக ரூ.46 கோடியும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரூ.103.47 கோடியும், மொத்தமாக, இந்த 8 திட்டங்களுக்காக ரூ.1,527.83 கோடியை திட்ட அறிக்கையாக அரசிற்கு துறை சமர்ப்பித்திருக்கிறது. அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் இந்த நிதியாண்டிலேயே எடுத்துக்கொள்ளப்படும், அதுவும் புதிய அறிவிப்புகளிலே வரவிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி நகராட்சிகளானாலும் சரி, பேரூராட்சிகளானாலும் சரி, மாநகராட்சிகளானாலும் சரி, அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான குடிநீர்த் திட்டங்களைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொள்வோம். சென்னை மாநகராட்சியில் கிட்டத்தட்ட 2011 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 67 இலட்சம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்லாமல், தினமும் வந்து செல்கின்றவர்கள் 25 முதல் 30 இலட்சம் மக்கள் இருப்பார்கள். அதனால், இந்த மாநகராட்சிக்கு மட்டும் ஒரு நாளைக்கு, ஒரு கோடி மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும். எத்தனையோ முதலமைச்சர்கள் இந்த நாட்டை ஆண்டாலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு மாநகராட்சியில் வாழ்கின்றவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டும் என்பதற்காக நீர்நிலை ஆதாரங்களை மேம்படுத்தினார்கள். கடந்த நிதிநிலை அறிக்கையில் கூடுதலாக 4 டி.எம்.சி. தண்ணீர் நிறுத்தப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தேர்வாய்க்கண்டிகையில் கிட்டத்தட்ட ரூ.330 கோடி முதலீட்டில் 1 டி.எம்.சி. தண்ணீர் அங்கே நிறுத்துவதற்காக உத்தரவு பிறப்பித்து, அந்தப் பணிகளைச் செய்வதற்காக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், தினமும் 830 எம்.எல்.டி. தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த 830 எம்.எல்.டி. தண்ணீர் மாநகராட்சி மக்களுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சாலையில் பணிபுரியும் அனைவருக்கும் இந்த 830 எம்.எல்.டி. தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சிக்கு, இந்தப் பெருநகர் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு, முந்தைய அரசு ஏதாவது நிதி அளித்திருக்கிறதா என்று பார்த்தால்,



நிதி அளிக்கவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டில் மட்டும் குடிநீர்த் திட்டத்திற்காக, ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக ரூ.189 கோடியைக் கொடுத்திருக்கின்றார்கள். செம்பரம்பாக்கம் முதல் பூந்தமல்லி வரை குடிநீர்க் குழாய் பதிக்க ரூ.40 கோடி கொடுத்திருக்கின்றார்கள், பூந்தமல்லி முதல் தாம்பரம் வரை குடிநீர்க் குழாய் பதிக்க ரூ.90 கோடி கொடுத்திருக்கின்றார்கள், பகுதி II திட்டத்தின் வாயிலாக ரூ.2.9 கோடி கொடுத்திருக்கின்றார்கள், மொத்தம் இந்த இரண்டு நிதியாண்டில் மட்டும் ரூ.321.9. கோடியை (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகராட்சியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியைக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், முந்தைய அரசில் மாண்புமிகு உறுப்பினர் இந்த மாநகராட்சியினுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர் இந்தத் துறையினுடைய அமைச்சராகவும் இருந்திருக்கிறார். அரசினுடைய நிதியிலிருந்து ஒரு ரூபாயாவது கொடுத்திருப்பாரே என்று சொன்னால், நான் இந்த அவையிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு ரூபாயைக் கூட, இந்த ஒரு கோடி மக்களின் குடிதண்ணீர் பயன்பாட்டிற்காக முந்தைய அரசு கொடுக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் பகுதி II திட்டத்தின் வாயிலாக ரூ.19.3 கோடி கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் பகுதி II திட்டத்தில் வருகின்ற நிதி எதற்குச் செல்கிறதென்று சொன்னால், அலுவலகத்தில் தேவைப்படுகின்ற பொருட்களை வாங்குவதற்காகத்தான் அந்த நிதி ஒதுக்கப்படுகிறது.

பிற்பகல் 2–05

எனவே, இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினராகட்டும், முன்னாள் முதலமைச்சராகட்டும், சென்னை மாநகரத்தை கோட்டை, கோட்டை என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், இன்று சென்னை மாநகரத்தைக் கோட்டை விட்டுவிட்டு, அவருடைய தந்தைதேர்தல் களத்திலே நிற்பதற்கு சொந்த ஊருக்குச் செல்லக்கூடிய நிலைமையே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இங்கே நின்று வெற்றி பெறமுடியாது என்ற நிலைமை. (குறுக்கீடு) நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் please sit down. அவர் இங்கு நிற்கவில்லை. வெளியூரிலே போய் நின்றார் என்கிறார். அதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைத்தானே சொல்கிறோம். (குறுக்கீடு) கோபப்படாதீர்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அவரைக் கோபப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, கோபப்படாதீர்கள். Emotional ஆகாதீர்கள். (குறுக்கீடு) கோபப்படாதீர்கள். Please cool down. Emotional ஆகாதீர்கள். Cool ஆக இருங்கள். Pleasant ஆக இருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையில் நிற்கவில்லை, வெளியில் போய் நின்றார்கள் என்று சொன்ன அந்தக் கருத்து உண்மையான கருத்தா, இல்லையா? (குறுக்கீடுகள்) உண்மையான கருத்தா, இல்லையா? அதற்குத்தான் அவர் சொல்கிறார். இதில் என்ன தப்பாக அவர் சொல்லிவிட்டார். அதை நீங்கள் மறுக்கப் போகிறீர்கள். சரி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆதரவோடு மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பேற்றது. அன்றைக்கு மத்திய நிதித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். மீஞ்சூரிலே குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கினார்கள்; நெம்மேலிக்கு ஒதுக்கினார்கள். அதில் ஏதாவது ஒன்றை இந்த அரசு செயல்படுத்தியதா என்பதை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா . . . (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு இப்பொழுது பதில் சொல்லுவார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, டென்ஷன் ஆகாதீர்கள். டென்ஷன் ஆனால் உங்களுக்குத்தான் blood pressure வரும்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் துறையின் வாரியாக இங்கே எழுப்பப்பட்டிருக்கக்கூடிய சில கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில் சென்னையைக் கோட்டை, கோட்டை என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், இந்தக் கோட்டையை விட்டுவிட்டு அவர்களுடைய தலைவர் ஏன் திருவாரூருக்குச் சென்றார் என்று அவர் கேட்டார். அவராவது சொந்த ஊருக்குச் சென்றார். ஆனால், அவருடைய தலைவர் ஏன் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றார் என்பதை விளக்குவாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சென்னையிலே அடிக்கடி போட்டி போட்டுக்கொண்டிருந்தவர்கள். அம்மா அவர்கள் எப்பொழுதுமே கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களின் நலன் கருதி, கிராமப்புறங்களுக்குச் சென்று வெற்றி பெற்று, அந்தக் கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்காகப் பணியாற்றியவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு திருச்சியிலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே சொல்கின்றபொழுது அம்மா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள்—எங்கள் பாட்டியே பிறந்த மண் இந்த மண்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** எங்கள் தலைவர் குளித்தலையிலே போட்டியிட்டார்; தஞ்சாவூரிலே போட்டியிட்டார்; சென்னையிலே போட்டியிட்டார். அவர்கள் ஊரிலே அவர்கள் நின்றார்கள். எங்கள் தலைவர் அவர்கள் ஊரிலே நின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் புரட்சித் தலைவர் காலத்திலேயிருந்து கிராமப்புறங்களுக்குச் சென்றால் வெற்றி வாய்ப்பே கிட்டாது என்ற நிலையில்தான், அவர்களுடைய தலைவர் ஆகட்டும், அவர்களுடைய பொதுச் செயலாளர் ஆகட்டும் அல்லது இப்பொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆகட்டும், நகரத்திலேயே அவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு—அவர்கள் ஆட்சிக் காலத்தில் குடிதண்ணீரைக் குழாய்களில் கொடுக்கவில்லை; தினமும் லாரியில் கொடுத்தார்கள். இவர்கள் செய்யாமல் விட்டுவிட்ட, இவர்கள் செய்ய முடியாத பணியை—2004–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புதிய வீராணம் திட்டத்தை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்தத் தண்ணீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வந்து, லாரியில் கொடுக்கவில்லை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழாயின் வாயிலாகக் கொடுத்த காரணத்தினால்தான் சென்னை மாநகராட்சியிலே அரசுத் துறை அலுவலராக இருந்தாலும் சரி, வியாபாரப் பெருமக்களாக இருந்தாலும் சரி, நம்மை முழுமையாகக் காப்பாற்றக்கூடிய ஒரு தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் என்று உறுதியோடு இருந்தார்கள். கடந்த 2006 தேர்தலிலேயே வெற்றி கிட்டுமா, கிட்டாதா என்ற நிலை வந்தது. பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறவில்லை அவர்களுடைய தலைவர்கள். குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார்கள். தொடர்ந்து வெற்றி



பெற்றுக்கொண்டு வருகிறோமே, இந்த முறை நின்று தோற்றுவிட்டால் கடைசிக் காலத்தில் இந்தத் தோல்வியை ஏன் சந்திக்க வேண்டும் என்று நான் சொந்த ஊருக்குச் சென்றுவிட்டேன் என்று அவர் சொந்த ஊருக்குச் சென்றார், இவர் அடுத்த ஊருக்குச் சென்றுவிட்டார். இவர் ஆயிரம் விளக்கில் நிற்கவில்லை; அடுத்த ஊருக்குப் போய்விட்டார். அதுதான் நிலைமை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அவர் பேசட்டும், அவர் பேசட்டும்.

**திரு. துரைமுருகன்**: எங்களுடைய தலைவர் இதுவரையிலே தேர்தலில் நின்று தோற்றதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தொகுதியான திருவாரூரில் இதுவரையில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலவைி அம்மா அவர்களை, அவர் ஏன் தொகுதி மாறினார் என்று கேட்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் அவர் சொந்தமானவர். அவர் எந்தத் தொகுதியிலும் நிற்கலாம். ஆனால், நீங்கள் நிற்கவில்லையே! 1971–லிருந்து ஆரம்பித்தால், சைதாப்பேட்டை, சேப்பாக்கம், துறைமுகம் என்று மாறி மாறித்தானே போனீர்கள். சென்னை மாநகராட்சியைவிட்டு வேறு எங்குமே போகவில்லையே! வேறு எங்கும் போகவில்லையே! (குறுக்கீடுகள்) அதனால், விட்டுவிட்டு வாருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் குடிநீர் ஆதாரத்திற்காக தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Vision 2023–ல் எல்லோருக்கும்

24 மணி நேரமும் முழுமையாகக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குத் திட்டத்தோடு இதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து எப்பொழுதுமே குடிக்கின்ற நீர், பயன்படுத்துகின்ற நீர், கழிவுநீராக வெளியேறும்போது அதை வெளியிலே விடாமல் பாதுகாப்பாக வெளியிலே எடுத்துச் சென்று, அதைச் சுத்திகரித்து ஆறோடு அல்லது குளத்தோடு விடக்கூடிய ஒரு திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவிக்கப்பட்ட நிலையிலே தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மாநகராட்சிகளிலும், எல்லா நகராட்சிகளிலும், எல்லாப் பேரூராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த நிதிநிலை அறிக்கையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க இந்தத் துறையினுடைய அலுவலர்கள் இந்த ஓராண்டுக் காலத்தில்—அதனை ஒரு சாதனையாகச் செய்கிறார்கள். இந்தத் துறையினுடைய அலுவலர் பெருமக்கள், பொறியாளர்கள், அந்தத் துறையைச் சார்ந்த செயலாளர்கள், அவர்கள் இதை ஒரு சாதனையாகவே செய்கிறார்கள் என்று சொன்னால், அந்தச் சாதனைக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள், அந்த அதிகாரிகளை வழிநடத்தக்கூடிய தலைவர்களாக இருக்க வேண்டும். இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் திட்டத்தை அமல்படுத்திய காரணத்தினால், மாநில அளவில் 9 மாநகராட்சிகளுக்கும் 2,070 கோடி ரூபாய், 125 நகராட்சிகளுக்கு 7,290.52 கோடி ரூபாய், 529 பேரூராட்சிகளுக்கு 12,926.69 கோடி ரூபாய் ஆக மொத்தம் 22,887.21 கோடி ரூபாய், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் மாநகராட்சிகளையும் உள்ளடக்கி இந்த நிதியாரங்களைக் கொடுத்திருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்ட அறிக்கை கொடுத்ததோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையில் நகராட்சிகளில், பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதை இப்போது அறிவிப்பிலே நான் சொல்லவிருக்கிறேன் என்பதையும்



நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆனால், கடந்த ஆட்சியில்—இங்கே கூறினார்களே, இவர்கள் நடத்திய அந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில், 35 நகராட்சிகளில், 18 நகராட்சிகளுக்கு இவர்கள் அரசாணை வழங்கினார்கள். 17 நகராட்சிகளில் அறிவித்தார்கள். இப்படி அறிவித்து அரசாணை வெளியிட்ட 35 நகராட்சிகளினுடைய பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் அவர்கள் நடைமுறைப்படுத்தாமல் வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். இதுதான் கடந்த ஆட்சியில் அவர்கள் நடந்த விதம். அப்படி விடப்பட்ட 18 நகராட்சிகள் சிதம்பரம், அவனியாபுரம், கத்திவாக்கம், பொள்ளாச்சி, கீழக்கரை, மன்னார்குடி, சாத்தூர், குறிச்சி, குனியமுத்தூர், சிவகாசி, பழனி, கவுண்டம்பாளையம், காரைக்குடி, கொடைக்கானல், பெரியகுளம், ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் மதுராந்தகம். அதேபோல, கைவிடப்பட்ட 17 நகராட்சிகள், மேட்டூர், ராசிபுரம், குமாரபாளையம், தென்காசி, பரமக்குடி, சங்கரன்கோயில், சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், போடிநாயக்கனூர், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி, திருவத்திபுரம், குடியாத்தம், ஓசூர், அருப்புக்கோட்டை, பட்டுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரம். இந்த 35 நகராட்சிகளிலும் அவர்கள் அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதேபோல் பேரூராட்சிகளில், 7 பேரூராட்சிகளை அறிவித்தார்கள். அதையும் அவர்கள் செய்யவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, இந்தக் கழிவுநீரை அகற்றக்கூடிய நிலையிலே இவ்வளவு பெரிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–15

அதோடு மட்டுமல்ல, சென்னை மாநகராட்சியில் கழிவு நீர் எங்கெல்லாம் வருகிறதோ—மாண்புமிகு உறுப்பினர் இப்போது அவையிலே இல்லை, தே.மு.தி.க–வினுடைய எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் என்று கருதுகிறேன், அவர் கேள்வி நேரத்தின்போது கேட்டார். சென்னை மாநகராட்சியிலே நிறைய இடங்களில் கழிவு நீர் வெளியேறுகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற கிட்டத்தட்ட 337 இடங்களைக் கண்டாய்ந்து அதை உடனடியாக

அடைப்பதற்கும், மாசுபடிந்த தண்ணீர் ஆற்றுப் பகுதிகளில் கலக்காமல் இருப்பதற்காகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே 300 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைக்கூட கடந்த ஆட்சியாளர்கள் செய்யவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும், ஒவ்வொரு செயல்பாடுகளையும் கூர்ந்து கவனித்து உடனடியாக அந்தந்தத் துறையினுடைய அலுவலகப் பெருமக்களை அழைத்து, ஆய்வு செய்து, அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததோடு மட்டுமல்லாமல், 300 கோடி ரூபாயையும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து குடிநீர். கழிவு நீரைச் சுத்திகரிப்பது, அதேபோல, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் 13,533 மெட்ரிக் டன் குப்பை சேகரிக்கப்படுகிறது. அதில், சென்னை மாநகராட்சியில் மட்டும் 400 மெட்ரிக் டன் குப்பை சேர்கிறது. அதை வெளிக் கொண்டு வருவதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு முந்தைய அரசு ஏதாவது நிதி வழங்கியிருக்கிறதா என்று சொன்னால் ஒரு பைசாகூட இதற்கும் வழங்கவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக 2011–2012 ஆம் ஆண்டில் 9 நகராட்சிகளுக்கு, மாநகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட நிதி 124.54 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில், அந்த உள்ளாட்சி அமைப்புகளினுடைய நிதியாதாரங்களை வைத்துத்தான் வாங்கிக் கொண்டிருந்தது. ஆனால், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளினுடைய நிதியாதாரங்களை வைத்து அதற்குத் தேவையான உபகரணங்களை வாங்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டுதான் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதற்கு 750 கோடி ரூபாயையும் ஒதுக்கி, இந்த



திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு மட்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 124.54 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கியதன் காரணமாக இன்று எவ்வளவு வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், சென்னையைத் தவிர்த்து மாநகராட்சி, நகராட்சிக்கு மட்டும் 4,150 வாகனங்கள் இந்த நிதியாண்டிலே வாங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, 6,557 தொட்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. இதற்கு நிதி ஏது என்று சொன்னால், புரட்சித் தலைவியினுடைய அரசிலே கொடுக்கப்பட்ட நிதி. இங்கே அமர்ந்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அவர் ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுக் காலம் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தார். ஒரு ரூபாய் இதுபோன்ற நிதி, அரசு நிதியாக— ஏற்கெனவே நான் சொன்னேன். சென்னை மாநகராட்சியினுடைய குடிநீருக்காக 159 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்று.

அதேபோலத்தான், இங்கே 124.54 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், இது அரசு நிதி. இதுபோன்ற நிதியைக் கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதோடுமட்டுமல்லாமல், நகராட்சி, மாநகராட்சியைப் போலவே பேரூராட்சிகளுக்கும் 15.64 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து, குப்பைகளை அகற்றுகின்ற திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகராட்சிகளில், பேரூராட்சிகளில் விலை மதிப்புள்ள நிலங்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்தக் குப்பைகளை வெளியேற்றுவதற்கும், அதைச் சீர் செய்வதற்கும் நிலங்கள் இல்லாதபட்சத்தில் எங்கெங்கெல்லாம் நகராட்சிகள், பேரூராட்சிகளில் குப்பைகளைக் கொட்டுவதற்கு இடங்கள் இல்லையோ அதையெல்லாம் ஆய்வு செய்து, அதற்கேற்ற வகையிலே நிலங்களைக் கண்டெடுத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக, இன்று கிட்டத்தட்ட 90 விழுக்காடு பேரூராட்சிகளுக்கும்,

நகராட்சிகளுக்கும் குப்பைகளைக் கொட்டக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஒட்டுமொத்தமாக 45,193 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உள்ளன. இந்தச் சாலைகளுக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 6 மாநகராட்சிகள் மற்றும் 29 நகராட்சிகளில் 585 கிலோ மீட்டர் தூரச் சாலைகளைச் சீரமைக்கும் பணிக்காக 220.36 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, 2011–2012 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 67 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 145.11 கோடி ரூபாய் மதிப்பில் 464.22 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீர்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 426 பேரூராட்சிகளில் 108.5 கோடி மதிப்பில் 575.50 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஆதாரம் கொடுத்து நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–20

அதோடுமட்டுமல்லாமல், பேரூராட்சி 'நபார்டு' நிதியிலிருந்து 2011–2012 ஆம் ஆண்டில் 221 பேரூராட்சிகளில் 97.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 587.47 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீர்படுத்தியிருக்கிறார்கள். இப்படி நகராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள்–அது சாலைகளானாலும் சரி அல்லது தெரு விளக்குகளானாலும் சரி அல்லது குப்பைகளை வெளியேற்றுவதனாலும் சரி, குடிநீரானாலும் சரி அல்லது கழிவுநீரை வெளியேற்றுகிற திட்டமானாலும் சரி இப்படி ஒரு நகராட்சியினுடைய, பேரூராட்சியினுடைய, மாநகராட்சியினுடைய உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில்தான், கடந்த நிதிநிலை அறிக்கையிலே நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, சென்னை மாநகராட்சியைத் தவிர, ஏனைய நகராட்சிகளுக்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தார்கள்.



சென்னை மாநகராட்சிக்குத் தனியாக 500 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, இந்த நிதியாண்டிலேயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி ஆதாரங்களை உருவாக்கிக் கொண்டு வருகின்ற புதிய திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற அரசாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல். கடந்த நிதிநிலை அறிக்கையில், ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் எப்பொழுது வரும் என்று கேட்டார்கள். குறித்த காலத்திற்குள்ளாக, உள்ளாட்சித் தேர்தல் வரும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே கூறினார்கள். அதற்கேற்றாற்போல் இங்கே பல்வேறு உறுப்பினர்கள்கூட உள்ளாட்சிமன்றத் தொகுதிகளைச் சீரமைக்கவேண்டுமென்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உள்ளாட்சிமன்றத் தொகுதிகளில் விரிவாக்கப்பட்டப் பகுதிகளை முழுமையாகக் கணக்கெடுத்து, அவற்றைச் சாதி வாரியாக, இட ஒதுக்கீடு வாரியாக ஆய்வு செய்து, முடிவு செய்து, அவர்களுக்கு ஒதுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், நீண்டநெடிய காலமாக இருந்துவந்த பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரு 'வார்டு'–ஒரு வார்டிலே பார்த்தோம் என்று சொன்னால், 3 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது யார் ஓட்டு போட்டார்கள்? யார் ஓட்டு போடவில்லை? என்றுகூடத் தெரியாது. அதுபோன்ற நிலையை மாற்றி ஓர் உறுப்பினருக்கு ஒரு 'வார்டு' என்ற திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலிலே ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், இரண்டு அடுக்கு முறை தேர்தல் வரவேண்டும், மூன்று அடுக்கு முறை தேர்தல் தேவையில்லை என்றும் பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய அரசமைப்புச்

சட்டத்தின்கீழ் முடிந்த வரையில் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மாநில அரசு எதைச் செய்யமுடியும் என்று கருதினாரோ, அதை உடனடியாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான், பேரூராட்சித் தலைவருக்கும், நகராட்சித் தலைவருக்கும், மாநகராட்சி மேயருக்கும் நேரடியாக மக்களே வாக்களித்து அவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய *(மேசையைத் தட்டும் ஒலி)* ஓர் அமைப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்று இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஏற்படுத்திக் கொடுத்து கடமை முடித்து, தேர்தல் ஆணையத்திடத்திலே ஒப்படைத்துவிட்டார்கள். தேர்தல் ஆணையத்திடத்திலே ஒப்படைத்து அந்தத் தேர்தல் எவ்வளவு ஜனநாயகத்தோடும், நேர்மையோடும் நடந்தது என்பதை நாடறியும் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தனையில் உதித்த பசுமை வீடுகள் திட்டம். இந்தப் பசுமை வீடுகள் திட்டம், கடந்த நிதியாண்டில் 2011—2012—இல் 60 ஆயிரம் என்று அறிவித்து, இந்த 5 ஆண்டுகளுக்குள்ளாக ஒவ்வோராண்டும் 60 ஆயிரம் வீடுகள் என்று அறிவித்து, 5 ஆண்டுகளுக்குள்ளாக 3 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதனடிப்படையிலே, கடந்த 2011—2012 ஆம் ஆண்டு 60,000 வீடுகள் கட்டுவதற்காக 1,080 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். அதேபோல் இந்த நிதியாண்டும் பசுமை வீடு திட்டத்திற்கு 1,080 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஒதுக்கியதுபோலவே, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டிலும் ஒரு இலட்சத்து 553 வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநில அரசு நிதியாக 666 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2—25

ஏற்கெனவே நான் இந்த இடத்திலே சொன்னேன். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் மைய அரசு வெறும் 33 ஆயிரத்து 750 ரூபாய் கொடுக்கிறது. செங்கல் வாங்குவதற்கும், கம்பி வாங்குவதற்கும், சிமெண்ட் வாங்குவதற்குமே அது போதாமல் போய்விடுகிறது. அதை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நம் நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் நல்ல பாதுகாக்கப்பட்ட கான்கிரீட் வீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குச் சிந்தனையோடு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறு மடங்கு உயர்த்தி, மாநில அரசு 11 ஆயிரத்து 250 ரூபாய்தான் கொடுக்க வேண்டும். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 66 ஆயிரத்து 250 ரூபாயை ஒதுக்கி, ஆறு மடங்கு ஒதுக்கியிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு மடங்கு, இரண்டு மடங்கு அல்ல. ஆறு மடங்காக உயர்த்தி, ஒரு இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பசுமை வீடு திட்டத்தில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்று சொன்னால், கட்டடத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம், சூரிய ஒளி கொடுப்பதற்காக ரூபாய் 30 ஆயிரம். 300 சதுர அடி வீடுக்கு ஒன்றரை இலட்சம் என்பதைப்போல, 200 சதுர அடிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, இந்த ஒரு இலட்சத்து 553 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதோடுமட்டுமல்ல; மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், “தானே” புயலால் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களுக்கும் இந்த நிதியாண்டில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறேன் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். குடிசையே இல்லாத மாநிலமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று. அது உண்மை. ஏனென்று சொன்னால், இந்த நிதியாண்டில் மட்டும் 60 ஆயிரம் பசுமை வீடுகள், ஒரு இலட்சத்து 553 இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள், “தானே” புயலுக்கு ஒரு இலட்சம் வீடுகள். ஆக, இந்த நிதியாண்டில் மட்டும் 2 இலட்சத்து 60 ஆயிரத்து 553 வீடுகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதோடுமட்டுமல்ல; மொத்த வீடுகள் கட்டுவதற்கு 2 இலட்சத்து 60 ஆயிரத்து 553 வீடுகளுக்கு, 3 ஆயிரத்து 85 கோடியே 53 இலட்சம் நிதி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண காசு அல்ல. 3 ஆயிரத்து 85 கோடியே 53 இலட்சம் என்று சொன்னால், மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டத்திற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிதி ஆதாரங்களை உருவாக்கி கிட்டத்தட்ட 2 இலட்சத்து 60 ஆயிரத்து 553 வீடுகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையிலே பதிய வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டம், குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம். இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலேயும், பொதுவுடைமைக் கட்சிகள் ஆட்சி செய்த மேற்குவங்கம் ஆனாலும் சரி, கேரளா ஆனாலும் சரி, காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கின்ற வட மாநிலங்கள் ஆனாலும் சரி, நம்மைப் போன்ற பிராந்திய, அந்தக் கட்சிகள் அந்தந்த மாநிலங்களிலே இருக்கின்ற முதலமைச்சர்கள் ஆனாலும் சரி, யாருக்கும் உதிக்காத சிந்தனை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உதித்த காரணத்தினால், ஓர் ஊராட்சியில் பெரிய ஊர்களைப் பார்த்து அந்தப் பகுதிகளுக்கு மட்டும் தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டுவருவதை, எல்லா அரசுகளும் கொண்டுவருவதைப்போல, தானும் கொண்டுவராமல் அந்த ஊராட்சியில், குக்கிராமங்கள். மூலையிலே இருக்கின்ற 20 வீடுகள் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம், 40 வீடுகள் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகள், அந்தக் கிராமங்களுக்குத் தேவையான சாலை வசதி, அந்தக் கிராமங்களுக்குத் தேவையான குடி தண்ணீர் வசதி, அந்தக் கிராமங்களுக்குத் தேவையான மின் வசதி, அந்தக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் இறக்கின்றபோது அவர்களை அடக்கம் செய்வதற்கான மயான வசதி, அந்த மயான வசதிக்கு சாலை வசதி, இந்த அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய திட்டம் என்ற காரணத்தால், இந்தத் திட்டத்திற்கு 'தாய் திட்டம்' என்ற பெயரையே நாங்கள்



வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தில் இப்பொழுது 2,250 ஊராட்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த 2,250 ஊராட்சிகளில் இருக்கின்ற 18,581 குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கே இருக்கின்ற கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துகின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தெந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதுவும், இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சரும் செய்யாத பணி. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் தொகுதிக்குச் சென்றுவிட முடியாது. அப்படிச் செல்லுகின்றபோதுகூட, எல்லா நேரத்திலும், எல்லா கிராமங்களுக்கும் சென்றுவிட முடியாது. அப்படிச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்கள் வீட்டிலே இருந்தாலும்கூட, அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எத்தனை குக்கிராமங்கள் இருக்கின்றன, அந்த குக்கிராமங்களுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன என்பதை இந்தத் துறையினுடைய அலுவலர்களுடன் மிக சிரத்தை எடுத்து நான்கு விதமான அட்டவணைகளை, துறை அதிகாரிகளிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். முதல் அட்டவணை என்னவென்று சொன்னால்—இதிலே குறுந்தகட்டிலே இருக்கின்றது—எந்த ஊராட்சி எடுக்கப்பட்டிருக்கின்றது, எந்த ஊராட்சி எடுத்துக்கொள்ளப்பட்டு, என்னென்ன பணிகள் என்னென்ன கிராமங்களுக்கு வருகின்றன என்பது முதல் அட்டவணையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இரண்டாவது அட்டவணை என்னென்ன வேலைகளை எடுத்துக்கொண்டோம் என்பதைக் காட்டுகிறது. மூன்றாவது அட்டவணை என்னென்ன வேலைகள் இன்னும் எடுக்கப்படவிருக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

நான்காவது அட்டவணை சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும், வேறு நிதியிலிருந்தும் என்னென்ன பணிகளை எடுத்துக்கொள்ளலாம் என்பதைக் காட்டுகிறது. இவ்வாறு நான்கு அட்டவணைகளாகப் பிரித்து இந்தக் குறுந்தகட்டிலே பதியப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அனைத்து சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கும் இந்தக் குறுந்தகடு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையோடு வழங்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் அவையிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி கொடுக்கப்பட்ட குறுந்தகடுகளை பார்க்க வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மடிக்கணினியை வாங்கிக் கொள்ளுங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற திட்டங்களை நான் கொடுக்க இருக்கிறேன், இதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

முந்தைய ஆட்சிக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை நான் இங்கே கோடிட்டுக் காட்டியாக வேண்டும். முந்தைய ஆட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். கிராமப் பகுதியை மேம்படுத்துவதற்காக அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அவர்கள் வழங்கினார்கள். அதற்காக ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் கொடுத்தார்கள். அப்படி வழங்கப்பட்ட திட்டம் எந்தெந்தப் பகுதியில் என்னென்ன தேவைகள் என்பதை ஆய்ந்து, அறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று சொன்னால், இல்லை. பொதுவாக, 500 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டோம், ஓர் ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய், அது பெரிய ஊராட்சியாக இருந்தால் என்ன, சிறிய ஊராட்சியாக இருந்தால் என்ன, எத்தனை குக்கிராமம் என்பதெல்லாம் அவர்களுக்கு அக்கறை இல்லை. 20 இலட்சம் ரூபாய் கொடுத்துவிட்டோம், நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படி இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை. சிறிய ஊராட்சியாக இருந்தால், அதனுடைய தேவைகளை அறிந்து 20 இலட்சம் ரூபாய், நடுத்தர ஊராட்சியாக இருந்தால், அதனுடைய தேவைகளை



அறிந்து 30 இலட்சம் ரூபாய், இன்னும் சற்று பெரிய ஊராட்சியாக இருந்தால், 40 இலட்சம் ரூபாய், இன்னும் பெரிய ஊராட்சியாக இருந்தால், 50 இலட்சம் ரூபாய் அந்த ஊராட்சிகளுக்கு அளிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டில் மட்டும் 750 கோடி ரூபாய், கடந்த நிதியாண்டில், அதாவது 2011–2012–இல் இந்தத் திட்டத்திற்கு 680 கோடி ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தார்கள். இப்பொழுது இந்தத் திட்டம் இன்னும் விரிவுபடுத்தப்பட்ட நிலையிலே, இன்னும் நிதி தேவை என்கின்ற நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால், முதலில் எடுத்த திட்டம், முதலாவதாக எடுத்த திட்டத்தில் என்ன குறை, நிறை இருக்கிறது என்பதை ஆய்ந்த பிறகுதான் தெரியும். இங்குகூட சில சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கலாம், மாண்புமிகு மூத்த உறுப்பினர் துரைமுருகன் போன்றவர்கள் கேட்கலாம், கடந்த 2011–2012–இல் 2,020 ஊராட்சிகள் எடுத்திருக்கிறீர்கள். 2,020 ஊராட்சிகளில் இத்தனை குக்கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்கிறீர்கள். இத்தனை குக்கிராமங்கள் என்று சொல்லி, 680 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இந்த நிதியாண்டில் 2,250 ஊராட்சிகளில் இத்தனை குக்கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்கிறீர்கள், 750 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள் என்று கேட்பார்கள். அதற்காகத்தான் கடந்த நிதியாண்டிலுள்ள குறை, நிறைகளை ஆய்வு செய்து, இந்த நிதியாண்டில் அந்தக் குறைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் கிட்டத்தட்ட 70 கோடி ரூபாயைச் சேர்த்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) அதோடு மட்டுமல்லாமல், . . .

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்ட பிறகு கேளுங்கள். (குறுக்கீடு) சரி clarification கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்ணா

மறுமலர்ச்சித் திட்டத்தில், அந்த ஊராட்சியிலே இருக்கக்கூடிய hamlets–ஐ அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும், 'தாய்' கிராமம் தவிர, இருக்கக்கூடிய அந்த hamlets–இலும் என்னென்ன பணிகள் தேவையோ, அவை முறையாக ஆய்வு செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்போது ஒரு கிராமத்திற்கு 20 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால், உதாரணத்திற்கு எடுத்தோம் என்று சொன்னால், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், மொத்தத்திலே இருக்கக்கூடிய 12,524 பஞ்சாயத்துகளிலே, பாதிக்கும் மேற்பட்டு இருக்கக்கூடிய பஞ்சாயத்துகளில், 6,241 பஞ்சாயத்துகளுக்கு நீங்கள் 20 இலட்சம் ரூபாய்தான் கொடுக்கிறீர்கள். அதாவது 5,400 பஞ்சாயத்துகளுக்கு 30 இலட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள். 800 பஞ்சாயத்துகளுக்குத்தான் நீங்கள் 50 இலட்சம் ரூபாய் நிதியை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் சொல்வது என்னவென்றால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே நாங்கள் 20 இலட்சம் ரூபாய் கொடுக்கிறபோது 50 விழுக்காட்டிற்குமேல் கிராமங்கள் பயன்பட்டு இருக்கின்றன, இன்னும் சொல்லப்போனால், 11,000 பஞ்சாயத்துகளை எடுத்துக்கொள்வதாகச் சொன்னால், அதே அளவில் நீங்கள் நிதியொதுக்கீடு செய்திருக்கிறீர்களே தவிர, கூடுதலாக அந்தப் பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் நிதி ஒதுக்கவில்லை என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கின்றபோதே, அதற்குரிய பதிலையும் அவரே ஏற்றுக்கொண்டார். எத்தனை ஆயிரம் பஞ்சாயத்துகளுக்கு 20 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள்? அவை சிறிய பஞ்சாயத்துகள். அதைவிடப் பெரிய பஞ்சாயத்துகளுக்கு 30 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். அதைவிட பெரிய பஞ்சாயத்துகளுக்கு (குறுக்கீடு) அதைத்தான் நானும் சொன்னேன்.



அதே கருத்தைத்தான் நானும் வலியுறுத்தினேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சியில் சிறிய சிறிய கிராமங்கள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கும். அந்தச் சிதறிக் கிடக்கின்ற கிராமங்களிலிருந்து நேரடியாக பெரிய கிராமங்களுக்குச் செல்வதற்கு இணைப்புச் சாலைகளை ஏற்படுத்தவேண்டும். அந்த இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துகின்றபோது கொஞ்சம் தூரமாக இருந்தால், அதற்கு நிதியாதாரம் கூடும். அந்த அடிப்படையிலேதான் சிறிய கிராமங்களுக்கு, சிறிய ஊராட்சிகளுக்கு 20 இலட்சம் ரூபாயும், மற்ற கிராமங்களுக்கு 30 இலட்சம், 40 இலட்சம், 50 இலட்சம் ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம். ஆனால், கடந்த ஆட்சியில் அவர்கள் ஏற்கெனவே சொன்னதுபோல, ஒட்டுமொத்தமாக 20 இலட்சம் ரூபாய் கொடுத்து அதிலே நீங்கள் என்ன வேலை வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் என்று சொல்லியுள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்து, குறுந்தகடு கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய திட்டம். எந்த மாநிலத்திலுமே அப்படிக் கொடுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் 'தாய்' திட்டத்தை நன்கு ஆய்ந்து, ஆராய்ந்த பின்பு, என்னென்ன பணிகள், இந்த நிதியாண்டில் மட்டுமல்ல; தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கும், தொகுதி முழுவதும் எவ்வளவு ஊராட்சிகள் இருக்கின்றனவோ, அந்தத் தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் எத்தனை குக்கிராமங்கள் இருக்கின்றனவோ அந்தக் குக்கிராமங்களுக்கு என்னென்ன பணிகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் முழுமையாக வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் உறுதிபடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுகூட, மாண்புமிகு பேரவைத் தலைவர்கூட நினைக்கலாம். என்ன அய்யா, எல்லாவற்றிற்கும் கொடுக்கிறீர்களே, எங்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று? நீங்கள் மாநகராட்சியில் இருக்கிறீர்கள். மாநகராட்சிகளும் மேம்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்

*2023–இல் சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 50,000 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி)* உலகத் தரம் வாய்ந்த நகரமாக சென்னை மாநகராட்சியை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், 'தாய்' திட்டம், பசுமை வீடுகள் திட்டம். இதற்கு முன்பாகவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2001–2002–இல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, கிராமப்புறங்களிலே வாழ்கின்ற பெண்கள் அவர்கள் காலைக் கடனைக் கழிக்க வேண்டும் என்று சொன்னால், உரிய வாய்ப்பு வசதிகள் அங்கில்லை; காலையில் எழுந்து வயல்காட்டிற்குச் செல்லவேண்டுமென்றால், அங்கு விவசாயி வேலை செய்துகொண்டிருப்பான்; அதைப் பார்க்கின்ற அந்தப் பெண், அந்தச் சகோதரி, உட்கார முடியாமல் வீட்டிற்கு வந்துவிடுவாள். வீட்டிற்கு வந்து அவள் என்ன செய்வாள்? தடுமாறுவாள். எனவே, கிராமப்புறங்களில் இருக்கின்ற பெண்கள் காலைக் கடனை, மாலைக் கடனாக மாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அவல நிலைமை கிராமப்புறங்களிலே முன்னால் இருந்தது. அந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், கடந்த 2001–2006 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், ஒவ்வொரு ஊராட்சியிலும் 'ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகம்' என்ற திட்டத்தைத் தீட்டி, எல்லா ஊராட்சிகளிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக அமைக்கப்படுகிற சுகாதார வளாகத்தில், பெண்கள் காலைக் கடனை முடிக்கலாம்; அங்கே குளித்துவிடலாம்; துணி துவைத்துக் கொள்ளலாம்; துணியைக் காய வைத்துக்கொள்ளலாம்; ஒரே உடை இருந்தால், அது காய்ந்த பின்பு அந்தத் துணியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வரலாம். இவ்வளவு வசதிகளோடு கிராமப்புறங்களில் உருவாக்கப்பட்ட 'ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகம்' மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே மேம்படுத்தப்படவில்லை. சுகாதார வளாகங்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தை அவர்கள் துண்டித்தார்கள். எவ்வளவு பெரிய கொடுமை? அந்தச் சுகாதார வளாகங்களுக்குத்



தண்ணீர் கொடுக்கக்கூடிய bore–wells repair என்று சொன்னால், அதைச் சரி செய்து கொடுக்கவில்லை. இப்படி அரசின் வாயிலாக எந்தவிதமான உதவிகளும் மக்களுக்குக் கிட்டாத காரணத்தினால்தான், அத்தனை சுகாதார வளாகங்களும் பாழடைந்துவிட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனேயே, கிட்டத்தட்ட மூன்று மாத காலத்திற்குள்ளாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக 170 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்கிறார்கள். ஆனால், பெண்களுக்கென்று கொண்டுவந்த ஒரு திட்டத்தை பாழ்படுத்திய இவர்கள், பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்தோம் என்று இங்கே குரல் கொடுப்பதில் எந்தவித நியாயமும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்போது பெண்களுக்குக் கொடுத்ததைப் போலவே, ஆண்களுக்கும் சுகாதார வளாகங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 2 என்ற விகிதத்தில் 770 ஆண்கள் சுகாதார வளாகங்களை உருவாக்கிக் கொடுக்கவிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல; கிராமப்புறங்களிலே, வீடுகளிலே கழிவறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதுவொரு மைய அரசுத் திட்டம். இந்த மைய அரசுத் திட்டத்தில், மாநில அரசின் பங்கு 1,000 ரூபாயாக இருந்தது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,000/– ரூபாய் என்பது போதாது என்று, 2,500/– ரூபாயாக அதிகப்படுத்திக் கொடுத்து, 5,000 ரூபாய் செலவில், கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் வீடுகளுக்கு ஏற்படுத்தப்படும் கழிப்பிட வசதிக்காக, 62.5 கோடி ரூபாயை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், இப்படி ஊராட்சிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற அதேநேரத்தில், அந்த ஊராட்சிகள் தூய்மையாகவும் இருக்க வேண்டும்;

சுத்தமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே, 31 மாவட்டங்களில் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து, அந்த ஊராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய் பரிசு மற்றும் விருது பொருள் வழங்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே இதுபோன்றே ஊராட்சிகளுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கி வந்தார்கள்.

அடுத்ததாக, மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இது மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்று சொன்னாலும்கூட, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இந்த மாநிலத்தில், இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் இந்தத் திட்டம் சரியாகச் செயல்படாத காரணத்தினால், ஒரு தொழிலாளி ரூ.80/–, அதிகபட்சமாக ரூ.90/–தான் ஊதியம் பெற்று வந்தார். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, இதற்குரிய துறை அலுவலர்களை, அதிகாரிகளை, செயலாளர்களை அழைத்து, தொழிலாளர்களுக்குக் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எப்படிச் செயல்படுத்தினால், அவர்களுக்கு ரூ.119/– கொடுக்க முடியும் என்பதை ஆய்ந்தறிந்து, நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இன்றைக்கு இந்தத் தொழிலாளர்கள் 110/– ரூபாயிலிருந்து, 119/– ரூபாய் வரை ஊதியம் பெறுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல; கடந்த ஆட்சியாளர்கள் செலவழித்த பணத்தைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 10 மாத கால ஆட்சிக் காலத்தில் 3,000 கோடி ரூபாய் இந்தப் பணிக்காக ஒதுக்கி, செலவு செய்திருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டுதான், ஏற்கெனவே சொன்னதைப்போல, மைய அரசு இந்த நிதியாண்டில் 33,000 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கிறது. இந்த 33 ஆயிரம் கோடி ரூபாயில், தமிழகத்திற்கு மட்டும் 5 ஆயிரம் கோடி ரூபாய்



ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரண விஷயமல்ல. எப்படியென்றால், ஏற்கெனவே இருந்த அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்ததோடு நின்றுவிட்டது. கடந்த ஆட்சியில் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு வேலையைத்தான் எடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள்தொகைக்கேற்ப, எந்தெந்தப் பகுதிகளிலே இருக்கிறார்களோ, அவர்கள் அருகிலேயே பணியைச் செய்வதற்குரிய வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதற்காக, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள்.

பிற்பகல் 2–45

அதோடு மட்டுமல்லாமல், தனியாரின் நிலங்களிலேயும் இந்தத் தொழிலாளர்கள் பணியாற்றலாம் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதனடிப்படையிலேதான், கிட்டத்தட்ட 8 இலட்சம் ஆதி திராவிட மக்களுடைய நிலங்களை மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தவிருக்கிறார்கள். அதேபோல, 16 இலட்சம் அளவிற்கு இருக்கிற சிறு விவசாயிகள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதேபோல, குறு விவசாயிகளாக ஒன்றரைக் கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இவர்களுடைய நிலங்களைச் சீர்படுத்துவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும், மேடு, பள்ளங்களைச் சரிசெய்வதற்கும், நீராதாரங்களை உருவாக்குவதற்கும், அப்படி உருவாக்கப்பட்ட நிலங்களில் செடிகளை வைப்பதற்கும்கூட இந்த 100 நாள் வேலை திட்டத்திலே அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய திட்டம்! இதனால், என்ன ஆகிறது என்றால், விவசாய வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை என்ற நிலை மாறி, அவர்களுக்கு உதவுவதற்கு இந்தப் பணியாட்கள் செல்கிறார்கள்; ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த அன்புச் சகோதரர்கள், இந்தத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொண்டு, செலவில்லாமல் அவர்களுடைய நிலங்களைப் பண்படுத்துகிறார்கள். எவ்வளவு பெரிய திட்டம்!

மனித உழைப்பால், இந்த நிதியாண்டில் மட்டும் தமிழகத்திற்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் வரவிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டத்தில், தொழில் முனைவோர்கள் வாயிலாக மட்டும் தமிழகத்திற்கு நிதியாதாரம் வரவில்லை. உழைக்கின்ற தொழிலாளிகளுடைய மனித உழைப்பின் அடிப்படையிலேயேகூட, 5 ஆயிரம் கோடி ரூபாய், பொருளாதாரம் மேம்படுகின்ற வகையிலே இந்தத் திட்டத்தின் வாயிலாகத் தமிழகத்திற்கு வரவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு பெரிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, கிராமப்புறங்களிலே வாழ்கின்ற பெண்கள், தங்களைத் தாங்களே காத்துக் கொள்வதற்காகவும், பொருளாதார ரீதியாக மேம்படுவதற்காகவும், பல்வேறு குடும்பங்களில் கணவன் கொடுக்கின்ற தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்காகவும் சுய உதவிக் குழுக்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். அப்படி சுய உதவிக் குழுக்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியதன் வாயிலாக, இன்றைக்குத் தமிழகத்தில் 5,56,000 சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. இன்றைக்கு சுய உதவிக் குழுக்களில் மொத்தம் 85.70 இலட்சம் பெண்கள் இப்போது உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

மூன்று நாட்களுக்கு முன்பாகக்கூட, ஜெய்ப்பூரிலே இந்தத் துறையினுடைய மத்திய அமைச்சர் திரு. ஜெய்ராம் அவர்கள் சொல்லும்போது, (குறுக்கீடு) இந்தியத் துணைக் கண்டத்தில்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அமைச்சர் திரு. ஜெய்ராம் ரமேஷ் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** திரு. ஜெய்ராம் ரமேஷ் அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் சுய உதவிக் குழு உறுப்பினர்களாக 3 கோடி பெண்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார். இது ஐந்து ஆண்டுகளில் 7 கோடியாக உயரும் என்று சொன்னார். அதோடு மட்டும் நின்று விடவில்லை; எதிர்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலேயும் ஒரு பெண், சுய உதவிக்



குழுவின் உறுப்பினராக இருப்பார் என்று சொன்னார். இது ஐந்து ஆண்டுக் காலம் கழித்து எப்படியிருக்கும் என்று அவர் சொன்ன கருத்து. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே 1991—லே கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தில், இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டும் 85.70 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சுய உதவிக் குழுக்களில் சாதாரண கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள் மட்டுமல்ல; இப்போது நகர்ப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள்கூட இதிலே இணைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, இந்தச் சுய உதவிக் குழுக்களுடைய நிகழ்ச்சிகளை ஒரு பெரிய விழாவாகவே எடுத்து வந்திருக்கிறார். இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வருகின்றபோது, சுய உதவிக் குழுப் பெண்களுக்காக பெரிய மேடை அமைக்கப்படும். அங்கே 10 ஆயிரம் பெண்கள் வருவார்கள்; இவர் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வார். கலந்துகொண்டு, 'சுழற்கேடயம் கொடுக்கிறேன்' என்று சொல்லிக் கொடுப்பார். இவரும் மணிக் கணக்கிலே நிற்பார்; அவர்களையும் மணிக் கணக்கிலே நிறுத்த வைப்பார். இதுவொரு விளம்பர யுக்தி. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்று, இந்த 10 மாத காலத்தில், 2011—2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் புதிதாக 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும் என்று சொன்னார். 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு விட்டன.

பிற்பகல் 2—50

இந்த சுய உதவிக் குழுக்களுக்கு, இந்த நிதியாண்டில் வங்கியில் 4,000 கோடி ரூபாய் பிணையாகக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார். நம்முடைய அரசுத் துறை அலுவலர்கள், புரட்சித் தலைவியினுடைய ஆணையை ஏற்று 100 விழுக்காடு அளவிற்கு 4,000 கோடி ரூபாயை பிணையாகக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், 30 கோடி ரூபாயைக் கூடுதலாகக் கொடுத்து மொத்தம் 4,030 கோடி ரூபாயைப் பிணையாக

இந்தத் துறை இப்பொழுது கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அது, விளம்பரப் புரட்சி என்றால், இது அமைதிப் புரட்சி. அவர்கள் விளம்பரத்தைத் தேடினார்கள். இந்த 4,000 கோடி ரூபாயை இந்தப் பெண்களுக்குக் கொடுத்திருப்பது யாருக்கும் தெரியாது. அவர்களுக்கு மட்டும் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேடையிலே கொடுக்கிறபோது, தமிழ்நாடு முழுவதும் தெரியும், தொலைக்காட்சி எங்கெல்லாம் பார்க்கிறோமோ அங்கெல்லாம் தெரியும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக இப்பொழுது, சின்ன தொழில் முனைவோர்களாக மாறுகின்ற சுய உதவிக் குழுப் பெண்கள் உருவாக்குகின்ற பொருட்கள், சந்தையிலே விலைமதிப்புள்ள பொருட்களாக இருக்க வேண்டும்; அப்படிச் சந்தையிலே, விலைமதிப்புள்ள பொருட்களாக உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு வணிக முத்திரை தேவைப்படுகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில், 'மதி பஜார்' என்ற வணிக முத்திரையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு கிராமத்தில், ஓர் ஊராட்சியில், ஒரே பணி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இப்பொழுது, மண்பாண்டம் செய்கின்ற பணி இருக்கிறது என்று சொன்னால், அந்த ஊராட்சியிலே இருக்கின்ற சுய உதவிக் குழுப் பெண்களை ஒன்று சேர்த்து, கிளஸ்டர் முறையிலே, அந்த ஊராட்சியிலே ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அவர்கள் ஒட்டுமொத்தமாக, கூட்டாக, அந்தப் பொருளை உருவாக்கி, அந்தப் பொருளை விற்பனை செய்வதற்குரிய இடங்களையும் அரசு தேர்வு செய்து கொடுக்கிறது. முன்பு, மாவட்ட அளவில்தான் இருந்தது. இப்பொழுது மாநில அளவில் உருவாக்கிக் கொடுத்து, அந்தப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய நிலையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதோடுமட்டுல்ல; இந்த சுய உதவிக் குழுக்கள் உருவாக்குகின்ற பொருட்களை வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் ஆர்வமுடன் வாங்கிக் கொள்கிறார்கள். வெளிநாட்டுக்காரர்கள் வாங்குவதற்காக Internet மூலமாக இதைத் தெரியப்படுத்துவதற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.



அதோடு, அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக 'College Bazaar'. கல்லூரிக்குப் போனீர்கள் என்றால், அங்கு படிக்கும் மாணவர்கள் சந்தோசமாக இருப்பார்கள். அங்கு போனீர்கள் என்றால் ஏதோ ஒரு பொருள் வாங்குவார்கள். இந்த சுய உதவிக் குழுப் பெண்கள் கொண்டு வந்திருக்கின்ற அந்தப் பொருட்களை விரைவாக விற்பனை செய்வதற்காக, நம்முடைய துறை அலுவலர்கள், கல்லூரியிலே முகாமிட்டு, அங்கே stall வைத்தார்கள். Stall வைத்த இரண்டே நாட்களில், கொண்டு சென்ற பொருட்கள் முழுவதும் விற்றுத் தீர்ந்துவிட்டன. அப்படி விற்கின்ற பொருட்களை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக, புரட்சி தலைவி அம்மா அரசு 100 'College Bazaar'–களை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவை போன்றவையெல்லாம் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை. இந்த ஆட்சியில் நடக்கிறது. இது அமைதி. அமைதியாக நடக்கிறது. இதற்கு ஆரவாரம் இல்லை. ஆனால், சுய உதவிக் குழுப் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்களுடைய வருவாய் இரட்டிப்பாகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதியான புரட்சி நடக்கட்டும். அது, எங்களுக்கும் கொஞ்சம் தெரிகிற மாதிரி நடக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்தால் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் சுய உதவிக் குழுவில் உறுப்பினரா? இல்லையா? என்பது அவர்களுக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் உலக வங்கியிடமிருந்து 715 கோடி ரூபாய் நிதியைப் பெற்று, 'புது வாழ்வு' என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, தமிழ்நாட்டிலே இருக்கின்ற வறுமைக் கோட்டிலே வாழுகின்ற படித்த இளைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், விதவையானவர்களை, வாழ்க்கையிலே மிகவும் துயரப்பட்டவர்களைக் கைதூக்கி விட வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'புது வாழ்வுத்' திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள். இப்பொழுது, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பு, 950 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, கிட்டத்தட்ட 25,000 இளைஞர்கள், தொழிற்பயிற்சியைக் கற்று, பல்வேறு இடங்களில் வேலைக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கடந்த ஆட்சியில் இது போன்ற திட்டங்கள் வருகிறது என்று சொன்னால், அதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பணியில் இந்தப் பயிற்சி கொடுக்கக்கூடிய agencies பயிற்சி முடித்த பின்பு 80 விழுக்காடு அளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்ற நேரத்தில் அவர்கள் குறைந்தது 4,000/– ரூபாயாவது சம்பளம் வாங்க வேண்டும். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல, 4,000/– ரூபாய். அப்படிச் செய்தால்தான் agencies–க்குக் கொடுக்க வேண்டிய நிதியை விடுவிக்க முடியும் என்று ஒரு agreement போட்டு, இப்பொழுது இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல; இந்தத் திட்டத்தைப் பார்த்து, இந்தத் திட்டத்தினுடைய செயல்பாடுகளைப் பார்த்து, மத்திய அரசு, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த புது வாழ்வுத் திட்டத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், என்னென்ன என்பதை ஆய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையில், இது ஒரு மாநிலத்தில் மட்டும் இருந்தால்



போதாது, இந்திய துணைக் கண்டத்தின் அளவிலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல்திட்டங்களை வகுத்து, ஊரக தேசிய வாழ்வாதாரத் திட்டம் என்று ஒரு திட்டத்தை உருவாக்கி, 3,000 கோடி ரூபாய், அதிலே நமக்கு 25 விழுக்காடு இருக்கிறது. 3,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் 25 விழுக்காடு 750 கோடி ரூபாய், அதை மாநில அரசு நிதியாகக் கொடுக்க இருக்கிறோம். இந்தத் திட்டம் கிட்டத்தட்ட 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது 120 ஒன்றியங்களில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது இல்லாத மற்ற ஊராட்சிகளில், ஒன்றியங்களில் இனிமேல் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

மன நோயினால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகள், பெண்கள் மேம்பட வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கையைப் பார்த்து ஜப்பானில் இருக்கின்ற ஒரு சமூக அமைப்பு, மானியமாக 13.6 கோடி ரூபாய் புரட்சித் தலைவியினுடைய அரசிற்குக் கொடுத்திருக்கிறது. மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்கின்ற செயல்பாட்டை அறிந்து ஜப்பானில் இருக்கின்றவர்கள் இங்கே நிதி கொடுக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய திட்டம்? அயல் நாட்டினரும் நிதி கொடுத்து, இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதோடு நம்முடைய ஊராட்சி, ஒன்றியம் ஆகிய பகுதிகளில் 1,03,204 கிலோ மீட்டர் ஒன்றியங்களில், ஊராட்சி சாலைகள் இருக்கின்றன. இந்தச் சாலைகள் முழுவதும் 63,000 கிலோ மீட்டர் தார்ச் சாலைகளாகவும், 14,350 கிலோ மீட்டர் சரளைச் சாலைகளாகவும், 25,500 கிலோ மீட்டர் மண் சாலைகளாகவும் இருக்கின்றன. இந்தச் சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த பத்து மாதங்களில் மட்டும், 2,810 கிலோ மீட்டர் சாலைகள் 550 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி நம்முடைய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இந்த நிதியாண்டில் 60 விழுக்காடுகள் பணி செய்யப்பட்டது என்பதற்காக அந்தத் துறையினுடைய மத்திய அமைச்சர் 98.2 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தார்களோ, அதேபோல ஊராட்சி சாலைகள், ஏற்கெனவே கொடுக்கப்பட்ட 143 கோடி ரூபாயைச் செலவு செய்ததன் காரணமாக நபார்டு இதைப் பாராட்டி மேலும் 315 கோடி ரூபாய், இரண்டு மடங்காக உயர்த்தி, புரட்சித் தலைவியினுடைய அரசிற்குக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல "தானே" புயல். ஊர் உலகுக்கு எல்லாமே தெரியும். இதில் எவ்வளவு வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் மோகன்ராஜ், சேலம் சட்டமன்ற உறுப்பினர் இப்போது இங்கு இல்லை. அவர் "தானே" புயல் பற்றிச் சொல்கின்றபோது, பசிக்கின்றவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று சொன்னார். அந்தப் புயலால் பாதிக்கப்பட்டபோது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள்ளாக, அந்தச் சாலைகள் சீர் செய்யப்பட்டன. நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விட்டு ஊருக்குச் செல்கிறார். அவர் ஊருக்குச் செல்கிறார். போகின்ற வழியில் "தானே" புயலினால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்துவிட்டுச் செல்கிறார். அவர் ஊருக்குச் செல்கிறார். போகின்ற வழியில் இவர்களைப் பற்றி ஓர் அறிக்கை கொடுத்துவிட்டுச் செல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

பிற்பகல் 3–00

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காகத்தான் போகிறேன் என்று முறையாக அறிவிப்பு தந்துவிட்டுத்தான் போயிருக்கிறாரே தவிர, அவர் சொல்வதுபோல உள்நோக்கத்தோடு சென்றார் என்று சொல்வது தவறானது. எனவே, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார், நீங்களும் விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகத் திருவாரூருக்குப் போகிறார். அவர் உண்மையிலேயே "தானே" புயலால் பாதிக்கப்பட்டோரைப் பார்க்கப் போயிருந்தால், விருத்தாசலம் வழியாகப் போகலாம், சேத்தியாத்தோப்பு வழியாகப் போகலாம், பண்ருட்டி வழியாகப் போகலாம். இவர் கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகப் போய்விட்டு, "தானே" புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை நான் பார்த்தேன் என்கிறார். அவருடைய நண்பர் தென்னன் படத் திறப்புவிழாவிற்குத்தான் சென்றார். அதோடு இதற்கும் விளம்பரம் தேடிக் கொண்டார்; அவ்வளவுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** தி.மு. கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஹெலிகாப்டரில் போகவில்லை; காரிலேதான் போய் இருக்கிறார். எந்த வழியாகப் போனால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டரில் போவது, சாலையில் போவது என்பது முக்கியமல்ல. செல்கின்ற தலைவர் எந்த மன நிலையோடு செல்கிறார் என்பதுதான் முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நிலையில் அவர்கள் செல்கிறார்கள், அவர்கள் எவ்வளவு மனச்சுமையோடு செல்கிறார்கள், எதைப் பார்த்து எப்படிச் செய்யலாம் என்று செல்கிறார்கள் என்பதுதான் முக்கியம். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** நான் பேசி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே அவர் கருத்துக்கு விட்டால்கூட, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எவ்வளவு துரிதமாகச் செயல்பட்டிருக்கிறது? சூறைக் காற்று கிட்டத்தட்ட 140 கிலோ மீட்டர் வேகத்தில், 7 மணி நேரம் அடித்திருக்கிறது; ஒரு மணி, 2 மணி அல்ல. 140 கிலோ மீட்டர் வேகத்தில் 7 மணி நேரத்தில் அடித்த அந்த சூறைக்காற்றால் சாலையில் இருந்த அத்தனை மரங்களும் வேரோடு சாய்ந்து முறிந்து விழுந்தன. சாலை எங்கிருக்கிறது, நிலம் எங்கிருக்கிறது என்று தெரியாத நிலைமை. அவ்வளவு மோசமான அந்தச் சாலையை, இவருடைய தந்தை, முன்னாள் முதலமைச்சர் செல்வதற்கு 24 மணி நேரத்திற்குள்ளாக சீர் செய்திருக்கின்ற அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் செல்ல வேண்டுமென்பதற்காக அந்தச் சாலையைச் சீர் செய்தார்கள், இவரும் சென்றார். செல்கின்ற வழியில் இறங்கிப் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார், அவ்வளவுதான்.

அதேபோலத்தான் இன்னொரு தலைவர். அவர் சென்றார், வென்றார் என்பதைப்போல, சென்றார்—அவர்கள் கோபப்படுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் சொன்னதுபோல, போய் 6 புடவையைக் கொடுத்தார், 6 வேட்டியைக் கொடுத்தார், 6 பேரை அடித்தார், முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார். நான் கேட்கிறேன், மக்கள் சக்தியுள்ள தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற இவர்கள், இரண்டு செய்திகளைப் பத்திரிகைகளில் சொல்லிவிட்டு, தொலைக்காட்சியில் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதற்குப் பின்பாக அங்கே என்ன நடந்தது என்று முன்னாள் முதலமைச்சர் எதையாவது பார்த்தாரா அல்லது எதிர்க்கட்சித் தலைவர் எதையாவது பார்த்தாரா? இந்த இரண்டு செய்திகளைத் தவிர, “தானே” புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன உதவி செய்தீர்கள்? ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாலைகளை மேம்படுத்திய அதேநேரத்தில், 48 மணி நேரத்திற்குள்ளாக பாதிக்கப்பட்ட எல்லோருக்கும், புயலுக்கு முன்பாக எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்ததோ அவ்வளவு குடிதண்ணீரை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி வழங்க முடிந்தது? ஆளுமைத் திறமைமிக்க



ஒரு முதல்வர் இருந்தால் மட்டுமே இதை நிச்சயமாக வழங்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோராலும் முடியாது. அமெரிக்காவிலேகூட புயல் அடித்தது, ஒன்றும் செய்ய முடியவில்லை. ஜப்பான், சுறுசுறுப்புக்குப் பெயர்போன ஒரு நாடு. அங்கே சுனாமி வந்தது. ஓராண்டு முடிந்த பின்புதான் அது சகஜ நிலைக்கு வந்திருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசால் 48 மணி நேரத்தில் எப்படி செய்ய முடிந்தது என்று பார்க்க வேண்டும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் துறையினுடைய அலுவலர்கள், அதாவது எங்களுடைய துறையில் உள்ள ஊராட்சி, நகராட்சி இரண்டு செயலாளர்களையும் அழைத்தார்கள், துறை அலுவலர்களை அழைத்தார்கள், உடனடியாக நீர் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக துறை அலுவலர்கள், அரசு அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து தமிழ்நாட்டில் எங்கெங்கே எத்தனை ஜெனரேட்டர்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, எல்லா ஜெனரேட்டர்களையும் அங்கே கொண்டு போய்விட்டோம். எல்லா ஜெனரேட்டர்களையும் கொண்டுபோய்விட்டு, எங்கெங்கெல்லாம் நுழைய முடியாதோ, அங்கே ஆளை வைத்து எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொன்னோம். ஆளை வைத்து எடுத்துக்கொண்டு போய், current supply செய், பிளக்கை மாட்டு, current கொடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்று என்று கட்டளைகள் உடனுக்குடன் பிறப்பிக்கப்பட்டு, தண்ணீர் கொடுத்துவிட்டோம். இதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால், 48 மணி நேரம், இந்த வேலையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை நாங்கள் ஆதாரத்தோடு சொல்கிறோம். 666 ஜெனரேட்டர்கள் மற்றும் 529 டாங்க் லாரிகள் பயன்படுத்தப்பட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி செயலாளர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். ஐயா, நம்முடைய மெட்ரோ வாட்டரிலிருந்து இத்தனை லாரிகளில் தண்ணீர் செல்கிறது; ஆனால், வழியில் இருக்கக்கூடிய கிராம மக்கள் அந்த லாரிகளை வழி மறிக்கிறார்கள். எனவே, தயவுசெய்து இதனை உரிய மக்களுக்குக் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்கிறார். உடனடியாக அங்கு இருக்கக்கூடிய மெட்ரோ வாட்டர் கண்காணிப்பாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டோம்.

சென்னை மெட்ரோ வாட்டரிலிருந்து பல நூறு வண்டிகளில் அங்கே தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதுபோல், தமிழ்நாட்டில் எங்கெங்கு லாரிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இருந்து லாரிகள் அங்கே வரவழைக்கப்பட்டன.

*பிற்பகல் 3–05*

அதுபோல், மிஷின்ஷா என்ற இயந்திரத்தினைக்கொண்டு விழுந்துகிடந்த நூற்றுக்கணக்கான மரங்களையும் வெட்டி வெளியே கொண்டு வந்துவிட்டோம். அதுபோல் மின்சாரம், ஒரே வாரத்தில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. 10,000 மின் ஊழியர்கள் இந்தப் பணிகளைக் கவனிப்பதற்காக அங்கேயே தங்கியிருந்தார்கள். ஒருவர், இருவர் அல்ல, 10,000 ஊழியர்கள். அவர்களைத் தவிர உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த 10,000 ஊழியர்களும் இருந்தனர். அவர்களுக்கு யார் சாப்பாடு போடுவது? இவர்களை எங்கு தங்க வைக்க வேண்டும்? இவர்கள் எல்லாம் இப்போது பேசுகிறார்களே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஏதாவது அன்று கேட்டார்களா? எதிர்க்கட்சித் தலைவர் ஏதேனும் கேட்டாரா? ஏதோ பத்திரிகையில் வருவதற்காகப் பெயர் சொல்லிவிட்டார் அந்தச் சட்டமன்ற உறுப்பினர். இவர்களுக்கு இருக்க இடம், உண்ண உணவு, கழிப்பிட வசதி போன்றவை செய்து கொடுத்து, போர்க்கால அடிப்படையில் சரியாக ஒரு வார காலத்திற்குள்ளாக எல்லா நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், கிராமப்புறங்களுக்கும் வீடுகளுக்கும் மின் வசதி செய்து கொடுக்கப்பட்டன. *(மேசையைத் தட்டும் ஒலி)* மூன்று வேலைகள் முடிந்துவிட்டன. சாலைகளைச் சரிசெய்துவிட்டோம், தண்ணீர் கொடுத்துவிட்டோம், வீடுகளுக்கு மின்சாரம் வழங்கிவிட்டோம். இந்த மூன்று முக்கியமான வேலைகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. அடுத்தது என்ன என்று பார்த்தால், விவசாயத்தை நம்பியுள்ள அந்தப் பகுதியில் சூறைக்காற்று அடித்துள்ளது. 140 கி.மீ. வேகத்தில் காற்று அடித்து அனைத்து மரங்களையும் சாய்த்துவிட்டது. அதற்கேற்றவாறு கடுமையான மழை பெய்ததா என்றால், மழை பெய்யவில்லை. இந்த 10 நாட்களுக்குள்ளாக இருக்கின்ற பயிர்கள், நெற்பயிர்கள், கரும்பு இவை காய்ந்துவிடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஆய்வுக் கூட்டத்தினை நடத்தி,



கிட்டத்தட்ட 45,850 மின் கம்பங்கள் உடைந்து நாசமாகிவிட்டன. 45,000 மின் கம்பங்களைக் கொண்டுவருவது என்பது சாதாரணமான காரியம் இல்லை. நமது மின் துறை அமைச்சர் அவர்கள் இராஜஸ்தானிலிருந்து அவற்றை வரவழைத்து, 15 நாட்களுக்குள் சீர் செய்து 20 நாட்களில் விவசாயத்திற்குத் தேவையான மின் இணைப்பை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இது எவ்வளவு பெரிய விஷயம்?

இது ஒரு பக்கம், இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஒரு பக்கம், இன்னொரு பக்கம் பாதிக்கப்பட்டவர்கள், வீடு இழந்தவர்கள், குடிசை வீடு இழந்தவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைவருக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இரண்டு நாட்கள் கழித்து ஆய்வு செய்கின்றபோது, அங்குள்ள ஓட்டு வீடுகளும் உடைந்துவிட்டன, சேதமடைந்துவிட்டன என்று சொன்னபோது, அவர்களுக்கும் முழு நிவாரணம் கொடுங்கள் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். ஆனால், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுந்து நின்று பேசுகின்றபோது, தொலைக்காட்சியில் பார்த்தீர்களா, வீட்டின் வெளியிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், எங்களுக்கு நஷ்டஈடு வழங்கவில்லை என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அன்றைக்கே சொன்னதுபோல, மச்சு வீட்டிலே இருக்கின்றவர்கள், மெத்தை வீட்டிலே இருக்கின்றவர்கள்; நமக்கும் இது கிடைக்குமா என்று நான்கைந்து பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவ்வளவுதான். ஆக, 45 நாட்களுக்குள், மிகப் பெரிய பாதிப்புக்குள்ளான கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் சகஜ நிலைக்கு வந்திருக்கின்றன. இதை யாரால் செய்யமுடியும் என்று சொன்னால், திறமைமிக்க, மக்களை நேசிக்கின்ற ஒரு மிகப் பெரிய தலைவரால்தான் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதோடு மட்டுமல்லாமல், இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் சொல்லும்போது,

பெண்களுக்கு 33 சதவிகிதம் எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழுந்து, அது என்னுடைய ஆட்சிக் காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார். இருந்தாலும் இதை விரிவாகச் சொல்லவேண்டும் என்பது என்னுடைய கடமை என்கின்ற காரணத்தினால், இதை நான் இங்கே சொல்கிறேன். தி.மு.க. உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் பேசுகையில், 1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கியதாகக் கூறினார். அது முற்றிலும் தவறு. மகளிருக்கான 33 சதவிகித இட ஒதுக்கீடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் வழங்கப்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதுகுறித்து மேலும் சில விவரங்கள்:

"மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமையில் 18–1–1993 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 1992 ஆம் ஆண்டைய 73–வது அரசமைப்பு திருத்தச் சட்டத்திற்கேற்ப 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை நீக்கிவிட்டு, புதிய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை இயற்ற அந்த அமைச்சரவையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்" என்ற செய்தியை இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1994 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில்தான் மகளிருக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நகராட்சி நிருவாகம் மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளில் இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத்



தீர்மானங்களைப் படித்துவிட்டு ஓரளவிற்கு அவர்களைத் திருப்திபடுத்துகின்ற வகையிலே நான் இங்கே பதில் சொல்லியிருக்கின்றேன். அதைத் தொடர்ந்து இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு புதிய அறிவிப்புகளை வாசிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, அவர்களுடைய ஆணையின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை இங்கை நான் வெளியிடுகிறேன்.

**2012–2013 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள குடிநீர்த் திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2011–2012 ஆம் ஆண்டில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 8 குடிநீர்த் திட்டங்களின் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்று கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, தேனி, சிவகங்கை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 63 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 8,134 குடியிருப்புகளிலுள்ள 44.36 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் 1,527.63 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள், 2012–2013 ஆம் ஆண்டில் உரிய நிதி ஆதாரத்துடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தேனி–அல்லிநகரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்**

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த கடலூர், விருத்தாசலம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 26 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 3,593 ஊரகக் குடியிருப்புகளுக்கான கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் 14 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 3,642 ஊரகக் குடியிருப்புகள் மற்றும்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த வல்லம் பேரூராட்சிக்கான காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் பொள்ளாச்சி வடக்கு, தெற்கு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான ஆழியாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரகக் குடியிருப்புகளுக்கான திருமூர்த்தி அணையினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி (பகுதி), கீழப்பாவூர், ஆலங்குளம், மானூர், மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 368 ஊரகக் குடியிருப்புகளுக்கான, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**ஊருணிகளைக் குடிநீர் ஆதாரங்களாக மாற்றும் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 230 ஊருணிகளை ரூபாய் 15.88 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



**2012–2013 ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டில் எப்படி 8 குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த நிதியாண்டில் செயலாக்கத்திற்கு வருகிறதோ அதைப்போன்று, 2012–2013 ஆம் நிதியாண்டில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், பூலுவபட்டி, தென்கரை, வேடப்பட்டி, தாளியூர், ஆலாந்துறை, பேரூர் ஆகிய 7 பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 குடியிருப்புகள் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பிற்பகல் 3–15

திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம் மற்றும் காங்கேயம் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள 1,262 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 2.84 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகளுக்குக் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு சுமார் 92,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேரூராட்சிகள் மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம் ஆகிய 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,153 ஊராட்சிக் குடியிருப்புகளுக்குக் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 7 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த அந்தநல்லூர், மணிகண்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 303 ஊரகக் குடியிருப்புகளுக்குக் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலகுண்டு, சாணார்பட்டி, நத்தம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல், ரெட்டியார்சத்திரம் மற்றும் பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,062 குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 5.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**மனிதவள மேம்பாடு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 44.36 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 1,527.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 குடிநீர்த் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், 17.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை முடுக்கிவிடவும் ஏதுவாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2012–2013 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 69 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 73 இளநிலை வரைவு அலுவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புதிய சீருந்துகள் மற்றும் ஜீப்புகள் வழங்குதல்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், 8 மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 67 நகர பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் இத்திட்டங்களை சீரிய முறையில் கண்காணித்து, விரைந்து முடிக்க ஏதுவாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் பணியாளர்களுக்கு 5 புதிய சீருந்துகள் மற்றும் 25 புதிய ஜீப்புகள் வழங்கப்படும்.



**சென்னை நகரத்திற்குக் கூடுதல் நிதியாதாரம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி புதியதாக அமைக்கப்படவுள்ள கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீரைக் கொண்டுவர, சுமார் ரூ. 165 கோடி திட்ட மதிப்பீட்டில் 40 கி.மீ. நீளத்திற்குக் குழாயினைப் பதிக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாதவரம் பகுதிக்குக் குடிநீர்த் திட்டம்**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆணைப்படி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியான மாதவரம் பகுதிக்கு முழுமையான குடிநீர்த் திட்டம், சுமார் ரூ. 55 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

**சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டம்**

சென்னை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வசதியை மேம்படுத்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் முன்னுரிமை அடிப்படையில் பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. மணலி, சின்னசேக்காடு, புழல், நந்தம்பாக்கம், மீனம்பாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, சோழிங்கநல்லூர், நொளம்பூர், ராமாபுரம், முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மடிப்பாக்கம், மாத்தூர், இடையஞ்சாவடி, சடையன்குப்பன், தீயம்பாக்கம், காரம்பாக்கம், வடபெரும்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், ஜல்லடம்பேட்டை, செம்மஞ்சேரி, உத்தண்டி, கடப்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய 32 பகுதிகளுக்குக் குடிநீர் வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, முழுமையான குடிநீர்த் திட்டம் ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 3–20*

**சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி**

சென்னை மாநகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், கழிவுநீர் அகற்றும் வசதி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது. சென்னை மாநகருடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள, கத்திவாக்கம், நந்தம்பாக்கம், மணப்பாக்கம், நொளம்பூர், நெற்குன்றம், ராமாபுரம், முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மடிப்பாக்கம், மணலி, சின்ன சேக்காடு, புழல், மீனம்பாக்கம், சோழிங்கநல்லூர், மாத்தூர், இடையஞ்சாவடி, சடையன்குப்பம், தீயம்பாக்கம், காரம்பாக்கம், வடபெரும்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், ஜல்லடம்பேட்டை, செம்மஞ்சேரி, உத்தண்டி, கடப்பாக்கம் ஆகிய 32 பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி, ரூபாய் 1,300 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு புதிய அலுவலகங்கள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, சென்னை மாநகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தரமான சேவைகள் அளிக்கும்பொருட்டு, இப்பகுதிகளில் 7 பகுதி அலுவலகங்களுக்கும், 93 பணிமனைகளுக்கும் மொத்தம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் கட்டப்படும்.

**நீர் ஆதாரத்தைக் கண்காணிக்கும் அமைப்பை நிறுவுதல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, பூண்டி, சோழவரம்,



செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஆகிய நீர் ஆதாரங்களிலிருந்து பெறப்படும் குடிநீர் மற்றும் தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் பெறப்படும் கிருஷ்ணா நீர், சென்னை மாநகரம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளுக்குப் பல்வேறு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து வழங்கப்படும் நீரின் அளவு ஆகியவற்றை நேரடி தகவல் அறியும் மற்றும் மேட்ரிசஸ் காட்சி அமைப்பின்மூலம் கண்காணிக்கும் அமைப்பு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய அலுவலகத்தில், ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**கழிவு நீரேற்று நிலையங்களில் கைபேசி கண்காணிக்கும் அமைப்பு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரைப்படி, 170 கழிவு நீரேற்று நிலையங்களில் அமைந்துள்ள கழிவுநீர் சேகரிக்கும் கிணற்றில் உள்ள கழிவு நீரின் அளவினைக் கண்காணிக்கவும், கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள ஒப்பந்த ஊழியர்களின் வருகையைக் கண்காணிப்பதற்கும், ரூபாய் 69.33 இலட்சம் மதிப்பீட்டில் கைபேசி கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் பயோமெட்ரிக் (biometric) உறுதிப்படுத்தும் முறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயல்படுத்தப்படும்.

**ஒரே சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலைக் குறியீடுகள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டங்களின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சாலைப் பணிகளுக்காக கணிசமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 9 மாநகராட்சிகள் மற்றும் 125 நகராட்சிகளில் பிரதான சாலைகளில் சீராக ஒளிரும் சாலைக் குறியீடுகள், சரியான முறையில் தெரியக்கூடியதாகவும், தெருக்களின் பெயர்கள் அதற்கான வழிக்குறியீடுகள், எச்சரிக்கை, கட்டாயக் குறியீடுகள், இடம் குறித்த குறியீடுகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிக் குறியீடுகள் ஆகியன அமைக்கப்படும்.

**மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்**

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் சுற்றுச்சூழல் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்க்கும்பொருட்டு, பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, நடப்பாண்டில், போடிநாயக்கனூர், சிதம்பரம், ஓசூர், மேட்டூர், கொமாரபாளையம், இராசிபுரம், பெரியகுளம், காரைக்குடி, இராமேஸ்வரம், கொடைக்கானல், பழனி, சத்தியமங்கலம், பவானி, பொள்ளாச்சி, பெரம்பலூர், அரியலூர், சாத்தூர், நாகர்கோவில், திருப்பத்தூர், அரக்கோணம், ஜோலார்பேட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகள் ஆகிய 22 நகரங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் நிதியாதாரங்களைக் கொண்டும், சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சியின் பங்களிப்புடனும், ரூபாய் 2,355 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சேலம் மாநகராட்சியில் புதிய மீன் விற்பனை நிலையம் அமைத்தல்**

தற்பொழுது சேலம் மாநகராட்சியில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள மீன் விற்பனை நிலையத்தை அப்புறப்படுத்தி, ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் புதிய மீன் விற்பனை நிலையம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாநகராட்சி/நகராட்சிகளுக்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, போதிய இடவசதி மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வரும் சில மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக சேலம் மாநகராட்சி மற்றும் ஓசூர், மறைமலைநகர், கொடைக்கானல், சங்கரன்கோவில், திருச்செங்கோடு, இராணிப்பேட்டை, தேனி–அல்லிநகரம், தருமபுரி, துறையூர் மற்றும் பரமக்குடி ஆகிய 10 நகராட்சிகளில் ரூபாய் 37 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.



பிற்பகல் 3–25

**ஒருங்கிணைந்த ஊருணி மேம்பாட்டுத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவினுடைய ஆணைக்கிணங்க, 143 பேரூராட்சிகளில் 234 ஊருணிகள், ரூபாய் 54.32 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இப்பணி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிமூலம் மேற்கொள்ளப்படும். ஊருணிகளில் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல், ஊருணிகளுக்குள் சிறிய குட்டை அமைத்தல், நீர்வரத்து வாய்க்கால் மற்றும் உபரி நீர் வெளியேறும் வாய்க்கால் சீரமைத்தல், நடைபாதையமைத்தல், மின் விளக்கு வசதி ஏற்படுத்துதல் மற்றும் ஊருணிகளின் பாதுகாப்பிற்காக வேலியமைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும். இதன்மூலம், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதுடன், ஊருணிகள் அசுத்தமாவதிலிருந்தும், ஆக்கிரமிப்புகளிலிருந்தும் பாதுகாக்கப்படும்.

**புவி தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதித்தல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, பேரூராட்சிகளிலுள்ள அனைத்துச் சொத்துகளையும், உரிய மதிப்பீடு செய்து வரி நிர்ணயிப்பதற்கு ஏதுவாக, புவி தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதிக்கும் முறை, சோதனை அடிப்படையில், ஒரு பேரூராட்சியில் ரூபாய் 36 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**பேரூராட்சிகளில் பொறியியல் பிரிவை வலுப்படுத்துதல்**

தமிழ்நாட்டில் 529 பேரூராட்சிகள் உள்ளன. 2011–2012 ஆம் ஆண்டு பேரூராட்சிகள் துறையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள்மூலம், ரூபாய் 665.64 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பல்வேறு நிலைகளில் போதிய எண்ணிக்கையில் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே, பேரூராட்சிகள் துறையில், பொறியியல் பணியமைப்பினை மறுசீரமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, பேரூராட்சிகள் துறையில் ஒரு கண்காணிப்புப் பொறியாளர், 10 செயற்பொறியாளர்கள், 21 உதவி செயற்பொறியாளர்கள், 116 உதவிப் பொறியாளர்கள், 10 வரைவாளர்கள் மற்றும் 279 மேற்பார்வையாளர்கள் ஆக மொத்தம் 437 பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும்.

**பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்**

அனைத்துப் பேரூராட்சிகளிலும் படிப்படியாக பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 2012–2013 ஆம் ஆண்டு, மாமல்லபுரம் விரிவாக்கப் பகுதி, திருப்போரூர், பொன்னேரி, ஆலங்காயம், செங்கம், பெண்ணாகரம், காவேரிப்பட்டினம், ஜலகண்டபுரம், ஆலம்பாளையம், பெருந்துறை, குன்னத்தூர், பெரிய நாயக்கன்பாளையம், பெண்ணாடம், உளுந்தூர்பேட்டை, வல்லம், வேளாங்கண்ணி, நீடாமங்கலம், மண்ணச்சநல்லூர், குரும்பலூர், ஆயக்குடி, தமிழ்நாடு காகித ஆலை புகளூர், பரவை, பழனிச்செட்டிப்பட்டி, முதுகுளத்தூர், கானாடுகாத்தான், சேத்தூர், சாம்பவார்வடகரை மற்றும் ஆழ்வார்திருநகரி ஆகிய பேரூராட்சிகளில் ரூபாய் 755.98 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்**

தமிழ்நாட்டிலுள்ள 529 பேரூராட்சிகளில் பெரும்பாலான பேரூராட்சிகள் மிகவும் பழமையான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, பேரூராட்சிகளுக்குப் படிப்படியாக புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 2012–2013 ஆம் ஆண்டில் பெண்ணாத்தூர், பனமரத்துப்பட்டி, அரகண்டநல்லூர், பண்ணைக்காடு, செட்டிப்பாளையம், பள்ளப்பாளையம், பெருந்துறை, வெங்கம்பூர், கமுதி, சாயல்குடி, களக்காடு, திருக்குறுங்குடி, பத்தமடை, திசையன்விளை மற்றும் ஆரல்வாய்மொழி ஆகிய 15 பேரூராட்சிகளில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும். அதேபோல,



திருநெல்வேலி மண்டலப் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

**இருபத்து நான்கு மணி நேர அவசரப் பேறுகால கவனிப்பு மருத்துவமனைகளில் தீவிர சிசு கண்காணிப்புப் பிரிவுகள் அமைத்தல்**

சென்னை மாநகராட்சியின் 24 மணி நேர அவசரப் பேறு கால கவனிப்பு மருத்துவமனைகளில் ஆண்டு ஒன்றிற்கு 18,000 சிசுக்கள் பிறக்கின்றன. குறைந்த எடை, குறைமாதத்தில் பிறக்கும் சிசுக்கள் மற்றும் பிறப்பின்போது ஏற்படும் மூச்சுத்திணறல் போன்ற உடல்நலம் குன்றிய சிசுக்களின் உடனடியான பராமரிப்புக்கு, உட்கட்டமைப்பு, நவீன உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய தீவிர சிசு கவனிப்புப் பிரிவுகள் தொடங்குவது அவசியத் தேவையாகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரில் பதினாறு 24 மணி நேர அவசரப் பேறுகால கவனிப்பு மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் ஒரு தீவிர சிசு கண்காணிப்புப் பிரிவு, மொத்தம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமல்படுத்தப்படும். இதன்மூலம் பச்சிளங்குழந்தை இறப்பு விகிதம் கணிசமாகக் குறையும்.

பிற்பகல் 3–30

**தெரு விளக்குகளின் எரிசக்தித் திறன் சேமிப்பு நடவடிக்கைகள்**

நகரங்களில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்குகளைக் குறைந்த மின் சக்தியில் ஒளிரும் விளக்குகளாக மாற்றுவது குறித்தும், தெரு விளக்குகளுக்கு மாற்று எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது குறித்தும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன்படி, சோதனை முறையில் 9 மாநகராட்சிகள், திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களிலுள்ள 35 நகராட்சிகள் மற்றும் 101 பேரூராட்சிகளில் தற்பொழுது பயன்பாட்டிலுள்ள குழல் விளக்குகளுக்குப் (FTL's) பதிலாக எல்.இ.டி. (LED) போன்ற ஆற்றல் மிக்க மின் விளக்குகள் மற்றும் சூரியசக்தி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல்**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்காகச் செலவிடப்படும் தொகை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த வருவாயில் 49 சதவீதத்திற்கு மிகக் கூடாது என்ற அரசு ஆணை நடைமுறையில் உள்ளது. இதனால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அத்தியாவசியமான பணியிடங்களை நிரப்ப இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. புதிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் தொய்வு ஏற்படுகிறது. மேலும், திடக்கழிவு மேலாண்மை, பொதுச் சுகாதாரம் போன்ற பணிகளும் பாதிக்கப்படுகின்றன. இதனை நிவர்த்திக்கும்பொருட்டு, மேற்படி ஆணையைத் தளர்த்தி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள 12,197 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான "மாண்புமிகு முதலமைச்சர் விருது"**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வழங்கும் சேவைகளின் தரம் உயர, அவற்றுக்கிடையே ஆக்கபூர்வமான தூண்டுதலும், போட்டியும் இருப்பது அவசியம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். சிறந்த சேவைகள் வழங்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது" வழங்கப்படும். அதன்படி சிறந்த ஒரு மாநகராட்சிக்கு ரூபாய் 25 இலட்சம், முதல் மூன்று நகராட்சிகளுக்கு முறையே, ரூபாய் 15 இலட்சம், ரூபாய் 10 இலட்சம் மற்றும் ரூபாய் 5 இலட்சம் மற்றும் முதல் மூன்று பேரூராட்சிகளுக்கு முறையே ரூபாய் 10 இலட்சம், ரூபாய் 5 இலட்சம் மற்றும் ரூபாய் 3 இலட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்கவும், நல்லாசியோடும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அறிவிப்புகள், 2012–2013**

**கிராமப்புற சுகாதார மேம்பாடு**

**ஆண்கள் சுகாதார வளாகம்**

கிராமப்புற சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டுவரும் இந்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மகளிருக்கான சுகாதார வளாகங்கள் அமைத்து மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் பேணுவதைப் போல, ஆண்கள் மற்றும் இளம் சிறார்களுக்காகவும் தனியாக சுகாதார வளாகம் அமைத்திட, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு என்ற வீதம் 770 கிராம ஊராட்சிகளில் ஆண்கள் சுகாதார வளாகங்கள் (Integrated Men Sanitary Complexes–IMSC) அமைக்கப்படும். இத்திட்டத்திற்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச் சாலை அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வகையில், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு 2012–2013 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்மூலம் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 700 கி.மீ. நிளத்திற்கு தார்ச் சாலைகள் அமைக்கப்படும்.

**அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அடையாள அட்டை வழங்குதல்**

தமிழ்நாட்டில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,19,399 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அடையாள அட்டை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி ஊராட்சிமன்றத் தலைவர்கள் 12,524, ஊராட்சி உறுப்பினர்கள் 99,333, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் 385, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் 6,471, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் 31 மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் 655 ஆகியோருக்கு அடையாள அட்டை இந்த ஆண்டு வழங்கப்படும்.

**அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளித்தல்**

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் ஊராட்சி நிருவாகம் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை குறித்து பயிற்சிகள் அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கென 10.71 கோடி ரூபாய் இந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும்.

**ஊரகக் கட்டடப் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம்**

ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் குடிநீர் சீராக வழங்க ஏதுவாக பழுதடைந்த அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பணிகளுக்காக 2012–2013 ஆம் நிதியாண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு கட்டடம் சுமார் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 புதிய கட்டடங்கள் கட்ட, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு அதற்காக 37.50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கட்டப்படும்.



பிற்பகல் 3–35

**கிராம ஊராட்சிகளுக்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக, 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு கட்டடம் ரூ.8.15 இலட்சம் மதிப்பீட்டில், 350 கட்டடங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 28.53 கோடி ரூபாயில் கட்டப்படும்.

**அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் கணினி மற்றும் அகன்ற அலைக்கற்றை இணைப்பு வசதி**

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் நிருவாகம் சிறந்த முறையில் செயல்பட ஏதுவாக, 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் புதிய கணினி, அச்சுப் பொறி, தடையில்லா மின் விநியோக சாதனம் ஆகியவை வழங்கிடவும், அகன்ற அலைக்கற்றை இணைப்பு வசதி செய்து தரவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக 2012–2013 ஆம் ஆண்டில் 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**சாலைகள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நபார்டு ஊரக உள்கட்டமைப்பு நிதியின்கீழ் 1,729 கி.மீ. நீளமுள்ள 637 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 315 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் 5,200 கி.மீ. நீளமுள்ள மண் மற்றும் சரளைச் சாலைகள் அனைத்துப் பருவ காலத்திற்கும் ஏற்றவையாக 639 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்படும்.

**ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் சொத்துகளைப் பராமரித்திடவும், அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகளை அமைத்திடவும், ஊரக உள்கட்டமைப்புத்

திட்டத்தின்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**ஊரகப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களைச் சீரமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் உள்ள மிகவும் பழுதடைந்த 9,197 அங்கன்வாடி மையங்கள் 2012–2013 ஆம் ஆண்டில் 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் 33 கோடி மனித உழைப்பு நாட்கள் ஏற்படுத்தப்பட்டு 3,000 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளதை அங்கீகரிக்கும் வகையில் 2012–2013 ஆம் ஆண்டில் 37.90 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கிட, மதிப்பீட்டு இலக்கு மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 132/– ஊதியமாக வழங்கப்படும் பட்சத்தில் 37.90 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கிட தேவைப்படும் ஒதுக்கீடு சுமார் 5,000 கோடி ரூபாய் ஆகும் என, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை, எளிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் நிலச் சீர்திருத்த திட்டப் பயனாளிகள் ஆகியோர் நிலங்களில் நிலச் சீர்திருத்தப் பணிகள் (Land Development activities), நீராதாரப் பணிகள் (Water harvesting structures) மற்றும் மரக் கன்றுகள் நடுதல் (Plantation) போன்ற பணிகள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்தில் எடுத்துச் செயல்படுத்தப்படும்.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயற்கைக்கோள்மூலம் எடுக்கப்பட்ட படங்களின் உதவியுடன் நீர் நிலைகளின் உண்மையான கொள்ளளவினை அறிந்து ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை முழுமையான கொள்ளளவிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் செயல்பாட்டினை சமூகத் தணிக்கை செய்ய ஏதுவாக தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கம் (Social Audit Society of Tamil Nadu–SASTA) ஏற்படுத்தப்படும்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு வாகன வசதி**

ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் தரமாகவும், உரிய காலத்திலும் நிறைவேற்றிட கள ஆய்வு மேற்கொள்ள ஏதுவாக மாவட்டங்களிலுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு, பழைய வாகனங்களுக்குப் பதிலாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

**முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக 300 சதுர அடி அளவில் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய ஒளி சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், ஐந்தாண்டுகளில் 3 இலட்சம் பசுமை வீடுகள் 5,400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்ற இலக்குடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012 நீ-2013 ஆம் ஆண்டில் 60,000 வீடுகள் 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

பிற்பகல் 3–40

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 200 சதுர அடி அளவிலான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கான அலகுத் தொகை 75,000 ரூபாய் என்றிருந்ததை ஒரு இலட்சம் ரூபாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு 2011–2012 ஆம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. இதில் மத்திய அரசின் பங்குத்தொகை 33,750 ரூபாய் மட்டுமே. மாநில அரசின் பங்குத் தொகை 66,250 ரூபாய் ஆகும். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**'தாய்' திட்டம் (தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்)**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தும் வகையில் 'குக்கிராமத்தினை' அலகாகக் கொண்ட 'தாய் திட்டம்' எனப்படும் தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், தமிழக அரசின் முன்னோடித் திட்டமாக 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2012–2013 ஆம் ஆண்டில் 2,250 கிராம ஊராட்சிகளிலுள்ள 18,581 குக்கிராமங்களில் 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**தன்னிறைவுத் திட்டம்**

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மக்கள் பங்களிப்புடன் உருவாக்கிப் பராமரித்திட ஏதுவாக 'தன்னிறைவுத் திட்டம்' 2011–2012 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**சூரிய சக்திமூலம் இயங்கும் தெரு விளக்குகள்**

மின்சார உபயோகத்தில் சிக்கனம் மற்றும் மாற்று எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு கிராமங்களில் சூரிய ஒளிமூலம் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கும் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் சூரிய சக்திமூலம் இயங்கும் 20,000 தெரு விளக்குகள் அமைத்திட 52.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஒருங்கிணைந்த பள்ளி உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான கூடுதல் கட்டடம், சமையலறை, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் முழுமையாக இருப்பதை உறுதி செய்யவும், அவற்றைச் சீரமைத்திடவும் ஒருங்கிணைந்த பள்ளி உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அலுவலக உபயோகத்திற்காக கணினி மற்றும் அச்சுப் பொறி வழங்கப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ள பணிகளில், அங்கன்வாடிகள் மற்றும் குழந்தைகள் நல மையங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பிற்காக, ஒரு மையத்திறகு ரூ. 10,000 வீதம் 100 மையங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன்கூடிய சுனாமிக்குப் பிந்தைய, நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி குறைந்துவரும் மீன் வளத்தைப் பெருக்கிட திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள நான்கு கடல் பகுதிகளில் Artificial Reef எனப்படும் செயற்கை பவளப் பாறைகள் ஒவ்வொன்றும் 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மீன்பிடித் தொழிலில் சுகாதாரமான முறைகளைக் கையாளவும், மீனவர்களுக்கு உரிய விலை கிடைத்திடவும் ஏதுவாக நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 200 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மீன் இறங்கு தளங்கள் (Fish Landing Centres) அமைக்கப்படும்.

**ஒரு கிராமம் – ஓர் உற்பத்திப் பொருள்**

“ஒரு கிராமம்–ஓர் உற்பத்திப் பொருள்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விவசாயம் சாராத தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு தொழில் தொகுப்புகள் (Clusters) உருவாக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்த நிதியாண்டில் ‘ஒரு கிராமம்–ஓர் உற்பத்திப் பொருள்’ என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து தொழில் தொகுப்புகள் என்ற விகிதத்தில் 150 தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த 6.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் பிரபலப்படுத்துவதற்கும் “கல்லூரிச் சந்தைகள்” (College Bazaar) நடத்துதல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி சுய உதவிக் குழு உற்பத்திப்



பொருட்களை கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்காக கல்லூரிச் சந்தைகள் (College Bazaar) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மூன்று “கல்லூரிச் சந்தைகள்” வீதம் மொத்தம் 100 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படும்.

**மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை வழங்குதல்**

அடையாள அட்டைகள் தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்த நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் அரசு மற்றும் பிற நிறுவனங்களை அணுகி தங்களுக்கான உரிமைகளையும் சேவைகளையும் எளிதாகக் கோரிப் பெற, அவர்களுக்குத் தனி நபர் அடையாள அட்டை வழங்கும் திட்டம் முதன்முறையாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–45

முதற்கட்டமாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படவுள்ள 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்கள் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் 70 வட்டாரங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனி நபர் அடையாள அட்டை வழங்கப்படும்.

**மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்**

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக இதுவரை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்த நிதியாண்டில் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி, தற்போது செயல்பாட்டிலுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சுய உதவிக் குழுப் பொருட்களைச்

சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக, இந்த நிதியாண்டில் 92.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**"மதி பஜார்" – புதிய இணையதளம் உருவாக்குதல்**

"ரூரல் பஜார்" எனும் இணையதளம் 2004 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட உருவாக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்த இணையதளம் புதுப்பிக்கப்பட்டு, "மதி பஜார்" (Mathi Bazaar) என பெயரிடப்படும். இவ்விணையதளம்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும், ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மகளிருக்கு எதிரான சமூக அநீதிகளை எதிர்த்துப் போராடும் சுய உதவிக் குழுக்களுக்கு விருது**

பெண்களுக்கு எதிரான சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளை எதிர்த்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் போராடி வருகின்றன. இவ்வாறு ஒன்றுகூடி சமூக அநீதிகளுக்கு எதிராகச் செயல்படும் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2012–2013 ஆம் நிதியாண்டில் விருது ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 5 குழுக்களுக்கு ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.

**100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருது**

எழுத்தறிவு, பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு இன்றியமையாத காரணியாக விளங்குகிறது. இன்றளவும், ஊரகப் பகுதிகளில் ஏழை மகளிர் எழுத்தறிவும், எண்ணறிவும் இன்றி உள்ளனர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் குழுக்களில் உள்ள கல்வியறிவற்ற மகளிருக்கு கல்வி அறிவு பெற்ற உறுப்பினர்களைக் கொண்டு கற்றுத் தர எடுக்கும் கூட்டு முயற்சி அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கப்படும். இந்த நிதியாண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள அனைத்து சுய உதவிக் குழு



உறுப்பினர்களையும் கற்றவர்களாக உருவாக்கும் கூட்டமைப்புகளுக்கு விருதும், ரொக்கப் பரிசாக 50,000 ரூபாயும் வழங்கப்படும்.

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 4,000 கோடி ரூபாய் வங்கிக் கடன்**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை பல்வேறு வங்கிகள் மூலமாக 15,634 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட உயரிய இலக்கான ரூ. 4,000 கோடியையும் விஞ்சி 4,030 கோடி ரூபாய் கடன் வழங்கி சாதனை எய்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பல்வேறு திட்டங்களின்மூலம் நடப்பாண்டிலும் 4,000 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மகளிர் வருமானம் தரக்கூடிய தொழில்களைத் தொடங்கி பொருளாதார மேம்பாடு அடைவதற்கு வழிவகை செய்யப்படும்.

**சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு தனிப்பட்ட நிறுவன வணிகக் குறியீடு (Brand) உருவாக்குதல்**

பொருட்கள் வாங்கும்போது வாடிக்கையாளர்கள் வணிகக் குறியீட்டிற்கு (Brand) முக்கியத்துவம் கொடுப்பதால், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவது பெரும் சவாலாகவே உள்ளது. வணிகக் குறியீடு மற்றும் கண்கவர் பேக்கேஜிங் ஆகியவை, பொருட்களின் தரத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் வெளிச் சந்தையில் போட்டியிடத் தக்கவகையில், ஒரே மாதிரியான தனித் தன்மையுடன்கூடிய வணிகக் குறியீட்டுச் சின்னம் மற்றும் முத்திரை (Brand Logo & Monogram) உருவாக்கப்பட்டு, பொருட்கள் விற்பனையில் இவ்வாண்டு முதல் பயன்படுத்தப்படும்.

**கிராம அறிவு மையங்கள்**

ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களின் அறிவுத் திறனை வளர்க்கவும், மேம்படுத்தவும், தற்போது செயல்பட்டுவரும்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி "கிராம அறிவு மையங்களாக" உருவாக்கப்படும். இங்கு ஏற்கெனவே துவங்கப்பட்ட கணினி சார்ந்த வசதிகளுடன், அகன்ற அலைவரிசை, இணையப்படக் கருவி, கல்வி தொடர்பான ஒலித்தகடுகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களும் வழங்கப்படும்.

இதன்மூலம் கிராமப்புற மக்கள் மேற்கண்ட தகவல்களைப் பெற்று, தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தில் மேம்பாடு அடைந்திட வழிவகை செய்யப்படும். இந்த மையங்கள் வாயிலாக, இணைய தளத்தை இளைஞர்கள் பயன்படுத்தி, தங்களுக்குத் தேவையான கல்வி சார்ந்த ஆலோசனை மற்றும் வாழ்க்கை வழிகாட்டித் தகவல்களைப் பெற்றிட முடியும். மேலும் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் மற்றும் ஆலோசகர்மூலம் தனிப்பட்ட வழிகாட்டுதலைப் பெற்றிடவும் வழிவகை செய்யப்படும்.

பிற்பகல் 3–50

**ஏழை மகளிர் சுகாதார கண்காணிப்புத் திட்டம்**

ஏழை மக்களை முழுமையாக வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டுவர, மகளிர் சுகாதாரம் பேணுதல் முக்கியமாகும். கடந்த ஆண்டு 2,509 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு எடை பார்க்கும் கருவி வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த நிதியாண்டில் 5.8 இலட்சம் மகளிருக்குச் சுகாதார கண்காணிப்பு அட்டை வழங்கி, சுகாதாரம் குறித்த தகவல்கள் அளித்து ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மகளிரின் எடை, உயரம், இரத்தப்பிரிவு, இரத்த அழுத்தம் ஆகியவை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கப்படும்.

**சமூகப் பங்கேற்புடன் முன்னோடி மனநலத் திட்டம்**

தமிழ்நாடு அரசின் முன்னோடி முயற்சியாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் மறு வாழ்வு சேவைகளை சமூகப் பங்கேற்புடன் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிகளை மேம்படுத்திட, புது வாழ்வுத் திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்படவுள்ளது.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வரும் நிதியாண்டில் திட்ட செயலாகத்தில் உள்ள 2,509 கிராம ஊராட்சிகள் அடங்கிய 16 திட்ட மாவட்டங்களில், ஜப்பான் அரசின் மனித வள மேம்பாட்டு மானியத்துடன் 13.6 கோடி ரூபாய் செலவினத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் பாதுகாப்பிற்காக சுற்றுச் சுவர் அமைத்தல்**

பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சுற்றுச் சுவர் இல்லாத நிலை உள்ளது. அத்தகைய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் பாதுகாப்பிற்காக சுற்றுச் சுவர் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆண்டில் 100 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

**பணியாளர் நலன்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கிராம ஊராட்சி செயலர்களுக்கு மாதாந்திர நிரந்தரப் பயணப்படியாக ரூ.300/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கிராம ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மின்மோட்டார் இயக்குவதற்கு சிறப்புப்படியாக ரூ.200/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் 10 வருடங்களுக்குமேல் பணியாற்றியவர்களில் தொழில்நுட்பத் தகுதியுடையவர்களுக்கு சாலை ஆய்வாளர் நிலை–2 ஆக முறைப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மீதமுள்ள 197 நபர்கள் அவரவர் கல்வித் தகுதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய கீழ்நிலை காலிப் பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர்.

**அலைபேசி வசதி**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அலுவலர், பொறியியல் பிரிவில் பணியாற்றும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் நிலை அலுவலர்கள் அனைவருக்கும் உள்வட்ட உபயோகிப்பாளர் (Closed User Group) முறையில் அலைபேசி வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இந்த இரண்டு துறைகளிலும் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய, செய்யப்படவேண்டிய பணிகளை மிக விரைவாகச் செயல்படுத்துவதற்குரிய திட்டங்களாக இந்த நிதிநிலை அறிக்கையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியத் திட்டமான Vision 2023-இல் சிந்தித்து, 2023 ஆவது ஆண்டில் அனைவருக்கும் 24 மணி நேரமும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற இலட்சியத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் தூய்மையான ஒரு மாநிலமாக வேண்டுமென்ற அவர்களுடைய இலட்சியத்தை ஈடேற்றுகின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிற அந்தக் கனவுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே முதல் அடியை இந்தத் துறை எடுத்து வைக்கிறது. முதல் அடியை எடுத்து வைக்கின்ற இந்த நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்களுக்கும் தேவையான பதில்கள் இதில் இருக்குமென்று கருதுகிறேன். குறை ஏதேனும் இருந்தால் அவற்றை நிறைவு செய்ய அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று உங்களிடத்திலே உறுதிகூறி, தயவுசெய்து கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கியுள்ள நிதியை அரசுக்கு ஒதுக்கித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர்



வாயிலாக பணிந்து கேட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், மணி 3—54 ஆகிவிட்டது. உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பிற்பகல் 3—55

## (அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,698,82,44,000/—, மூலதனக் கணக்கில் ரூ.3,516,06,17,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.209,87,89,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,105,61,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,593,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–4–2012) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

22. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற 4–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./F&F/4/2–6–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து முறையே வரப்பெற்ற 14–3–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–23 மற்றும் 14–3–2011 ஆம் நாளிட்ட எண் தமி.ஒ.ஆ./DC/8–14–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல்/மின் பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகள் மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து முறையே வரப்பெற்ற 28–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/ப.ஆ.மி(MYT)/18–2 மற்றும் 21–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–22–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

25. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற

*18–3–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–25–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*26. காஞ்சிபுரம், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையத்தால் (டான்சில்க்), 2005–2006 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 2–8–2011 ஆம் நாளிட்ட (2டி) 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*27. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*24. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)*

*25. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)*